# இஸ்லாத்தைப் பற்றி இதர மதத்தவர்கள்

தொகுப்பு

மருதூர் ஏ. மஜீத் B.A. (Hons.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு

அன்புடன்

[illegible]

[illegible]

[illegible]

03/3/92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தைப் பற்றி இதர மதத்தவர்கள்

தொகுப்பு:

**புலவர் மருதூர் - ஏ - மஜீத்**

B. A. (Hons) Ceylon. S. L. E. A. S.

வெளியீடு:

மருதூர் வெளியீட்டுப் பணிமனை

சாய்ந்தமருது - 01,

கல்முனை,

சிறிலங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது
மருதூர் வெளியீட்டுப் பணிமனையின் வெளியீடு
டிசம்பர் 1991
இஸ்லாத்தைப் பற்றி
இதர மதத்தவர்கள்
உரிமை:
புலவர் மருதூர் - ஏ - மஜீத்
B. A. (Hons) Ceylon - S. L. E. A. S.
உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்கட்கு.
பதிப்பு:
எவ்சைன் அச்சகம்
சாய்ந்தமருது - 06.
விலை: 57/-

Maruthur Publications
1991 December
Islathi Patti Ithara Mathath thavarkal
(Islam as Seen by Non Islamians)
Copyright: Pulavar Maruthur - A - Majeed
B. A. (Hons) Ceylon - S. L. E. A. S.
Asst Director of Education
Printers: Avershine Printers,
Price: 57/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலினை
அச்சிட்டு வெளியிடுவதற்கு
ஊக்கம் தந்துதவிய
எனது மாணவரும் உறவினருமான
''மயோன் குறூப்'' அக்கிராசனர்
அல்-ஹாஜ் எம். எம். முஸ்தபா B. Sc. MAAT
அவர்களின் அன்புத் தந்தை மர்ஹூம்
ஆதம்லெப்பை மீராமுகைதீன் மரைக்காயர்
அவர்களின் ஆத்மசாந்திக்காக
சமர்ப்பணம் செய்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Maruthur Publications
1991 December
Islathi Parvai Ithara Mathath-thavarkal
(Islam as Seen by Non Islamians)
Copyright: Pulavar Maruthur - A - Majeed
B. A. (Hons) Ceylon - S. L. E. A. S.
Asst Director of Education
Printers: Averelino Printers.
Price: 57/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

''இஸ்லாத்தைப் பற்றி இதர மதத்தவர்கள்'' எனும் இந்நூல் மருதூர் - வெளியீட்டுப் பணிமனையி இரண்டாவது வெளியீடு.

முதல் வெளியீடாக நாங்கள் மருதூர் - ஏ - ஹசனின் ''அநாமிகா'' புதுக்கவிதை நூலினை 1990 ம் ஆண்டு டிசம்பரில் வெளியிட்டோம்.

கிட்டத்தட்ட ஒருவருடத்தின் பின்பு இரண்டாவது நூலினை வெளியிடும் வாய்ப்புக் கிட்டியது.

பிரதி வருடமும் பல நூல்களை அழகாகவும் தரமாகவும் வெளியிடப் பேரவாக் கொண்டுள்ள எமக்கு அச்சகப் பிரச்சினை மிகவும் தடையாக உள்ளது.

எமது பிராந்தியத்தில் நூல்களை அச்சிடுவதற்கென்று தனியான அச்சகம் இல்லாமையே இதற்கு முழுமுதற் காரணமாகும். இதனால் நேரமும் பணமும் வீண் விரயமாகின்றது.

எதிர் காலத்திலாயினும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் குறையுமென எதிர்பார்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியிலே பல தரமான நூல்களை அச்சிட்டு வெளியிடும் அதேவேளை பிறமொழிகளான ஆங்கிலம், சிங்களம், உர்து, அரபு, போன்ற மொழிகளில் உள்ள தரமான நூல்களையும் மொழிபெயர்த்து வெளியிடவும் எமக்கு எண்ணமுண்டு.

இந்த எண்ணத்திற்கு ஆக்கமும், ஊக்கமும், ஆலோசனைகளும் தந்துவுமாறு தங்களைக் கேட்டு விடைபெறுகிறேன்.

நன்றி-

நிஸ்மி - மஜீத்

மருதூர் - வெளியீட்டு பணிமனை.
சாய்ந்தமருது - 01,
இலங்கை.
01 - 12 - 1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உய்வதற்காக எழுதிய உயில்"

''இஸ்லாத்தைப் பற்றி இதர மதத்தவர்கள்'' எனும் இந்நூலினை இற்றைக்கு சுமார் இருபத்திநான்கு வருடங்களுக்கு முன் தொகுக்கத் தொடங்கினேன்.

இதனை இப்படியும் கூறலாம். 1967 ம் ஆண்டு ஒரு தமிழ்த் தினசரியில் பிரசுரமாகி இருந்த ஒரு கட்டுரையைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அக்கட்டுரையிலே ''இஸ்லாம் ஒரு சில வழிபாடுகளை மாத்திரம் கொண்ட ஒரு மதமல்ல, ஐரோப்பாவில் கூட இதற்கு உதாரணம் இல்லையென்ற அளவிற்கு விஷேசம் பொருந்திய ஒரு வாழ்க்கைத் திட்டம்'' என லைப் (LIFE) எனும் அமெரிக்கச் சஞ்சிகை கூறுகிறது. என எழுதப்பட்டிருந்தது

இக்கருத்து எனைப் பெருமையடையச் செய்தது மட்டுமல்லாமல், எனை ஏகாந்தத்திற்கும் இட்டுச் சென்றது.

அதனால் இக்கருத்தினை எங்கேயாயினும் ஓர் இடத்தில் குறித்து வைத்துக் கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் போல் தோன்றியதும் ''இஸ்லாத்தைப் பற்றி இதர மதத்தவர்கள்'' எனும் தலைப்பிட்டு மேற்சொன்ன கருத்தினை குறித்து வைத்துக்கொண்டேன்.

அடுத்தவாரமும் இஃதே போன்ற கருத்தொன்றினை வேறு ஒரு பத்திரிகையில் படித்தேன்.

அதனையும் குறித்துவைத்துக் கொண்டேன்.

1970 ம் ஆண்டு என நினைக்கின்றேன்

கல்முனையில் இருந்து வெளிவந்த ''அல்-அறப்'' எனும் பத்திரிகையில் சேகரித்து வைத்தவைகளில் சிலதைத் தொகுத்து கட்டுரையாக எழுதினேன்.

இரண்டொரு கட்டுரைகளோடு எழுத முடியாது போய்விட்டது.

1990 ம் ஆண்டு தொகுத்துவைத்திருந்தவைகளை நூலாக்கும் ஆசையேற்பட்டது.

ஆசையின் உந்தலால் தொகுக்க முற்பட்ட போது பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி இருந்தது.

உதாரணத்திற்காகச் சிலவற்றை இங்கு கூறிவைத்தல் பொருத்தமென நினைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் எட்வின் அர்னால்ட் (Sir Edvin Arrnald) என்பவர் இஸ்லாத்தைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்லியிருப்பார்.

இதனைத் தமிழிலே எழுத முனைந்தவர் சர், அர்னால்ட் என்றோ,

சர்வின் அர்னால்ட் என்றோ எழுதி விடுவார்.

இஸ்லாத்தைப் பற்றி அர்னால்ட் என்ற பெயரில் பலபேர், பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

உதாரணத்திற்காக சேர் எட்வின் அர்னால்ட், சேர் தோமஸ் அர்னால்ட், டி. டபிள்யூ. அர்னால்ட், பேராசிரியர் அர்னால்ட், ஆர். பேஜ் அர்னால்ட், சங்கைக்குரிய டாக்டர் அர்னால்ட், போன்றோரைக் குறிப்பிடலாம்.

எந்த அர்னால்ட் எந்தக் கருத்தைச் சொன்னார் என்பதைப் புரிய முடியாத அளவிற்கு கருத்துக்களும், பெயர்களும் ஒழுங்கின்றி இருப்பது பின்னர்தான் தெரியவந்தது.

மேலும்,

தமிழ் எழுத்தாளர்கள் சேக்ஸ்பியரை செகசிப்பியர் என எழுதுவதும் உண்டு. ஏன் விபுலானந்த அடிகளே இப்படி எழுதியுள்ளார்களே. மற்றவரைக் குறை சொல்லி என்ன செய்ய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒரு பெயர் வேறு ஒரு பெயராகத் திரிந்தும் கருத்து எந்தப் பெயருக்குரியவர் சொன்னது என்றும் தெரியாது குழம்பியநிலைஏற்படுவதும் உண்டு.

இதனால் ஆங்கில மூலங்களைத் தேடியலைய வேண்டியேற்பட்டது.

இஃதே போல ஒரு கருத்தை எழுதி அதன் கீழே டோல்ஸ்ட்டோய் என எழுதிவிடுவார்கள்.

லியோ டோல்ஸ்டோய், என ரஸ்யாவிலேயே இரு டோல்ஸ்ட்டோய் எழுத்தாளர்கள் இருப்பது எழுதியவருக்குத் தெரியாதிருக்கலாம். இப்படியும் சில பிரச்சினைகள் ஏற்பட்டன.

மேலும்,

ஒரு கருத்து ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழிக்கு மாற்றப்படும் பொழுது ஏற்படும் மொழிச் சிதைவு மட்டுமின்றி ஒரே மொழியிலேயே பெயர்கள் நாளடைவில் தேய்ந்து, தேய்ந்து சுருங்கி அல்லது உருமாறிப் போவதும் உண்டு.

இது சாதாரண நிகழ்வு என மொழியியலாளர்கள் கூறுவார்கள்.

இஃது ஒரு புறமிருக்க -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பினை வெறும் கருத்துக் கோர்ப்பாக மட்டும் வெளியிட நான் விரும்ப வில்லை. அதனால் கருத்துச் சொன்னவர் களைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறி அவரது வாழ்க்கையையும், அந்தஸ்தையும் கோடிட்டுக் காட்ட விரும்பினேன். அதனாலும் பல சிரமங்கள் ஏற்பட்டன. அவரைப்பற்றிய குறிப்புக் கிடைக்காததால் கருத்தையே விட வேண்டியேற்பட்டது.

ஆழமான அழகான கருத்தாக இருந்தும் என்ன செய்ய சொன்னவரைப் பற்றி எதுவும் தெரியவில்லையே.

மேலும்,

சில பெறுமதியான மனிதர்கள் பெறுமதி யான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்கள். அலசிப்பார்த்தால் அவை சிலேடையாக எமது மனத்தைப் புண்படுத்தும் வகையில் சொல்லி யிருப்பதும் புலனாகியது.

அதாவது திட்டமிட்ட சதியாக இருந்தது.

அதனால் அவற்றை விட வேண்டியேற் பட்டது.

உதாரணத்திற்குப் பெருமானாரின் பல தார மணம் பற்றிக் கூறிய சில கருத்துக்களைக் கூறலாம்.

மேலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில கருத்தாளர்களின் பெயர்களின் முன்னால் டாக்டர் (DR) என எழுதப் பட்டிருக்கும்.

இதனைக் கலாநிதி எனக் கொள்வதா? அல்லது வைத்தியர் எனக் கொள்வதா?

இது பற்றி எனது நண்பர் ஒருவரிடம் உசாவினேன்.

மேலை நாடுகளில் வைத்தியர்கள் தங்கள் பெயர்களின் முன்னால் டாக்டர் (DR) என போடுவது வழக்கமில்லையென்றும், பெயர் களின் பின்னாலேயே எம். பி. பி. எஸ். (M. B. B. S) எனப் போடுவார்கள் என்றும் கலாநிதிகள் மட்டுமே பெயர்கள் முன்னால் டாக்டர் (DR) எனப் போடுவார்கள் என்றும் கூறினார்.

ஆனால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் நிலைமை வேறாகவே இருந்தது.

மேலும்,

வில்லியம் பிரேசில் பசியர் பிக்காட் ''என்பவர் இஸ்லாத்தைப் பற்றிச் சொன்ன கருத்தொன்றினை தொகுதியிலே சேர்த்து விட்டு அவருடைய வாழ்க்கைக் குறிப்பை தேடிப் பார்த்த போது அவர் 1972 ம் ஆண்டு இஸ்லாத்தைத் தழுவி விட்டார் என்பது தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை இதர மதத்தவராகக் கொள்ள முடியாதல்லவா?

இப்படியும் சில கருத்துக்களை நீக்க வேண்டியேற்பட்டது.

மேலும்,

ஒருசிலர் இஸ்லாத்தைப் பற்றியும் பெருமானாரைப் பற்றியும் மேலான கருத்துக்களை தெரிவிக்க நினைத்து, தங்களது மதங்களோடு ஒப்பிட்டுப்பார்த்து அவர்களது மதங்களை இழிவுபடுத்திக் கூறியுள்ளார்கள். இப்படிப்பட்ட கருத்துக்களை அவர்கள் கூறினாலும் நாங்கள் அவற்றைக் கூற முடியாதல்லவா? பெருமானார் மற்ற மதங்களை இழிவு படுத்துவதை விரும்பவும் இல்லை. அனுமதிக்கவும் இல்லை.

அதனால் சில கருத்துக்களை அச்சகத்தில் ''புறூப்'' பார்த்துக் கொண்டிருக்கும் போதே நீக்க வேண்டியேற்பட்டது.

இதனால் அச்சகத்தாருக்கும் சில சிரமங்கள் ஏற்பட்டன.

அச்சகம் என்றதும் அச்சகப் பிரச்சினை ஆயிரம் நினைவுக்கு வருகிறது.

நூலினை அச்சிடுவதற்காக 2 - 7 - 90ல் ஒப்படைத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சகம் வேறு ஒருவரது கைக்குமாறியதும் புத்தகம் அச்சிடுவதற்கு நாங்கள் பொறுப்பல்ல எனக் கைவிரித்தார்கள்.

இதனைச் சாத்வீகமான முறையிலே பணச்செலவு கொஞ்சம் கூடப் போனாலும் பறவாயில்லையெனச் சமாளித்துக் கொண்டேன்.

நூலினை அச்சிட்டு முடிப்பதற்கு ஒன்றரை வருடங்களுக்கு மேல் ஆகுமென எண்ணிப் பார்த்த போது என் மனம் மிகவுமே களைப் படைந்துவிட்டது. இச்சந்தர்பத்தில் இறைவன் எனக்கு உதவி செய்ய எண்ணிப் போலும் எனது மாணவரும், மயோன் கம்பனியின் சேமனும், எனது உறவினருமான அல்-ஹாஜ் எம். எம். மூஸ்தபா B. Sc. MAAT அவர்களைச் சந்திக்க வைத்தான்.

அவர் தந்த உற்சாகம் என் களைப்பினைப் போக்கிப் புதுத் தெம்பினைத் தந்தது.

இந்தச் சின்ன வயதில் அவருக்குத்தான் எத்தனை பெரிய மனது.

அவர் தந்த ஊக்கத்தால் புதிதாக ''எதிர்வு கூறல்'' எனும் ஒரு பகுதியையும் சேர்த்துக் கொண்டேன்.

அவருக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவிப்பதோடு எவசைன் அச்சகத்தாருக்கும் எனது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் ஏ. எம். அபூபக்கர். எம். ஏ. எம். ஜமீல் B. Com. அதிபர், ஏ. பீர்முகம்மது B. A. அதிபர், எம். ஏ. ஏ. மஜீத் பசுபிக் பிறஸ் மனேஜர், எம். ஏ. எப். ஜெலீல் B. A. (Hons) அதிபர், சுல்பிக்கார் அபூபக்கர் ஆகியோருக்கும், இந்நூலின் சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறி,

கடைசியாக

எனக்குப் பிடித்தமான ஒரு ஜீவ ஆத்மாவின் கருத்தோடு ஆரம்பித்து.

எனது கண்ணியத்திற்கு உரிய ஒருவரின் கருத்தோடு இந்நூலினை நிறைவு செய்யக் கிடைத்தமைக்கு இறைவனுக்கும் நன்றி கூறி எனது இந்த உயிலினை நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

இஃது

**புலவர் மருதூர் - ஏ மஜீத்**

சாய்ந்தமருது - 01,
கல்முனை,
இலங்கை.
01 - 12 - 1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணக் கதவுகளின் இலக்கங்கள்


01. மகாத்மாக் காந்தி 15
02. இராணி விக்டோரியா 18
03. அறிஞர் பெர்னாட்ஷா 19
04. பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு 20
05. இரவீந்திரநாத் தாகூர் 22
06. தத்துவ மேதை பேட்டண் ரஸ்ஸல் 23
07. பகுத்தறிவாளர் இங்கர் சால் 24
08. அறிஞர் அண்ணா 26
09. மகாகவி சுப்பிரமணிய பாரதியார். 30
10. ஈ, வே. ரா. பெரியார் 32
11. கவியோகி சுத்தானந்த பாரதியார் 34
12. லியோ டால்ஸ்டாய் 35
13. மாரிஸ் புகைல் 37
14. DR மொரிஸ் 38
15. DR திருமதி அன்னி பேசண்ட் 40
16. DR. நொல்டாக் 42
17. DR. ஏ. சேப்பண் 43
18. குரு நாணக் 44
19. சேர் வில்லியம் மூய்ர் 45
20. பேரறிஞர் சேர் எட்வின் அர்ணோல்ட் 49
21. சேர் வில்பிறட் பிளான்ட் 50
22. சேர் தோமஸ் அர்னால்ட் 51
23. சேர் ஸி. பி. இராமசுவாமி 52
24. DR. ஏ. எம். லோத் ரொப்ஸ் டோடாட் 53
25. DR. ஏ. பெறத் ரென்ட் 54
26. பேராசிரியர் டிரேப்பர் 55


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. பேராசிரியர் ஜோன்ஸன் 57
28. பேராசிரியர் ஏ. ஜே. ஆர்பரி 58
29. பேராசிரியர் ஸ்னூக்கர் குரோன்ஜி 59
30. பேராசிரியர் ரெனால்ட் - ஏ - நிக்கல்சன் 60
31. பேராசிரியர் ஈ. எச். பர்மா 61
32. பேராசிரியர் லூயிஸ் மசிங்னன் 62
33. பேராசிரியர் கே. எஸ். இராமகிருஷ்னன்ராவ் 63
34. சங்கைக்குரிய சகோதரர் ஐசாக் டெய்லர் 64
35. சங்கைக்குரிய சகோதரர் பார்ஸ்வோர்ச் ஸ்மித் 6[illegible]
36. சங்கைக்குரிய டபிள்யு. வில்சன்காஸ் 69
37. சங்கைக்குரிய ஜேம்ஸ் செல்கிர்க் 70
38. சர்வபள்ளி டாக்டர் ராதா கிருஸ்ணன் 71
39. டாக்டர் நாவலர் இரா நெடுஞ்செழியன் 72
40. இந்திய ஜனாதிபதி இராஜேந்திரப் பிரசாத் 73
41. பௌத்த அறிஞர் மைத்திரி மூர்த்தி 74
42. பூதான இயக்கத் தலைவர் வினோபாஜி 75
43. மாவீரன் நெப்போலியன் போனபாட் 76
44. கதே 77
45. தோமஸ் கார்லைல் 79
46. அல்பிறட் டபிள்யூ. மாட்டின் 81
47. சங்கைக்குரிய ஜி. எம். றொட்வெல் 83
48. திருமதி சரோஜினி நாயுடு 85
49. கவிஞர் லாமாட்டைன் 87
50. சங்கைங்குரிய சகோதரர் ஜி. மார்க்கோலியத் 91
51. ஜோன் டெவன் போட் 93
52. ஸ்டான்லி லேன் பூல் 95
53. பிரஞ்சுப் பேராசிரியர் ஜோர்ஜ் ரோத்ரண்ட் 98
54. ரோம் லண்டா 101

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. ஸ்ரேன் வூட் கொப்ஸ் 102
56. வரலாற்று ஆசிரியர் கிப்பன் 103
57. அமெரிக்க வரலாற்று ஆசிரியர் வாசிங்டன் இர்விங் 104
58. கவுண்ட் டோல்ஸ் டோய் 109
59. ஹென்றி பிரேண் 110
60. கோபினோ 112
61. எச். ஜி. வெல்ஸ் 113
62 ஈ. அலெக்சாந்தர் போல் 115
63 வில்பிறட் கேண்ட் வேர்ஸ்மித் 116
64. எட்மன் பார்க் 117
65 திரு. ஜோசப் நுண்ணாள் 118
66 திரு. லேன்ஸ் போட் லாட்டன் 119
67. திரு. டங்கன் கிரின் லீஸ் 120
68. விவேகானந்தர் 121
69. மேஜர் ஆர்தர் ஜி. விணோல்ட் 123
70. பேராசிரியர் பிலிப் கே. ஹிட்டி 125
71. எச். ஏ. ஆர். கிப் 127
72. பிறடரிக் டி. விட்ஸ் 129
73. கொட்பிறே ஹிக்கின்ஸ் 130
74. றொபட் பிறிஃ போல்ட் 131
75. மைகல் ஹாட் 134
76. கிரெள போர்ட் 136
77. லிவிங் ஸ்ரோன் 137
78. டி. பி. ஹீயூஜஸ் 138
79 எஸ். எஸ். லீடர் 140
80. ஏ. சீ. பொக்கே 141
81. டாக்டர் மார்க்கஸ் டூட்ஸ் 142
82. ரெவரெண்ட் டாக்டர் மெக்கோலா அக்பிபி 145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. முன்னைநாள் இந்திய கவர்ணர் ஸ்ரீ பிரகாசர் 146
84. தேஹா வெனசத்தே 147
85. சரித்திர நாவலாசிரியர் சாண்டில்யன் 148
86. ஏ. ஜே ரொயின்பி 149
87. ஜே. எஸ். கிளியர் மக்பார் லேன் 150
88. எம். லெட்டோயுர்றியோ 151
89. ஜீன் - எல் - ஹியூரெக்ஸ் 152
90. லோறன்ஸ் இ. பிரௌண் 153
91. ஜோன் வில்லியன் டிராப்பர் 154
92. சீ. எச். பெக்கர் 155
93. டி. டபிள்யூ. அர்னால்ட் 156
94. ஜே. ஸ்ரீவன்சன் 157
95. ஊசன் பெல்ட் 158
96. டாக்டர் மார்கஸ் டொட்ஸ் 159
97. சர்வதேவ் பிரகாஸ் 160
98. ஜீன் - எல் - ஹெரக்ஸ் 161
99. ஜி. வின்சே ஜோன்ஸன் 162
100. ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ 163

## எதிர்வு கூறல்

01. உப நிடத சிந்தனைகளில் 165
02. பஹலவி மொழிக் கிரந்தம் 166
03. பவிஷ்ஷ புராணம் 167
04. அதர்வ வேதம் 168
05. பஹவத் கீதை 170
06. பைபிளும் சுவிசேசங்களும் 175
07. ஷாஹில் மவாஹிபு எனும் கிரந்தம் 181

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 1 மகாத்மா காந்தி

1. மேல்நாடு முழுவதும் அந்தகாரத்துள் ஆழ்ந்து கிடந்தபோது கீழ்த்திசை அடிவானத்திலிருந்து 'ஜோதி' மயமான ஒரு நட்சத்திரம் உதயமாகி, நைந்து புலம்பிக்கொண்டிருந்த இவ்வுலகத்திற்குப் பிரகாசத்தையும், சுக சௌக்கியத்தையும் அளிக்கத் தொடங்கியது.

2. தென்னாபிரிக்காவில் உள்ள ஐரோப்பியர்கள் இஸ்லாத்தின் அபிவிருத்தி கண்டு திகில் கொள்கின்றார்கள். ஏனெனில், சுதேச ஜாதியினர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டு விடுவார்களாயின் அவர்கள் வெள்ளை ஜாதியினர்களுடன் சமத்துவம் கோருவார்கள் என்னும் விஷயத்தை எண்ணியே திகில் கொள்கின்றார்கள். ஏனென்றால், ''ஜுலூ'' ஒருவன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட உடனேயே, ஒரு முசல்மானுடைய அதே கோப்பையில் அருந்துகின்றான். அதே தட்டையில் புசிக்கின்றான். இதனைக் கண்டே அவர்கள் திகில் கொள்கின்றார்கள்.

---

★ இந்தியாவிற்கு அஹிம்சையைப் போதித்து அதன் மூலம் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர்.

''சத்திய சோதனை'' என்னும் நூலின் ஆசிரியர். ''சத்தியாக்கிரகம்'' என்னும் அறப்போர் முறையை முழுமையாகக் கையாண்டவர்.

போர்க் கருவிகள் இன்றியே ஒரு போரை நடத்தி வெற்றி பெற்றவர். ''பார் எட் லோ'' பட்டம் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நபிகளாரின் வாழ்க்கைச் சரித்திரத்தை விளக்கும் மவ்லானா 'ஸிப்லி' அவர்களின் இரு நூல்களை நான் வாசித்து முடித்ததும், இந்த உத்தம புருஷரின் வாழ்க்கையை மேற்கொண்டு படிக்க கைவசம் ஒரு நூலும் இல்லையே என்று வருந்தினேன்.

மேல்நாட்டில் அவர் ஒரு பக்கச் சார்பாக அவமதிக்கவும், தூசிக்கவும் படுகின்றார்.

கண்டனம் என்ற குறிக்கோளுடன் அவரது வாழ்க்கை வரலாற்றைப் படிக்க நான் முன்வரவில்லை.

மனித சமுதாயத்தின் கோடிக் கணக்கானோரின் நெஞ்சங்களில் ஆதிக்கம் செலுத்தும் ஒருவரின் வாழ்க்கையைப் பற்றி புரிந்து கொள்ளவே நான் விரும்பினேன். இவ்விரண்டு நூல்களிலும் போதியளவு காரணங்கள் இருந்தன.

மிக்க தூய்மை நிறைந்த எளிமை, அன்னாரின் சுயநலமற்ற தன்மை, கொடுத்த வாக்குறுதிகளுக்கு உள்ளபடி மதிப்புக் கொடுத்தல், தம்முடைய சீடர்கள், சகாக்கள் மீது அளவு கடந்த அன்பு, அவர்களது வீரம், நிர்ப்பயம், இறைவன் மீதும், அவன் தூதுவத்தின் மீதும் அவர்களது விசுவாசம் என்னும் இவையே பெருமானாரின் வெற்றிக்கு காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மகத்தான பண்புகளைத் தவிர, தடைக்கு எதிர்ப்பட்ட ஒவ்வொரு முட்டுக் கட்டையையும் சமாளிக்க அவர்களுக்கு எந்த வொரு வாளாயுதமும் பயன்படவில்லை.

பெருமானார் அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு பாகத்தையும் நான் விளக்க வேண்டிய அவசியமில்லை.

கோடிக்கணக்கான மக்களுக்கிடையில் இறையச்சத்துடன் வாழ்ந்தவர் அவர் எனவும், அவர் ஏழையாகவே மரணித்தார் எனவும், தனது புனித உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடத்தில் ஒரு இடாம்பீக நினைவுச் சின்னத்தையும் அவர் விரும்பவில்லை எனவும், தமது மரணப் படுக்கையில் கூட தாம் கொடுக்க வேண்டிய கடன்களை அவர் மறக்கவில்லை என்பன போன்ற விபரங்களை அறிந்து கொண்டதே போதுமானது.

4. என் ஹிந்து சகோதரர்கள் பரிசுத்த உள்ளத்துடன் திருக்குர்ஆனைப் படிக்கப் புகுந்தால் இஸ்லாமியத்தின் இணையற்ற தன்மையையும், உண்மை உபதேசம் வெளியாவதையும் உணர்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 2 இராணி விக்டோரியா

1. குறுகிய காலத்தில் மிகப் பெருந்தொகை யான மக்களைத் தன்வயப்படுத்திய மதம் இஸ்லாம் ஒன்றே.

---

★ இவர் பெரிய பிரித்தானியாவினதும் அயர்லாந்தி னதும் இராணியாக 1837-1901 ம் ஆண்டுவரை ஆட்சி செய்தவர். இவரது ஆட்சிக் காலத்திலேயே இந்தியா பிரித்தானியாவின் ஆட்சிக்குட்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 3 அறிஞர் ஜோர்ஜ் பெர்னாட் ஷா

1. உலகில் இன்றிருக்கின்ற நிலைமாறி திரும்பவும் சமாதானம் ஏற்பட வேண்டு மாயின் முகம்மது நபி போன்ற தீர்க்கதரிசி திரும்பவும் பிறக்க வேண்டும்.

2. இன்றைய உலகிற்கு முகம்மதைப் போன்ற மனிதர் சர்வாதிகாரியாக வருவாரா யின் சகலரும் அத்தியாவசிய தேவை என விரும்பிக் கொண்டிருக்கும் சமாதானத்தை யும், சுபீட்சத்தையும் ஏற்படுத்தக் கூடியவாறு உலகின் சகல பிரச்சினைகளையும் அவர் தீர்த்து வைப்பார் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு.

அத்தோடு, சிறந்த சமாதானத் தூதுவர் முகம்மது நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த என்றுமே அழியாத சம்பூர்ண சத்திய சன்மார்க் கத்தை உலக மக்கள் யாவரும் அனுஷ்டித்துக் காண்பிக்கக் கூடிய பொற்காலம் சமீபித்துக் கொண்டுதானிருக்கின்றது.

---

★ இவர் உலகில் எல்லோராலும் அறியப்பட்ட எழுத்தாளரும் அறிஞருமாவார்.

இவரது நாடகங்கள் உலகிற்கு உண்மையைச் சொல்லுபவை. அஞ்சாமை, கவலையின்மை, கலை உணர்வு, அறிவின் தெளிவு இவையே இவரின் வாழ்க் கையின இலட்சியங்கள். மச்சம், மாமிசம் என்பவற்றை வெறுத்து மரக்கறி உணவுகளையே விரும்பியுண்டார். கிண்டலும் கேலியும் இவரது ஆயுதங்கள். 1952 ம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 4 பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு

1. முகம்மது நபி தமது பால்யப் பருவத்தில் தமது நகரவாசிகளால் நம்பிக்கைக்குரியவர் (அல்-அமீன்) என அழைக்கப்பட்டார்.

இறைவன் ஒருவனே எனப் போதிக்கத் தொடங்கியதன் காரணமாக மக்காவில் இருக்க முடியாதமையினால் மதீனாவில் அடைக்கலம் புகுந்தார்.

பத்து வருடங்களின் பின்னர் திரும்பி வந்து மக்காவின் அதிபதியானார்.

தனது தூதில் இவருக்கு இருந்த நம்பிக்கை, கொன்ஸ்டாண்டிநோபிளை ஆண்ட ஹெர்க்குலிசுக்கும், எகிப்திய அரசனுக்கும், "தெய்குங்" என்ற சீனச் சக்கரவர்த்திக்கும் தமது மதத்தைத் தழுவுமாறு கோரி அனுப்பியிருந்த கடிதங்களில் இருந்து வெளிப்படுகின்றது.

---

★ இவர் இந்தியாவின் முதலாவது பிரதமர். உலக நாடுகள் எல்லாவற்றிலும் அறியப்பட்ட அரசியல் வாதி. "எனது வாரிசு" எனக் காந்தி அடிகளாற் புகழப்பட்டவர்.

இங்கிலாந்து "கேம்பிறிஜ்" பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றவர்.

மதத்தைப் பற்றி அவ்வளவு அக்கறையில்லாதவர். ஆனால், இஸ்லாத்தைப் பற்றியும், முகம்மது நபியவர்களைப் பற்றியும் மேலான எண்ணம் கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் அவசரப்பட்டு இம்மதத்தைத் தோற்றுவிக்கவில்லை. இவர் பிறர் நம்பிக்கைக்கும், பிரியத்திற்கும் பாத்திரமானவராய் அமைதியான வாழ்க்கையை நடத்தி வந்தார்.

நம்பிக்கை, இவரது போதனைகளில் முக்கியத்துவம் வகிக்கின்றது.

அடுத்து, சமுதாயத்தை சமத்துவம் அங்கீகரிக்கின்றது.

இந்த அடிப்படையில் மக்கள் சமுகத்தின் முன் ஓரளவு சனநாயகம் புகுத்தப்பட்டது.

சகோதரத்துவம் மக்களை ஈர்த்துக் கொள்ளும் சக்தியாக இருந்தது.

அறியப்பட்டிருந்த அன்றைய உலகின் சரிபாதியை அவரின் சிஷ்யர்கள் இலகுவாகக் கைப்பற்றி ஆட்சி செய்ய இவரூட்டிய நம்பிக்கை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய சக்திகள் காரணமாகவிருந்தன.

2. அராபியரை உறக்கத்தில் இருந்து தட்டியெழுப்பி தன்னம்பிக்கையும், வல்லமையும் அவர்களுக்களித்த புதிய சக்தி இஸ்லாம்.

இது, முகம்மது நபி என்னும் புதிய தீர்க்கதரிசி ஒருவரால் போதிக்கப்பட்டது. அவர் கி. பி. 571ல் பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 5 இரவிந்திரநாத் தாகூர்

முஸ்லிம்களை ஒன்றாக இணைத்து வைத்திருப்பது அவர்களுக்கு மத்தியில் உள்ள பற்றேயாகும். சடங்குகளில் உள்ள பிடிப்பல்ல.

ஒரு கொள்கையை பல அர்த்தம் கொண்டு பார்க்காமல் ஒரே கருத்துடன் வழிபடுகின்றனர்.

அழைத்த மாத்திரத்தில் எல்லோரும் ஒன்று சேர்ந்து விருப்பத்துடன் உயிரைத் தரக் கூடிய தன்மை வாய்ந்தது இவர்களின் தர்ம உணர்வு.

---

★ இவர் நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞர். கவிதை, ஓவியம், இசை, நெடுங்கதை, சிறுகதையென்று எல்லாத் துறைகளிலும், கலைகளிலும் விற்பன்னராகத் திகழ்ந்தார்.

இந்திய நாட்டின் தேசிய கீதமான "ஜனகண மன" என்ற இசைப் பாட்டைத் தந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 6 தத்துவ மேதை
## பேர்ட்டன் ரஸ்ஸல்

இராணுவ பலத்தில் மாத்திரம் தான் கீழ் நாடுகள் உச்ச நிலையை வகுத்தன என்பதற்கில்லை.

ஐரோப்பா அநாகரிகத்தில் மூழ்கிக் கிடந்தபோது,

விஞ்ஞானம், தத்துவம், கலைகள், கவிதைகள் மற்றும் எல்லாத் துறைகளிலும் இஸ்லாமிய உலகம் செழிப்புற்றே விளங்கியது.

மன்னிக்க முடியாத புரட்டாக அந்தக் காலத்தை "இருண்ட காலம்" என ஐரோப்பியர் அழைத்தனர்.

உண்மையில் ஐரோப்பாவில்தான் அப்பொழுது இருள் சூழ்ந்திருந்தது. அச்சமயத்தில் முஸ்லிம்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த ஸ்பெயினிலே கலையின் ஒளி வீசிக்கொண்டிருந்தது.

---

★ இவர் பிரிட்டனின் தத்துவ மேதை. "History of Western Philosophy" என்னும் நூலின் ஆசிரியர். கணிதப் பேராசிரியர்.

இவரது பாட்டனார் விக்டோரியா மகாராணியிடம் பிரதமர் பதவி வகித்தவர்.

இவரும் இவரது தந்தையும் நாஸ்திகர்கள்.

இவரது இன்னுமொரு நூல் "கணித சாத்திரத்தின் கொள்கைகள்" என்பதாகும்.

"கணிதத் தத்துவம்" இவரது அடுத்த நூல் ஆகும். நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

1950 ம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 7 பகுத்தறிவாளர் இங்கர்சால்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே முஸ்லிம்கள் உலகத்தின் ஞானத்தை உச்சத்திற்கு உயர்த்தி விட்டார்கள். மங்கோலியா, பாரசீகம், மொசப்படேமியா, சிரியா, எகிப்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் இவர்கள் பெரிய கல்லூரிகளை நிறுவினார்கள்.

ரோமப் பேரரசைக் காட்டிலும் இவர்களது ஆட்சியின் எல்லை பரந்து விளங்கிற்று

இவர்கள் நவீன விஞ்ஞானங்களைப் போதித்தார்கள். வானவெளியை ஆராய்ந்தார்கள்.

இவர்கள் கொடுத்த பெயர்களே நட்சத்திரங்களுக்கு இன்றும் இருக்கின்றன. உலகின் பரிமாணத்தை இவர்களே தீர்மானித்தார்கள். கடிகாரத்தைச் செய்தார்கள். இரசாயன அறிவைப்புதிதாக உலகத்திற்கு அளித்தார்கள்.

---

★ இவர் நாஸ்திகவாதியாக உலகத்தாரால் அறியப்பட்டவர். "கோயில்கள், கடவுள்கள்" என்பன இவரது நூல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸல்பியூரிக் அமிலம், நைட்றிக் அமிலம் அல்கொஹால் ஆகியவற்றைக் கண்டு பிடித்தார்கள். மருத்துவ நூல்களையும் நிலையங்களையும் உலகிற்கு அளித்தார்கள்.

தோல், காகிதம், உருக்கு ஆகியவற்றை ஐரோப்பியருக்கு வழங்கியவர்களும் இவர்களே. முதன் முதலாக நவீனத்தையும், கட்டுரைகளையும், பல விடயங்களைக் குறித்த ஆராய்ச்சிகளையும் நூல்களாக வெளியிட்டார்கள்.

நவீன விஞ்ஞானத்திற்கு வித்தூன்றிய முஸ்லிம்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 8 அறிஞர் அண்ணா

1. நபிகள் நாயகம் இறுதி நபியாகத் தோன்றியதால் அவருக்குப்பின்னர் பலரும், "நானும் நபிதான்" என்று மக்களிடையே குழப்பத்தை உண்டுபண்ண முடியவில்லை. பெருமானார் அவர்கள் எதைக் கூறினார்களோ அதைச் செயல் முறையில் செய்து காட்டினார்கள். பெருமானாரின் போதனைகள் கடைப்பிடிக்கப் படுமாயின் மனித ஒற்றுமை எளிதில் ஏற்பட்டு விடும்.

நல்ல பொன் உரைக்க உரைக்க என்றுமே மாற்றுக் குறையாதிருக்கும். அஃதேபோன்று, இஸ்லாமியக் கோட்பாட்டையும் யார் என்ன கோணத்தில் இருந்து ஆய்ந்தாலும் அங்கு இஸ்லாமிய மணம் கமழ்ந்து கொண்டே இருக்கும். மார்க்கங்கள் நிலைத்திருக்க வேண்டு மென்றால், அவை மனித சமுதாயத்திற்குப் பயனுள்ளவையாக இருக்க வேண்டும். நடை

---

★ திராவிட உலகின் புரட்சி வீரர். ஆங்கிலத்தையும், தமிழையும் அடுக்கு மொழியிற் பேசக்கூடிய ஆற்றல் பெற்றவர்.

பல நூல்களின் ஆசிரியர். எம். ஏ. பட்டதாரி. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அதனை அமைத்தவர். இந்தியச் சட்ட மன்ற உறுப்பினர். இந்திய நாடாளுமன்ற ராஜ்ய சபை உறுப்பினராக இருந்தவர்.

தென்நாட்டின் முதலமைச்சர். அறிவியல் எழு கடலின் ஆழம் கொண்டவர். மதத்தைக் கடுமையாக எதிர்க்கும் பகுத்தறிவுவாதி. எனினும், இஸ்லாம் என்றபோது அவர் இதயம் கனிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் செயல்படுத்தப்படவேண்டும். இத்துறையில் இஸ்லாம் முன்னணியில் நிற்கின்றது. இறுதிவரை இவ்வுலகத்தில் நிலைத்திருக்கும் மார்க்கம் இஸ்லாம் ஒன்றே என்று ஜோர்ஜ் பெர்னாட்சா கூறினார். இதற்குக் காரணம் அந்த உண்மை மார்க்கத்தில் அற்புதங்கள் குறைவு. ஆனால், அறிவுக் கருத்துக்கள் நிறைந்து காணப்படுவதே.

2, பலாச் சுளையை சுவைக்க முற்படுவோர் முதலில் மேல் தோலை நீக்கி, பிசிறுகளை போக்கிவிட்டு பிறகு சுளையை எடுத்து அதில் உள்ள கொட்டையையும் நீக்கி விட்டே உண்பார்கள். அதே போன்றே மதக் கருத்துக்களையும் உணர வேண்டும்.

சிலர் பலாப் பழத்தின் முன் தோலையே மதம் என்கின்றனர். அவர்களுக்காகப் பரிதாபப்படுகின்றோம்.

பிசிறுகளை ஒட்டிக்கொண்டு மதம் என்று அலைகின்றார்கள். அவர்களைக் கண்டால் எமக்கு அருவருப்பாக இருக்கின்றது. மற்றும் சிலர் கொட்டையுடன் பலாச் சுளையை விழுங்க முற்படுகின்றார்கள். அவர்களைக் கண்டு அனுதாபப்படுகின்றோம். ஆனால், உரித்தெடுக்கப்பட்ட பலாச் சுளையைப் போன்றதே இஸ்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா நாட்டினருக்கும் பொருந்திய மதமாக-வாழ்க்கைத் திட்டமாக அமைந்திருக்கின்றது இஸ்லாம். எக்காலத்தில் எவ்விதமான பிரச்சினை தோன்றினாலும் செய்ய வேண்டியதெல்லாம் நபிகள் நாயகம் அவர்களுடைய கருத்துக்களில் இருந்து பகுத்தறிவு கொடுக்க வேண்டியதுதான். எல்லாப் பிரச்சினைகளுக்கும் அது விடையாகிவிடும். பிற மதங்களிலே அற்புதம் அதிகம், அடிப்படை உண்மைகள் குறைவு.

இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்ற கூற்று அர்த்தமற்றது. இஸ்லாத்தைப் பரப்ப வாள் பயன்படவில்லை. ஆனால், சிலுவை யுத்தங்களிலே இஸ்லாத்தைக் காக்க அது பயன் பட்டதுண்டு. இந்தியாவில் முகலாயர் ஆட்சியும், மற்ற முஸ்லிம் மன்னர் ஆட்சியும் இருந்தபோது முஸ்லிம்கள் ஒரு கோடிப் பேர் கூட இருந்ததில்லை. அந்த அரசுகளெல்லாம் மறைந்த பின்பே பத்துக்கோடி மக்களாக முஸ்லிம்கள் பெருகினர்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற நல்நெறி பரவி இருந்த நாட்டிலே இடையிடையே அக்கருத்துக்கள் மறைந்திருந்த நிலையில், அக்கருத்துக்களை வலியுறுத்த 1300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இஸ்லாம் பரவிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கொட்டும் மழை பெய்கின்றது என்று வைத்துக் கொள்வோம்.

நான் மேடையிலே நின்று பேசிக் கொண்டிருக்கிறேன். நான் நனைய முடியாது. மேடையின் மேலே கூரையிருக்கின்றது. நீங்கள் நனைந்து கொண்டே எனது பேச்சைக் கேட்க வேண்டுமென்று சொன்னால் என்னைப் பற்றி என்ன நினைப்பீர்கள்.

பெருமானார் அப்படிச் சொல்லவில்லை.

தான் செய்து கொண்டே மற்றவர்களையும் செய்யச் சொன்னார். தான் செய்யாதவற்றை அவர் மற்றவர்கள் செய்யுமாறு பணிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 9 மகாகவி

## சுப்பிரமணிய பாரதியார்

1. ஆங்கிலத்தில் எந்த மனிதனும் தன் சொந்தவூரில் தீர்க்கதரிசியாக மாட்டான் என்றொரு வசனம் சொல்லுகிறார்கள்.

முகம்மது நபியை முதன் முதலில் அலியும், அதைக் காட்டிலும் ஆச்சரியம் தோன்றும் படி கதீஜாவும் கடவுளின் முக்கிய பக்தர் என்றும், மண்டலத்தில் கடவுளுடைய பிரதிநிதியாக அவதரித்த மகானென்றும் அங்கீகரித்ததைக் கவனிக்குமிடத்து, அவர் நிகரில்லாத ஞானி என்பதும், பக்த குல சிரோன்மணி என்பதும் மிக மிகத் தெளிவாக விளங்குகின்றது.

2. இடையிடையே நான் என் மனதிற்குள் முகம்மது நபியைப் பற்றி சித்திரம் போட்டுப் பார்ப்பது வழக்கம்.

---

★ இவர் தமிழ் கவிதை உலகிலே பல புரட்சிகளைச் செய்தவர். பாமரர்களும் படித்தவரும் படிக்கும் வண்ணம் பாட்டுலகைத் திசை திருப்பியவர். சமஸ்தானப் புலவராக இருந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுப்பாலை வனத்தில் நள்ளிரவிலே, தனி மணல் வெளியிலே, ஒட்டகத்திலே ஏறிக் கொண்டு போகிறார் அல்லது அங்கொரு குன்றின் மேல் ஏறி நிற்கிறார்.

கேள்வியாலும் நெடுங்காலத்துப் பக்தியாலும், நிகரற்ற அன்பினாலும், ஞானத்தினாலும் பக்குவப்பட்ட இவருடைய இருதயம் அப்படிப்பட்ட இடத்தில் அல்லாஹ்வை நாடுகிறது. வேறு நினைப்பதற்கு அங்கு இடமே இல்லை. அதனால் அங்கு ஞான ஒளி வீசுகிறது.

3. முகம்மது நபி மகா சுந்தர புருஷர்.
முகம்மது நபி மகா ஞானி.
மகா பண்டிதர். மகா பக்தர்.

வியாபாரமானாலும், யுத்தமானாலும் முகம்மது நபியை கவனித்தால் அந்த விடயத்தில் வெற்றி மிகவும் உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 10 ஈ. வெ. ரா. பெரியார்

இந்து மதத்தில் இருந்து 69 ஆதித் திராவிடர்கள் சீலையம்பட்டியில் இஸ்லாத்தைச் சேர்ந்து விட்டார்கள் என்ற செய்தி எனை மகிழ்ச்சியடையச் செய்தது. இது எதனை எடுத்துக் காட்டுகின்றது, எனின், அவர்கள் பாமரத் தன்மையில் இருந்தும், காட்டு மிராண்டித்தனமான மிருகப் பருவத்தில் இருந்தும், அறியாமையில் இருந்தும் சிறிது விடுதலையடைந்து விட்டார்கள் என்பதே இதன் பொருள்.

இவர்கள் இஸ்லாமியர் ஆகி விட்ட படியால் இவர்களை இனி யாரும் பறையன், பள்ளன், சக்கிலியன், சண்டாளன் என்று கூற முடியாது.

அவர்களும் மற்றவர்களைச் "சாமி சாமி" என்று கூறிக்கொண்டு காலில் விழுந்து கும்பிட வேண்டிய அவசியமில்லை.

---

★ பிறப்பால் ஏற்றத் தாழ்வை நிலை நாட்டும் போக்கை எதிர்க்கத் தொடங்கிக் கடைசியில் நாத்திக வாதம் வரை சென்றவர். திராவிடக் கழகத்தின் தலைவர்.

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, நாவலர் இரா. நெடுஞ்செழியன் போன்றோரின் குரு.

பகுத்தறிவியக்கத்தை ஆதரித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரை விட்டு வெளியே குடியிருக்க வேண்டியதில்லை. வண்ணான், நாவிதன் இல்லாமல் அழுக்குத் துணியோடும் கரடிபோல மயிரை வளர்த்துக் கொண்டு அசிங்கமாக திரிய வேண்டிய அவசியமில்லை.

இனி எந்தப் பொதுத் தேர்தலிலும் அவர்கள் முன்னுக்கு நிற்கலாம். எந்த வேலைக்கும் போகலாம். யாருடனும் போட்டியிடலாம். எந்தப் பள்ளிக்கும் எப்படியும் போக அவர்களுக்கு உரிமையுண்டு. இவ்வளவையும் விட இனி அவர்கள் கல்லையும், செம்பையும், கூடையையும், விளக்கு மாற்றையும் கடவுள் என்று கூறி வணங்க வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 11 கவியோகி சுத்தானந்த பாரதி

1. உலகில் தோன்றிய திருத்தூதர்களுள் முகம்மது நபி அவர்களே மிகப் பெரியவர். அவர் போதித்த மார்க்கத்தின் அடிப்படையே சமத்துவமாக மிளிர்கின்றது.

2. கடவுள் கடவுளே; மனிதன் மனிதனே; மனிதன் கடவுளுக்கு என்றும் வணக்க மாகவே நடக்கவேண்டும்.

இந்தக் கொள்கையை உலகத்திற்கு தெளிவாகச் சொன்னவர் முகம்மது நபியவர்களே.

3. ஆண்டவனின் பெருமை அளப்பரியது. அவனை வணங்காமல் அவனுக்குச் சமமாக வேறெந்த பொருளையும் வணங்கினாலும் வணக்கமாகாது.

இதனாலேயே முகம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் தம் உருவைக் கூட யாரும் வணங்கக் கூடாது என்று கூறினார்கள்.

---

★ இவர் "ஆத்மஜோதி" என்னும் நூலை எழுதினார். "கவியோகி" எனப் பட்டம் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 12 லியோ டால்ஸ்டாய்

முகம்மது நபியைப் பற்றி நாம் ஆரா யுங்கால் மிகவும் ஆச்சரியப்படும்படியாக இருக்கிறது.

நாகரிகம் முதிர்ந்து விட்ட இக்கால கட்டத்தில் கூட, மக்களைத் திருத்த நாம் முனைந்து படும்பாட்டினை நினைக்கும் போது பல நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன், அனாச்சாரத்திலும், அநாகரிகத்திலும் திளைத்த மக்கள் வாழ்ந்த அந்தக் காலத் திலே முகம்மது நபி (ஸல்) அவர்கள் செய்த சீர்திருத்தங்களும், சாதித்த சாதனைகளும் உண்மையான வாழ்வின்பால் இழுத்துச் சென்று வெற்றியும் பெற்று விட்டன. இது வெறும் நாவினால் மட்டும் புகழ்ந்து விடக் கூடிய விடயம் அல்ல.

---

★ இவர் உலகப் புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளர். ''போரும், சமாதானமும்'' என்ற நாவலின் ஆசிரியர். மகாத்மாக் காந்தியின் ஆத்மீகக் குரு.

இரயில் தண்டவாளத்திற்குப் பக்கத்திலேயே உயிர் நீத்தார். இவரது சட்டைப் பையில் ஒரு புத்தகம் இருந்தது. அது ''முகம்மது நபியின் பொன் மொழி கள்''. இவருடைய படைப்புக்கள் **97** வெளிநாட்டு மொழிகளிலும் **67** தேசிய மொழிகளிலும் பிரசுர மாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தனி மனிதர் இத்தனை பெரும் காரியங்களைச் சாதித்து விட்டார் என்றால் உண்மையில் அவர் வெற்றியைக் கண்டு உலகம் தலை குனிந்து மரியாதை செய்ய வேண்டியது நியாயம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 13 மாரிஸ் புகைல்

மேற்கத்திய நாடுகளில் இஸ்லாத்தைப் பற்றி ஒன்றுமே அறியாதிருக்கிறார்கள். அது மட்டுமல்ல அம்மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றித் தப்பும் தவறுமான கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டு வந்துள்ளன.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்தத் துஸ்பிரசாரம் திட்டமிட்டு நடத்தப்பட்டு வந்துள்ளது. ''முகம்மதியர் மதம்'', ''முகம்மயர்கள்'' என்றுதான் மேலை நாட்டு மக்களிடம் இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, ஏதோ மனிதரால் அவராகவே ஏற்படுத்திக்கொண்ட மார்க்கம் என்றே மக்கள் நம்பும்படியாக பிரச்சாரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது.

கிறிஸ்தவர்களிடம் நான் இஸ்லாத்தைப் பற்றி விவாதிக்க ஆரம்பித்தபொழுது அவர்களின் வெறுப்பிற்கும் அருவருப்பிற்கும் ஆளானேன்.

அந்தளவிற்கு அவர்களிடம் விசமம் பரப்பப்பட்டுள்ளது.

---

★ இவர் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவர்.

பிரபலமான மருத்துவ நிபுணர். உடற்கூறு சிகிச்சை வைத்தியத்தில் கை தேர்ந்தவர். "The Bible, The Quran and Science" எனும் நூலின் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 14 DR. மோரிஸ் (பிரெஞ்சு மேதை)

1. முகம்மது நபி அவர்கட்கு அருளப்பட்ட திருக்குர்ஆன்,

விஞ்ஞானிகட்கு விஞ்ஞானக் கலைக் களஞ்சியமாகவும்,

சொல்லாய்வோருக்கு அகராதியாகவும்,

இலக்கணக்காரர்களுக்கு இலக்கண நூலாகவும்,

கவிஞர்கட்கு இலக்கியமாகவும்,

நீதிபதிகளுக்குச் சட்ட நூலாகவும் விளங்குகின்றது.

2. நல்வாழ்வு வாழ்ந்து நற்கதியடைய முனைவோருக்குக் குர்ஆன் அரு மருந்து.

இகலோக வாழ்வுடன் பரலோக வாழ்விலும் நற்கதியடையச் செய்யும் மூல மந்திரம் திருக்குர்ஆன்.

---

★ இவர் பிரெஞ்சு தேசத்தில் மேதை எனப் புகழப் பட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி நெறி,
ஏக தெய்வ வணக்கம்,
ஒற்றுமை,
கட்டுப்பாடு,
சகோதர வாஞ்சை,
சமூக சமய நீதி நெறி

ஆகியவைகளை ஒருங்கே கொண்டதுதான் திருக்குர்ஆனின் போதனைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 15 DR. திருமதி அன்னி பேசன்ட்

1. மேலைத் தேயங்களில் இருக்கின்ற ஒருதார மணம் உண்மையில் வெறும் பொய் யான பொறுப்பற்ற ஓர் ஒப்பந்தமேயாகும். கணவன் மனைவி மீது வெறுப்படைந்ததும் மனைவி தூக்கி வீசப்படுகின்றாள். இவளது ஒப்பந்தத்திற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை. படிப்படியாக இவள் விலைமாதாகி றாள். இது பலதார மணமுடித்த ஒருவ னோடு வாழ்வதை விட மிக மோசமானது. இந்த வகையில் இஸ்லாத்தின் பலதார மணம் சிறப்புடைத்து எனலாம்.

2. பெண்கள் பற்றித் திருக்குர்ஆனில் காணப்படும் சட்ட திட்டங்கள் நீதியான வையாகவும் பரந்த நோக்கம் கொண்டதா கவும் இருக்கின்றன. கடந்த இருபது ஆண்டு காலமாகத்தான் கிறிஸ்தவ நாடான இங்கி லாந்தில் பெண்களுக்கு சொத்துரிமை தரப் பட்டிருக்கின்றது.

---

★ இவர் "The Life and Teaching of Mohamed", "Book on Islam" என்னும் நூல்களை எழுதியவர்.

அயர்லாந்து நாட்டில் பிறந்து, இந்திய நாட்டிற்கு வந்து, இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட வீராங்கனை.

"ஹோம் ரூள்" இயக்கம் நடத்தியவர். அரசியலில் மட்டுமல்லாது மதம், தத்துவம் என்பவற்றிலும் ஆய்வு நடத்தியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இஸ்லாத்தில் பெண்கள் உரிமையோடும் சுதந்திரத்தோடும் வாழ்கின்றார்கள். கிறிஸ்து மதம் கூட இவ்வளவு உரிமையையும் சுதந்திரத்தையும் பெண்களுக்கு அளிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 16 DR. நோல்டார்க்

ஒருவன், தான் தனது மதத்திற்காக போராடி இரத்தம் சிந்தலாம். இது புனித மான செயல்.

ஆனால், ஒருவன் தனக்காக அல்லது தனது சகோதரனுக்காகப் போராடி இரத்தம் சிந்தினால் கூட மேற்கூறிய புனிதம் வந்து விடாது என்ற இஸ்லாத்தின் கருத்தில் இருந்தே இஸ்லாமியர் மதத்தின் மீது கொண்டுள்ள பற்றை நாம் உணர முடியும்.

---

★ இவர் எழுதிய நூல் "Book on Islam" என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 17 DR. ஏ. சேப்பன்

இன்றைய உலகின் அடக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம் இஸ்லாமே யாகும்.

இதனால்தான் இஸ்லாத்தின் சமத்துவ சகோதரத்துவ போதனைகளை நோக்கி இன்று உலகின் அடக்கப்பட்ட மக்கள் வீறுநடை போடுகின்றனர்.

---

★ இவர் ஒரு மருத்துவர். (D. G. O). தமிழ்நாடு இந்தியக் குடியரசின் மாநிலத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 18 குரு நானக்

1. புராணங்களுடைய காலமும் வேதங்களுடைய காலமுமாகிய எல்லாக் காலங்களும் முடிந்து விட்டன. இப்போது எஞ்சி இருப்பது குர்ஆனுடைய காலம் மட்டுமே. குர்ஆன்தான் உலகத்திற்கு இப்போது வழி காட்டக் கூடிய ஒரே ஒரு நூல்.

2. உலகச் சீரமைப்பிற்குப் பாடுபட்ட அண்ணல் நபிகள்பால் நான் கொண்டிருக்கும் மட்டற்ற மரியாதையின் காரணமாக இருமுறை அரேபியா சென்று வந்துள்ளேன்.

---

★ இவர் இந்தியாவில் சீக்கிய மதத்தை நிறுவியவர். இஸ்லாமிய போதனைகளையும் நடைமுறைகளையும் தனது மார்க்கத்தில் புகுத்தியவர். இவர் அணிந்த சட்டையில் இஸ்லாமிய கலிமா எழுதப்பட்டிருந்ததாகக் கூறுவர். இவர் பெருமானார் மீது கொண்ட பற்றின் காரணமாக இருமுறை மக்கா, மதீனா சென்று வந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 19 சேர். வில்லியம் மூயிர்

1 முகம்மது நபியவர்களின் பால்ய வயதில் அரேபிய தீபகற்பத்தின் நிலைமையானது சற்றும் முற்போக்கிற்கு இடமில்லாது, ஒரே மந்தகதியில் இருந்து வந்தது. அதனை மாற்றியமைத்தவர் முகம்மது நபி அவர்களே.

2. முகம்மது அவர்களுக்கு முன் அரபு தேசம், அத்தேசத்தின் மத விடயத்திலும், தேசிய விடயத்திலும் திருத்தம் செய்வதற்கு இடம் கொடாததாகவே காணப்பட்டது. அந்த அராபியரின் மதக் கொள்கையானது விக்கிரக வணக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதனால் எகிப்தில் இருந்தும் சிரியாவில் இருந்தும் வந்த ஒவ்வொரு விதமான மதமாற்ற முயற்சிகளுக்கும் இடமில்லாது போய்விட்டது.

3. இல்லற வாழ்க்கையைச் செம்மையாக நடத்தி மாந்தர்க்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள் பெருமானார் அவர்கள்.

---

★ இவர் வரலாற்று நூலாசிரியர். "The Life of Mohamed" என்னும் நூலை எழுதியவர்.

"Mohamed and Islam" என்னும் நூலை 1895ம் ஆண்டு எழுதினார். இந்நூல் இலண்டனில் பிரசுரமானது. அத்தோடு, "The Caliphate Its Rise, Decline and fall" எனும் நூலையும் எழுதியவராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முகம்மது நபியவர்களின் கொள்கைகளை மனமுவந்து முகமலர்ச்சியுடன் ஏற்றுக் கொண்டதும், தம்முடைய பகைவர்கள் விடயத்தில் இதமாகவும், பெருந்தன்மையுடனும் முகம்மது நடந்து கொள்வதில் தவறவில்லை.

அவருடைய தூதுக்கும், பிரச்சாரத்திற்கும் எதிராக நெடுங்காலமாக மக்காவாசிகள் நடத்திய போராட்டம் மக்காவை வெற்றி கொண்ட வீரர் முகம்மதை கோபமும், வெறுப்பும் அடையச் செய்து அந்நகரைத் தீக்களமாகவும், இரத்தக்களமாகவும் ஆக்கும்படி செய்யத் தூண்டியிருக்கவேண்டும்.

ஆனால்,ஒரு சில குற்றவாளிகளைத் தவிர ஏனையோருக்கு முகம்மது பொது மன்னிப்பளித்தார். மேலும், அவர் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்.

தம்மையும், தம் சகாக்களையும் ஏளனம் செய்து இழிவு படுத்தி சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட சம்பவங்களைச் சுட்டிக் காட்டாமல் எல்லோர் உள்ளங்களிலிருந்தும் அதனை மறக்கச் செய்தார்.

மேலும்,அவருடைய அதிகாரத்தை எதிர்த்துத் திட்டங்களைச் சீர்குலைப்பதில் பல ஆண்டுகள் ஈடுபட்டு வந்த அப்துல்லாஹ்பின் உபையும், அவருடைய சகாக்களுமான நயவஞ்சகர்கள் விடயத்தில் அவர் காட்டிய பொறுமை பாராட்டிற்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பயமுறுத்தலுக்கும், நிராகரிப்பிற்கும், சித்திரவதைக்கும் மத்தியிலே கொஞ்சமும் அசையாத இறை நம்பிக்கையை வைத்துக் கொண்டு இறையச்சமில்லாத மக்களிடையே பாவமன்னிப்பைத் தேடும்படி பிரச்சாரம் செய்தார்.

இதனால் தொல்லைகளுக்கும், அபாயத்திற்கும் உள்ளானார். இந்த இக்கட்டான நிலையில் அவர் காட்டிய பொறுமை மெச்சத்தக்கதாகும். மேலும் அவருக்கு வாக்களிக்கப்பெற்ற பாதுகாப்பு வெகுதூரத்தில் இருந்து (மதீனாவில் இருந்து) வந்ததும் அவருடைய சகாக்கள் அனைவரும் மக்காவை விட்டு வெளியேறும் வரையில் மிகப்பொறுமையாகக் காத்திருந்து மக்காவைவிட்டு வெளியேறினார்.

இம்மாதிரியான போராட்டத்திற்கு ஒப்பான ஒன்றை வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தாலும் கண்டு கொள்ள முடியாது. எமது முயற்சி வீணாகவே முடியும்.

6. சர்வ சக்தியும் படைத்த இறைவன் தனக்குத் துணையாக நிற்கின்றான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்கு இல்லாதிருந்தால் இவ்வளவு பிரமாண்டமான சாதனைகளை அவர் சாதித்திருக்க முடியாது.

7. அக்காலத்தில் அராபிய மக்களிடையே எண்ணில் அடங்காமல் மண்டிக்கிடந்த குலப் பிரிவுகள்தாம், எம் கவனத்தை முதலில் ஈர்ப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தனித்தனிக் கூட்டமாக வாழ்ந்தனர்.

போரும், பூசலும் அவர்களிடையே அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருந்தன. இரத்தத் தொடர்பால் ஒன்றுபட்டவர்கள் கூட, அற்ப விடயங்களைக் கூறிக்கொண்டு பிளவுபட்டு ஒருவருக்கொருவர் தீராத பகைமை பாராட்டினர். அவர்களுடைய பிளவைப் போக்கி ஒன்றுபடுத்தவல்ல சக்தி எதுவென்பது தீராத பிரச்சினையாகவே என்றென்றும் இருந்துவந்தது. இறுதியில் முகம்மது நபி (ஸல்) ஒருவரால்தான் அது தீர்த்து வைக்கப்பட்டது.

8. சென்ற பதினான்கு நூற்றாண்டுகளாக திருக்குர்ஆனில் உள்ளது போன்று பரிசுத்தமான பிழையற்ற திருவசனங்களையுடைய வேறு ஒரு வேதம் இவ்வுலகில் தோன்றவே இல்லை.

9. இஸ்லாத்தில் கடவுள் கொள்கையும், நீதி மனிதாபிமானம் பற்றிய போதனைகளும், சிலைகளையும் அதுபோன்ற பொருட்களையும் வணங்கிய மத்திய ஆபிரிக்கர்கள் போன்றோரை ஓர் உயர்நிலைக்குக் கொண்டு வரக் காரணமாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 20 பேரறிஞர் சேர். எட்வின் அர்னோல்ட்

1. உண்மையை உரைத்த நபி நாதருக்கு திருக்குர்ஆன் பக்க பலமாக ஆதாரங்களை அளித்து மேலும் ஊக்குவித்தது. இயேசு கிறிஸ்துவை குர்ஆனும், நபி நாதரின் போதனைகளும் கௌரவித்துள்ளன. உண்மையை உணர்த்தும் குர்ஆன் உத்தம மான பண்பினை மக்களுக்கு போதித்து வழி நடாத்தியுள்ளது. உன்னதமான போக்கினையுடைய அப்போதனைகள் எதிர்காலத் தவருக்கும் ஏற்றதென ஒப்புக்கொள்ள எவரும் தயங்கமாட்டார்கள்.

2. முகம்மது நபி போதித்த இஸ்லாம் சமயத்தின் உயிர்நாடி, ஏக தெய்வக் கொள்கையாகும். இறைவனின் கட்டளைக்குச் செவிசாய்த்தல் அதன் இருதயமாகும்.

---

★ இவர் "சொர்க்க கீதம்" என்னும் மகுடத்தில் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். கீழைத்தேய இலக்கிய நூல்களை மொழிபெயர்த்தவர். "Light of Asia" எனும் நூலின் ஆசிரியர்.

இந்தியாவில் "பூனா" வில் கல்லூரி அதிபராகக் கடமையாற்றியவர். இவரது மற்றொரு நூல் "Pearls of the Faith" என்பதாகும். இந்நூல் இறைவனின் நாமங்களையும், பொருளையும் கவிதையில் கூறுகிறது. "விசுவாசத்தின் முத்துக்கள்" என்பது இதன் பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 21 சேர். வில்பிரட் பிளான்ட்

1. மனித குலத்திற்கு இஸ்லாம் தரக்கூடிய நன்மையான காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன.

எனவே, மனித வர்க்கத்தைத் தன் பக்கத்தில் ஈர்ப்பதில் அது தோல்வியுறாது.

எந்த விதமான ஐரோப்பிய முன்னேற்றமும் நாகரிகமும் மக்களுக்கு வழங்கும் நன்மைகளையெல்லாம் விட, மனித இனத்திற்கு அதிகப் பலனைத் தரவல்லது இஸ்லாமேயாகும்.

---

★ இவர் "இஸ்லாத்தின் எதிர்காலம்" என்ற நூலின் ஆசிரியராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 22 சேர். தோமஸ் அர்னால்ட்

1. இனப்பாகுபாட்டை ஒழிப்பதில் இஸ்லாம் கண்ட வெற்றிக்கு நிகரான ஒன்றை உலகில் வேறு எந்தவிதமான கோட்பாடும் கண்டதில்லை.

2. ''ஈதுல் அள்ஹா'' எனும் ஹஜ்ஜுப் பெருநாளை தங்களின் சொந்த இல்லங்களில் கொண்டாடும்போது அவர்களுடைய எண்ணங்கள் புனித மக்கா நகரில் கூடியிருக்கும் மற்ற முஸ்லிம் சகோதரர்பால் செல்லுகின்றன.

ஆகவே, நம்பிக்கையாளர்களின் நினைவுகள் ஹாஜிகளின்பால் அன்பும் பரிவும் கொண்டெழுகின்றன.

3. இஸ்லாம் ஒன்றுதான் உலகில் நிலவும் எல்லாத் துன்பங்களுக்கும் சரியான தீர்வு காணவல்லது.

---

★ இவர் ''உலகின் மேற்கத்திய இனங்கள்'' என்னும் நூலின் ஆசிரியராவர். அத்தோடு, ''The Caliphate'' எனும் நூலையும் எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 25 சேர். ஸி. பி. இராமசுவாமி

இஸ்லாம் பல அரிய தத்துவங்களை உள்ளடக்கி உள்ளது. ஏனைய மதத்தினரை மிக நட்பாகவும் சிநேகமாகவும் நடத்தக் கூடிய மதம் இஸ்லாம் ஒன்றுதான். இஸ்லாம் மதத்தால் உலகத்தாருக்கு பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன.

---

★ ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தென் இந்தியாவில் புகழோடு விளங்கியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 24 DR. ஏ. எம். லோத்ரொப்ஸ் டோடர்

இஸ்லாமியர் இன வெறி பிடித்தவர்களாகவும் அநாகரிகமானவர்களாகவும் கொள்ளையர்களாகவும் இருக்கவில்லை. அவர்கள் புத்திசாலித்தனமான, கற்றலில் ஆர்வம் கொண்ட, கலாச்சாரப் பண்புகளை மதிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். முதல் மூன்று நூற்றாண்டுகளில் இஸ்லாமிய இராச்சியம் உலகில் மிகவும் நாகரிகமடைந்த பகுதியாக இருந்தது.

---

★ இவர், "The New World of Islam" "இஸ்லாத்தின் புதிய உலகம்" என்னும் நூலை எழுதினார். இது லண்டனில் 1932 ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 25 DR. ஏ. பெறத்ரென்ட்

"அறிவைப் பெறுவது ஒவ்வொரு முஸ்லிமின் அதாவது ஆண், பெண் இரு பாலாரதும் கடமையாகும்."

"சீனா சென்றும் சீர் கல்வி தேடு," "கற்றவர்கள் என் பின் உரித்தாளிகள்" என்பன போன்ற பெருமானாரின் கருத்துக் கள் கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

மேலும், தனித்துவமான நாகரிகத்தைப் படைத்தவர்கள், குர்ஆனின் போதனைகளைப் பின்பற்றியவர்களே.

---

★ இவர் "Contribution De Arabs and Progress De Science" எனும் நூலை வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 26 பேராசிரியர் டிரேப்பர்

1. மனிதர்களுக்குள் முகம்மதைப் போல் மனித சமுதாயத்தின்மீது அதிக செல்வாக்கைப் பிரயோகித்த எவருமே கிடையாதென்பேன்.

2. கருத்தளவிலும், கொள்கையளவிலும் உள்ள தத்துவ உண்மைகள் முன்னேற்றத்தை விளைவிக்கமாட்டா எனவும், உண்மைகளைக் கண்டறிவதற்கான நம்பிக்கையானது நிகழ்ச்சிகளை உற்றுநோக்கும் ஆய்வு முறையோடு இணைந்திருக்கவேண்டுமெனவும், முஸ்லிம் விஞ்ஞானிகள் உணர்ந்திருந்தனர். எனவே அவர்களின் ஆராய்ச்சியில் செயல்முறை ஆய்வு வழியும், புலன்களால் உணர்ந்து பெறப்படும் நடைமுறை முடிவுகளுமே முழுக்கமுழுக்க இடம்பெற்றிருந்தன. இந்த அறிவியல் இயக்கத்தின் விளைவுகள் அவர்களுடைய அன்றைய தொழில்துறையில் அபாரவளர்ச்சி நிலையில் மிகத் தெளிவாகக் காணப்பெற்றிருக்கின்றன.

---

★ இவர் The Struggle between Religion and science ''மதத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் இடையிலான போராட்டம்'' என்னும் நூலை எழுதினார்
இவர் நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய முஸ்லிம் விஞ்ஞானிகளுடைய நூல்களில் நாம் எமது இன்றைய சகாப் தத்தின் ஆக்கங்கள் என நினைத்துக்கொண் டிருக்கும் பல விஞ்ஞானக் கொள்கைகளும் சித்தாந்தங்களும் இடம்பெற்று இருப்பது வியப்பை அளிக்கின்றது.

அத்தகையவற்றுள் உயிர்ப்பொருள் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடும் (Doctrime of evolution of Organie Cengs) ஒன்றாகும்.

இது ஒரு நவீனக்கொள்கை எனக் கருதப்படுகின்றது. ஆனால் இக்கொள்கை அன்று முஸ்லிம்களுடைய பள்ளிகளில் கற்றுக் கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 27 பேராசிரியர் ஜோன்ஸன்

1. முகம்மது நபியவர்கள் தோற்றுவித்த அரசு தெய்வத்தன்மை பொருந்திய ஒரு அரசாகும். புனிதத்தன்மை கொண்ட இந்த அரசு முற்றமுழுக்க ஜனநாயகத்தன்மை கொண்டது. மனித இனம் முழுவதும் பின் பற்றக்கூடிய கோட்பாடுகளை உடையது. இக்கோட்பாடுகள் தேவையான எல்லாவற் றையும் உள்ளடக்கியது.

முகம்மது நபியவர்களின் எளிய வாழ்க்கை அவருடைய மனிதத்தன்மையை வெளியாக்கிவிட்டது.

எனவே இவையாவும், முகம்மது நபியவர்களை இன்றைய நாகரிகத்துடன் இணைத்துள்ளன.

---

★ இவர் ''கீழ்த்திசை மதங்கள்'' என்னும் நூலின் ஆசிரியராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 28 பேராசிரியர் ஏ. ஜே. ஆர்பரி

1. கலை வல்லுனர்களின் கலைக்கூடமாகவும்,
இலக்கிய மேதைகளின் கவிதைத் திறனாகவும்,
விஞ்ஞானிகளின் செயல்திறனுக்குரிய ஆய்வு
கூடப் பிரதிபலிப்பாகவும் நீதி நெறியின்
கலங்கரை விளக்கமாகவும்,
ஒற்றுமைப் போதனையின் சிகரமாகவும்,
ஏகத்துவ வாழ்வின் பிரதிபலிப்பாகவும்
இஸ்லாத்தின்வேத நூலாகிய திருக்குர்
ஆன் விளங்குகின்றது.
இது என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

---

★ இஸ்லாத்தைப்பற்றியும், அதன் தத்துவத்தைப் பற்றியும் ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டவர். குர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.
இவர் திருமறையில் இருந்து Introduction with selections என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 29 பேராசிரியர் ஸ்றாக்கர் குரோன்ஜி

மனித சமுதாயத்தின் சங்கமொன்றை நிறுவ வேண்டியது அவசியம் என்ற கருத்தை இஸ்லாம் எமக்குக் கொடுத்துதவுகின்றது.

மற்றெந்த மதமும் இந்த அளவுக்கு வலியுறுத்தும் வகையில் நெருங்கி வரவில்லை. ஏனெனில் முகம்மது நபியவர்கள் மக்களுக்கு அறிவுறுத்திய மார்க்கத்தின் அடிப்படை மனிதர்கள் யாவரும் சம சம உரிமை உடையவர்களே என்ற கொள்கையைக் கொண்டதாகும்.

ஏனைய இதர சமூகங்கள் இதனைக் கண்டு நாண வேண்டியதாக இருக்கிறது.

---

★ இவர், ''இன்றைய முஸ்லிம் உலகு'' என்னும் நூலின் ஆசிரியருமாவர்.

2. **1961 ல்.** முகம்மதிய மார்க்கம் (Mohammedian Religion) என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 30 பேராசிரியர் ரெனால்ட் ஏ. நிக்கல்சன்

குர்ஆன் மாணிடரின் பல்வேறு அம்சங்களை விரிவாக எடுத்துரைக்கும் ஒரு நூலாகும்.
இதன் மூலம் இஸ்லாத்தின் ஆரம்பத்தையும் ஆரம்பகால வளர்ச்சியையும் ஆதார பூர்வமாக நாம் அறிய முடிகின்றது.

---

★ இவர் மௌலானா ரூமியின் மஸ்னவி, கத்திரத்துல் அவ்லியா (வலிமார்களின் வரலாறு) கஸ்புல் மஹ்ஜூப் என்னும் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.

அறேபியரின் இலக்கிய வரலாறு எனும் நூலின் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 31 பேராசிரியர் ஈ.எச். பார்மா

குர்ஆனுக்குச் சமமான எந்த ஒன்றை யாவது வெளியிட சிறந்த அரபிய எழுத்தாளர் களாலும் முடியாமல் போனது ஆச்சரிய மானதன்று.

---

★ இவர் திருக்குர்ஆனை 1880ம் ஆண்டில் "The Quran Translated" என்னும் பெயரில் ஆங்கிலத்தில் 2 பாகமாக மொழி பெயர்த்தார்.

"அரபு இலக்கணம்" (Arabic Grammar) என்னும் நூலையும் எழுதியுள்ளார். மேலும் "கீழைத் தேச மெய்ஞ்ஞானம்" (Oriental Mysticism) என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 32 பேராசிரியர் லூயிஸ் மசிங்னன்

மிகச் சமத்துவமுடைய ஓர் எண்ணக் கருவினை வலியுறுத்தும் சித்தாந்தத்தையுடையது இஸ்லாம்.

தனவந்தர்களின் முதலாளித்துவத்திற்கும் தொழிலாளர்களின் கொம்யூனிசத்திற்கும் இடைப்பட்ட ஒரு நடுத்தர நிலையை இஸ்லாம் வகுக்கின்றது.

---

★ இவர் (Whither Islam) ''இஸ்லாம் எங்கே செல்கிறது'' என்னும் நூலின் ஆசிரியராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 35 பேராசிரியர்
## கே. எஸ். இராமகிருஷ்ணன் ராவ்

முகம்மத் அரேபியாவில் தோன்றிய போது அரேபியா பாலை வனமாக இருந்தது. பாலை வனத்தைத் தவிர அங்கு எதுவும் இருக்கவில்லை.

முகம்மதின் வரவால் அங்கு புதிய வாழ்வு ஏற்பட்டது.

புதிய கலாச்சாரம் ஏற்பட்டது. புதிய நகரிகம் ஏற்பட்டது. புதியதொரு ஆட்சி ஏற்பட்டது. இந்த ஆட்சிமொறோக்கோவிற்கும் மொறோக்கோவில் இருந்து இந்தியாவிற்கும் பரவியது.

அத்தோடு நின்று விடவில்லை. இஸ்லத்தின் செல்வாக்கு ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களிலும் பரவியது.

---

★ "MOHAMED THE PROPHT OF ISLAM" என்னும் நூலை எழுதியவர்.

இவர், இந்தியாவைச் சேர்ந்த ஒரு ஹிந்துக் கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர்.

இவருடைய நூல் 1985ம் ஆண்டு 100000 பிரதிகளும்

1986ம் ஆண்டு 10000 பிரதிகளும் அச்சாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 34 சங்கைக்குரிய சகோதரர் ஐசாக் டெய்லர்

அஞ்ஞானத்தில் இருந்தும் மீட்கப்படும் மனிதர்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதைப் பார்க்கிலும் முஸ்லிம்களாக மாறுவதே அதிகம். சில பிராந்தியங்களில் கிறிஸ்தவ மதம் இஸ்லாத்தின் முன்னே நிச்சயமாகவே பின்னடைந்து கொண்டே செல்கின்றது. ஆனால் இஸ்லாமியரை கிறிஸ்து மதத்தின் பக்கம் திருப்புவதென்பது மிகமிகக்கேவலமாகத் தோல்வியடைந்துகொண்டே போகின்றது.

இந்தியாவிலும், ஆபிரிக்காவிலும் இஸ்லாத்தின் முன்னே கிறிஸ்தவம் மிகமிகப் பின்னடைகின்றது. ஜமைக்காவில் உள்ள நீக்ரோக்கள் பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவர்களாக இருந்துகொண்டு ''ஒபாய்'' மதத்திற்கே திரும்பிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இஸ்லாம் மதத்தின் பக்கம் ஒரு முறை திருப்பப்பட்ட எந்தவொரு ஆபிரிக்கரும் மீண்டும் தனது அஞ்ஞான மார்க்கத்தின் பக்கம் திரும்பிப்பார்த்ததுமில்லை. கிறிஸ்து மதத்தைத் தழுவச் சம்மதித்ததுமில்லை.

---

★ இவர் கிறிஸ்தவ மதப் போதகர்.
இவர் 02 - 05 - 1887 ல் கிறிஸ்தவக் கோயில்களின் காங்கிரஸ் மகாநாட்டின் அமைப்பாளர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 35 சங்கைக்குரிய சகோதரர் பாஸ்வோர்ச் ஸ்மீத்

1. அரசாங்கத்தின் தலைவராகவும், மத விடயத்தின் தலைவராகவும் இருந்து ஏக காலத்தில் ஸீசராகவும், போப்பாகவும் விளங்கிவருகின்றார். ஆனால் அவர் போப்பிற்குரிய படாடோபமில்லாத ஒரு போப்பாகவும், சீசருக்குரிய சைனியங்கள் இல்லாத ஒரு சீசராகவுமே விளங்கிவந்தார். ஒரு நிரந்தரப்படை இல்லாமலும், மெய்க்காப்பாளர் இல்லாமலும், அரன் மனையொன்று இல்லாமலும், நிரந்தரமான ஒரு வருவாய்க்கு வழி இல்லாமலும் இறைவனது அதிகாரத்தைக் கொண்டே தான் இவ்வுலகின்கண் ஆட்சிபுரிந்ததாக எவரேனும் கூறிக்கொள்ள உரிமை பெற்றிருப்பாராயின் அத்தகையவர் முகம்மது (நபி) அவர்களாகவே இருந்து வந்தார் - ஏனெனில் அவர் எல்லாவிதமான அதிகாரத்தையும், அதற்குரிய உபகரணங்கள் இல்லாமலும், அதற்குரிய உதவிகள் இல்லாமலும் பெற்று இருந்தார்.

---

★ இவர் கிறிஸ்தவ மதகுரு. இவர் ''முகம்மதுவும், முகம்மதிய மதமும்'' (Mohamed and Mohammedanism) என்னும் நூலை எழுதினார் எம். ஏ. பட்டதாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முகம்மது ஒரே ஒரு அற்புதத்திற்குத்தான் உரிமை கொண்டாடினார். அதுதான் குர் ஆனை உலகிற்குக்கொணர்ந்தது. உண்மையில் ஐயமில்லாமல் அது ஒரு அற்புதம்தான்.

3. வரலாற்றில் - முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த ஒரு அதிர்ஷ்டத்தின் காரணமாக நபி நாயகம் அவர்கள் மூன்றுவிதமான ஸ்தாபகராக விளங்குகின்றார்.

1. அவர் ஒரு சமுதாயத்தின் ஸ்தாபகர்.
2. அவர் ஒரு சாம்ராஜ்யத்தின் ஸ்தாபகர்.
3. அவர் ஒரு மதத்தின் ஸ்தாபகர்.

4. நிச்சயமாக முகம்மது நபியவர்கள் ஐரோப்பியப் பேரரசரான 'சார்லஸ்' போன்ற பல தரப்பட்ட அமைப்புக்குள்ளான மனிதர்களையெல்லாம் ஒன்று சேர்த்து தங்களது ஆட்சிக்குள்ளாக்கவில்லை. நிச்சயமாக முகம்மது நபியவர்கள் மார்க்கஸ் அரீலியஸ் போன்று தத்துவஞானி மன்னருமல்ல.

கலப்பற்ற பகுத்தறிவு வாதம் மட்டும் கொண்டு பல நூற்றாண்டுகள் சிந்தனை உலகத்தை ஆட்கொண்ட அரிஸ்டோட்டில் அல்லது பேகன் போன்ற தத்துவஞானியாகவும் இருக்கவில்லை. மன்னன் ஜஸ்டீனியன் போன்று மனித இனம் யாவற்றிக்குமென சட்டம் தொகுத்தவருமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான்ஸ்டன்டடைனைப் போன்று மலி வாகவும், சிரமமின்றி எளிதாகவும் முதன் மையானவர், தலைமையானவர், என்ற பட்டத்தினைப் பெறவுமில்லை.

உலகப்பற்றையெல்லாம் துறந்து வாழ்ந்த 'ஸ்டாயிக்ஸ்' போன்றவராகவும் இவர் இருக்க வில்லை.

... ஆனால் அவர் ஒரு நாட்டின் தலைவ ராகவும், ஒரு மதத்தினுடைய தலைவரா கவும் திகழ்ந்தார்.

இவர் சிறிதும் எழுதவோ, படிக்கவோ தெரியாதவராக இருந்தும் நமக்கு அவர் ஒப்பற்ற நூலினைத் தந்துள்ளார்.

அது ஒரு கவிதையாகவும், சட்ட நூலா கவும், பொது இறை வணக்கத்தினைப் போ திக்கும் தொகுப்பாகவும், சுருங்கக் கூறின் எல்லாம் அடங்கிய மறையாகவும் இருக் கிறது. அதில் பொதிந்து கிடக்கும் அற்புத மான அருள் நடைக்கும், அறிவு நுட்பத்திற்கும் பேருண்மைக்குமாக உலகத்தில் வாழும் மக்க ளில் ஆறில் ஒரு பங்கினர் ஏற்றிப் போற்றிக் கண்ணியத்துடன் மரியாதையுடன் மதித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அவர் எதைச் செய்ய முடியு மென்று கூறினாரோ அதனை அவரே செய் வதை அவரது தோழர்கள் நேரடியாகப் பார்த்துள்ளனர். முகம்மது நபியவர்களின் நேர்மைக்கும், வாய்மைக்கும் இவை தவிர வேறு என்ன சான்று தேவை?

முகம்மது நபியவர்கள் ஆரம்பத்தில் தம் மைப்பற்றி என்ன கூறினார்களோ அதையே இறுதிவரை சொல்லி வந்தார்கள். அதாவது தாம் இறைவனின் தூதர் அடியான் என்பதாம்.

இதனை எந்த உயர்ந்த தத்துவமும் உண்மையான கிறிஸ்தவமும் ஒரு நாள் ஒப்புக் கொண்டு அவரை ஒரு தீர்க்கதரிசி- இறைவ னின் அருளுடைத் திருநபி என்று நம்பி யேயாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 36 சங்கைக்குரிய டபிள்யூ. வில்சன்காஷ்

இஸ்லாத்திற்கே உரிய ஒரு பெருமையை இஸ்லாம் அதன் மக்களுக்கு வழங்குகிறது.

அது இறைவனுடன் நேரடித் தொடர்பு என்பதாகும்.
இஸ்லாத்தின் பல கவர்ச்சிகளுள் இதுவும் ஒன்றாகும்.

---

★ இவர் "The Expension of Islam" என்னும் நூலை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 57 சங்கைக்குரிய
ஜேம்ஸ் செல்கிர்க்

இலங்கையில் வாழும் இஸ்லாமியர்கள் மத்தியில், கிறிஸ்தவ வெளியீடுகள், வேத நூல்கள் ஆகியவற்றை விநியோகிக்க முயன்ற போது அவர்கள் ஆத்திரமடைந்ததை கண்டேன்.

அவற்றையெல்லாம் முற்றாகப் புறக்கணித்து வருகிறார்கள்.

எந்தவொரு மிசனறிமாரும் இவர்களிடையே ஒரு பாடசாலையாயினும் நிறுவுவதில் வெற்றியடையவில்லை.

இது எதைக் குறிக்கிறது என்றால் அந்த அளவிற்கு இலங்கை முஸ்லிங்கள் இஸ்லாத்தில் பற்றுடையவர்களாக இருக்கிறார்கள்.

இஸ்லாத்தைத் தவிர வேறெந்த மதத்தையும் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள். இஸ்லாமியர்கள்.

---

★ ஐரோப்பாவைச் சேர்ந்த இவர் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் கண்டிப்பிரதேசத்தில் சமயப்பணியாற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ ௩௮ சர்வ பள்ளி
## டாக்டர் ராதா கிருஷ்ணன்

1\. இஸ்லாத்தில் வேறு எந்தச் சமயத்திலும் காணப்படாத ஒரு தனிச் சிறப்பாக அமைந்திருக்கும் உலக சகோதரத்துவம், யாராலும் மறைக்க முடியாத ஒன்றாகும்.

2\. பொதுவாழ்வில் ஜனநாயகமே இஸ்லாத்தின் இலட்சியம்.

3\. ஒவ்வொரு மனிதரையும் இஸ்லாம் தன்னுடைய பரந்த சகோதரத்துவ அமைப்பிற்குள்ளே அழைக்கிறது. அந்த மனிதர்களின் நிறமும் இனமும் எப்படி இருந்தாலும் இஸ்லாம் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஒவ்வொருவரும் இறைவனின் உண்மைத் தொண்டராக விளங்கமுடியும் என்ற உண்மையை இஸ்லாம் ஒப்புக் கொள்கின்றது.

---

★ இவர் இந்தியாவின் உப ஜனாதிபதியாக இருந்தவர்.
இங்கிலாந்தின் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.
ரஸ்யாவில் இந்தியத் தூதுவராக இருந்தவர்.
சேர் பட்டம் பெற்றவர்.
பல நூல்களின் ஆசிரியர்.
அரசியலறிஞர், தத்துவஞானி, கல்விமான்.
தம்ம பதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 59 டாக்டர் நாவலர் இரா நெடுஞ்செழியன்

அறியாமை இருளில் அமிழ்ந்து கிடந்த மக்களுக்கு அறிவொளியூட்டி, அவர்களைத் தேற்றி, காட்டுமிராண்டிகளாக இருந்த மக்கட் கூட்டத்தை நாகரிகச் செப்பமுடையவர்களாக ஆக்கி, விலங்கு உணர்வோடு உழன்று கிடந்த மக்களைப் பண்பாடு உடையவர்களாகச் செய்தது இஸ்லாம்.

மனிதப் பண்பற்று வெறியுணர்ச்சியோடு உலவிக் கொண்டிருந்த மக்களை அன்புடையவர்களாக- மதிப்புடையவர்களாக- அருளுடையவர்களாக- மாண்புடையவர்களாக ஆக்கி, செயற்கரிய பலவற்றைச் செய்து காட்டியவர் நபிகள் நாயகம்,

---

★ தமிழ் உலகிலே ''நாவலர்'' எனப் புகழப்பட்டவர்.
தமிழ் நாட்டின் கல்வி மந்திரியாக இருந்தவர்.
தமிழ் நாட்டின் அரசியல் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்.
எம். ஏ. பட்டதாரி.
டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 40 இந்திய ஜனாதிபதி இராஜேந்திரப் பிரசாத்

ஒன்றிணைந்த சமுதாய அமைப்பின் வளர்ச்சிக்கு நல்ல சேவை செய்த வல்லமை படைத்த சக்திகளுள் ஒன்று இஸ்லாம்.

தனி மனிதன் ஒழுக்க நியதிகள் சட்டம், சமுதாய நீதி ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து அமைந்திருப்பது இஸ்லாமிய மார்க்கமே யாகும்.

இஸ்லாமிய மார்க்கத்தில் போற்றப்படும் சமத்துவம், நீதி, சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயம் உருவாவதைத்தான் இந்திய அரசியல் அமைப்பும் எதிர் நோக்குகிறது.

---

★ இந்திய சுதந்திரப் போரிலே மகாத்மாக் காந்தி யோடு தீவிர பங்கெடுத்துக் கொண்டவர்.
இந்தியாவின் முதல் ஜனாதிபதி. எம். ஏ. பட்டதாரி. முசாபர்பூரில் கல்லூரிப் பேராசிரியராக இருந்தவர் கல்கத்தா உயர் நீதிமன்ற வழக்கறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 41 பௌத்த அறிஞர் மைத்திரி மூர்த்தி

எந்த மதத் தலைவரையும்விட வெற்றியீட்டியவர் என முகம்மது நபியை மதிப்பிட்டால் மிகையாகாது.

அவர் தாம் போதித்த இஸ்லாத்தின்படி ஒப்புவமையற்றதொரு சமூக அமைப்பைக் கட்டியெழுப்பி அதைத் தம் கண்ணால் கண்டார் என்பது வரலாறு கூறும் உண்மை.

அவரது போதனைகள் அரபு நாட்டில் மட்டுமன்றி, அனைத்துலகிற்கும் பொருத்தமானவை.

அவர் வெறுமனே மதத் தலைவர் மட்டுமல்ல; மனிதனின் முழு வாழ்க்கையையும் சீரமைக்கும் சிறப்பான கொள்கையைத் தந்த சமுதாயத் தலைவர்.

---

★ இவர் ''மதமும் மடிந்த உலகமும்'' என்னும் நூலை எழுதியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 42 பூதான இயக்கத் தலைவர் விநோபாஜி

கடைத் தெருக்களில் அலையாதீர் என்பது நபி பெருமானாரின் வாக்கு. இன்றைய மது பான அலங்காரக் கடைத்தெருக்களின் கவர்ச் சிகளைக் காணும் பொழுதுதான் பெருமானா ரின் ஆய்வுரை எம்மைச் சிந்திக்கத் தூண்டு கிறது.

---

★ காந்திஜீயின் சீடரான இவர் பூதான இயக்கத்தின் தந்தை. ''கீதப் பேருரைகள்'' என்பது இவரது உன்ன தப்படைப்பு.

இஸ்லாமியப் போதனைகளைப் புகழ்ந்து பேசுவது இவரது இயல்பு ''கடவுளுக்கு அடுத்த படியாக நான் எதையாயினும் விரும்புவேனாயின் அது கணிதம்தான்'' என்ற கட்டுரையை எழுதியவர்.

அபார ஞாபக சக்தி கொண்டவர். இவர் ஒரு பிரமச்சாரி, யோகி, அறிஞர், எனப் பலவாறு போற் றப்பட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 43 மாவீரன் நெப்போலியன் போனபார்ட்

1. நான் இறைவன் ஒருவன் என்று கூறும் முஸ்லிமாவேன். நான் முகம்மது நபியைப் போற்றுகின்றேன். குர்ஆனின் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு நான் அரசியலை அமைக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

2. உலகின் வெவ்வேறு நாடுகளிலும் உள்ள அறிஞர்களையும் கல்விமான்களையும் ஒன்று திரட்டி திருக்குர்ஆனின் அடிப்படையில் ஆட்சியை அமைப்பேன். இதுவே உலக மாந்தர்களின் மகிழ்வான வாழ்விற்குரிய வழி.

3. முஸ்லிம்கள் இலக்கியம், கலை என்பவற்றிற்கு அதிகமான மதிப்புத் தந்தனர். ஏனெனில் வீரத்திற்குச் சமமாகக் கலைகளை மதித்தனர். அல் மன்சூர், ஹாரூன் அல் றசீத், அல் மாமூன் போன்றோர் கலைகளையும் விஞ்ஞானத்தையும் செழுமைப்படுத்தினர்.

---

★ இவர் சாதாரண குடும்பத்தில் பிறந்து சாதாரண போர் வீரனாகப் பட்டாளத்தில் சேர்ந்து தளபதியாகி அரசனாகி உலகையே ஆளும் நிலைக்கு வந்து ரஸ்யாவின் மீது படையெடுத்து தோல்வி கண்டு வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்.

''முடியாது என்ற சொல்லும், பயம் என்ற சொல்லும் இவரது அகராதியில் கிடையாது என வாழ்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 44 கதே

1. குர்ஆனைப் படிப்பதற்காக எத்தனை முறை எடுத்தாலும் அது கருத்தைக் கவர்ந்து, வியப்பை அளித்து, கடைசியில் தனக்கு மதிப்பளிக்கும்படி நம்மைத் தூண்டுகின்றது.

மேலும் அதனுடைய ஈர்ப்புச்சக்தி நம்மை அதன்பால் கொஞ்சம் கொஞ்சமாக இழுப்பது தெரிகின்றது. இறுதியாக அது தன்னைப் பழித்தவர்களை தன் மீது ஆவல் கொண்டவர்களாகவே செய்து விடுகின்றது.

2. ஒவ்வொருவரும் அவரது சொந்தக் கருத்தைப் புகழ்ந்து கொள்ளுதல் புரிந்து கொள்ளும் தன்மை இல்லாததினாலேயாகும்.

இஸ்லாம் என்பது இறைவனுக்கு அடிபணிதலாகும். நாங்கள் ஒவ்வொருவரும் வாழ்வதும், மடிவதும் இஸ்லாத்திலேயாகும்.

---

★ இவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர்.
புகழ் பெற்ற கவிஞர்.
தத்துவ ஞானி, அறிஞர்.
1749 - 1832 ம் ஆண்டு காலப் பகுதியில் வாந்தவர்.
ஆராய்ச்சியாளர்.
"West Ost Licher Divan" எனும் நூலின் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முகம்மது நபி ஒரு தத்துவஞானி, பேச்சாளர், நபி, சட்ட வியலாளர், போராளி, எண்ணங்களை ஆட்கொள்பவர், பகுத்தறிவுக் கோட்பாடுகளையும், சிலைகளில்லாத நாகரிகத்தையும், நிறுவியவர்.

இருபது பிராந்தியப் பேரரசுகளினதும், ஒரேயொரு ஆத்மீகப் பேரரசினதும் ஸ்தாபகர்.

மனிதப் பெருந்தன்மை அளக்கப்படும் சகல நிறுவைகளையும் கொண்டு தீர்மானிக்கையில், நாம் ''அவரை விடவும் ஒரு பெருந்தகை உள்ளாரா எனக் கேட்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 45 தோமஸ் கார்லைல்

1. முகம்மது நபி (ஸல்) அவர்கள் வெறும் சூனிய வித்தைக்காரர் என்றோ, போலிவேஷதாரி என்றோ, வேண்டுமென்றே பேச அவாவுடன் வேலை பார்த்துணர்ந்த தந்திரக்காரர் என்றோ நாம் ஒரு பொழுதும் எண்ண முடியாது. அம்மனிதருடைய மொழிகள் அசத்திய காரியங்களல்ல. சூனியமல்ல. வெறும் வேசமல்ல. இயற்கையின் சொந்த அகத்துக்குள் இருந்தே வெளியாக்கப்பட்ட அக்கினி வேகம் தாங்கிய ஓர் ஆன்மாவின் திரண்ட உருண்டையாகும். இவ்வுலகினையே உத்வேகத்தால் கிளப்பி விடுவதற்கு இவ்வுலக சிருஷ்டிகர்த்தரே அதனை அவ்வாறு ஆக்ஞாபித்திருந்தார்.

---

★ இவர் ''வீரர்களும், வீர வணக்கமும்'' என்ற நூலை எதினார்.

on Heroes and Hero - Worship என்பது அதன் ஆங்கிலப் பெயர். இந்நூல் 1924 ம் ஆண்டு இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது.

1795 - 1881 ம் ஆண்டு காலப் பகுதியில் வாழ்ந்தவர். ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மதத் தீர்க்கதரிசிகளிடையே முகம்மது ஒரு மாவீரராவார்.

3. விசுவாசம் கொள்ளத்தக்க வேதம் ஒன்று இருந்தால் அது குர்ஆனேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 46 அல்பிரட் டபிள்யூ மாட்டின்

1\. அக்கால இஸ்லாமியப் பிரதிநிதிகளுக்கு இவ்வுலகம் கணக்கிலடங்காத வகையில் கடமைப் பட்டதாக இருக்கின்றது. ஏனெனில், இவர்களே அரிய பொக்கிசங்களாகிய மத்திய கால கிரேக்க இலக்கியங்களை புதிய முறையில் மொழிபெயர்த்தும், கலா ஞானக் காலத்தைத் துரிதப் படுத்தியவர் களுமாவர். இதுவுமன்றி புகழுடன் விளங்கும் தாஜ்மகால், அல்ஹம்ரா முதலிய இடங்களில் சித்திர சிற்பக் கலைகளின் உன்னத தரத்தைக் காட்டியும் உள்ளார்கள். மேலும், கணித சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், வான சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், முதலியவைகளில் சிறந்தும் விளங்கினார்கள். இவர்களே சரசன் இராஜ்யத்தில் கல்லூரிகளை அமைத்தவர்கள். பக்தாதிலும், சாகிராவிலும் உலகப் பிரசித்தி பெற்ற நூல் நிலையங்களை நிறுவியவர்கள்.

---

★ இவர், இஸ்லாத்தைப் பற்றியும், பெருமானாரைப் பற்றியும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் மாநகரம் குடிசைகள் நிறைந்து அதன் தெருக்களெல்லாம் துர் நாற்றம் வீசிய காலத்திலே கோர்ட்டோவா நகரம் (குர்த்துபா) அழகிய சுத்தமான வீதிகளுடனும், காட்சித் தோட்டங்களுடனும் சிறப்புற்று விளங்கிற்று.

பெரும்பான்மையான மக்களால் அரபுப் பாசையே பேசப்பட்டு வந்தது. இன்றும் நாம் இஸ்லாமியர் கற்றுக் கொடுத்த நெய்தல் முறையைக் கொண்டு நெசவுத் தொழில் செய்து தரையையும் சுவர்களையும் அலங்காரம் செய்கின்றோம். அவர்கள் கற்றுக் கொடுத்ததைக் கொண்டுதான் நறுமணக் கலவைகள் செய்து சுகந்த இன்பத்தால் மகிழ்வுறுகின்றோம். அவர்களால் எழுதப்பட்ட உயரிய கணித நூல்களில் நின்றுமே நம் குழந்தைகளுக்குக்கணிதம் கற்பிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கைக்குரிய

## ★ 47 ஜி. எம். றொட்வெல்

1. பெருமானார் அவர்கள் மனிதர்களை அறியாமையில் நின்றும், விக்கிரக ஆராதனையில் நின்றும், விடுதலை செய்யும் நல்நோக்கத்துடனேயே எல்லாக்காரியத்தையும் செய்து வந்தார்கள்.

அன்றியும் தனக்குள்ளே புகுந்து கிடக்கும் உயரிய ஏக தெய்வக் கொள்கையை பகிரங்கமாக பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பதுவும், அவர்களுடைய முக்கிய நோக்கமாக இருந்தது.

முகம்மதைப் பின்பற்றிய முஸ்லிங்களின் நடைமுறைகளும், குணமும் எல்லாவிதத்திலும் மேம்பட்டதாகவே காணப்படுகின்றன என்ருல் நான் முகம்மதைப்பற்றிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது.

---

★ இவர் The Quran என்னும் நூலை 1918ம் ஆண்டு எழுதினார். இது இலண்டனில் வெளியிடப்பட்டது.

இவர் 'Life of Mohamed' என்னும் நூலையும் எழுதினார். M. A. பட்டதாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தத்துவஞானத்தையும், மெய்யறிவையும் கற்றுக்கொடுத்த திருக்குர்ஆன் உலகத்திற்கு மருத்துவத்தையும், வான சாஸ்திரத்தையும் உணர்த்திற்று. சீனாவும், ஐரோப்பாவும் தமக்கென மமதை கொள்ளும் பண்டைய நாகரிகத்தை அளித்தவர்கள் குர்ஆனின் போதனையைப் பின்பற்றிய இஸ்லாமியர் என்பதை அவர்கள் மறந்து விடலாகாது.

கிராணடாவை வெற்றிகண்ட இவர்களின் ஆக்கசத்தியை எவ்வளவுதான் மெச்சினாலும், அது மிகையாகாது. ஏகத்துவத்தைப் போதிக்கும் திருக்குர்ஆன் மனிதனின் ஆக்க சக்தியை கௌரவித்துப் படைப்புக்கள் எல்லாவற்றிலும் அவன் மேலானவன் என உணர்த்திற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 48 திருமதி சரோஜினி நாயுடு

1. எந்தச் சகோதர அடிப்படையில் புதிய உலகத்தை நிர்மாணிக்க இன்றைய நாகரிக உலகம் விரும்புகின்றதோ அதையே ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் (1400) முகம்மது நபி அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள்.

2. நீதி உணர்வானது இஸ்லாத்தில் வியக்கத்தக்க கொள்கைகளில் ஒன்றாக இருக்கின்றது.

நான் குர்ஆனைப் படித்தபோது அதில் கூறப்பட்டிருந்த பல விடயங்களை அவதானிக்க முடிந்தது.

அதில் கூறப்பட்டிருக்கும் வாழ்க்கைமுறை எந்த மாறுதலுக்கும் பொருந்தக்கூடிய சத்தியக் கோட்பாடுகளைக் கொண்டதாகும்,

---

★ இவரது 'The Ideals of Islam' என்னும் பேச்சுத் தொகுப்பும், எழுத்துத் தொகுப்பும் 1918 ம் ஆண்டு மெற்றாசில் வெளி வந்தது.

இந்திய விடுதலைப் போராட்ட காலங்களில் மிகப் பிரபல்யம் பெற்ற பெண்மணியாகத் திகழ்ந்தவர் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமெங்கிலும் நடைமுறைப் படுத்தக் கூடிய சத்தியக் கோட்பாடுகளைக் கொண்டது இஸ்லாம்.

ஜன நாயகத்தைப் போதித்து நடைமுறைப் படுத்திய மார்க்கம் இஸ்லாம் தான்.

ஒவ்வொரு மனிதனையும் சகோதரனாகப் பாவிக்கக் கூடிய இஸ்லாத்தின் ஐக்கியத்தை நினைத்து அடிக்கடி மெய் சிலிர்த்திருக்கிறேன்

3. இஸ்லாம் ஜனநாயகத்தைப் போதித்தது அதனை நடைமுறைப்படுத்திக் காட்டியது.

தொழுகைக்கான பாங்கொலி கேட்டதும் அரசனும், ஆண்டியும் பள்ளிக்குள் வந்து சரி சமனாக நின்று, இறைவனே பெரியவன், மற்றெல்லோரும் சமமானவர்களே என்பதை நிலை நிறுத்திக் காட்டவைத்தது இஸ்லாம் மட்டும் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 49 கவிஞர் லாமார்டைன்

1. தத்துவம் செறிந்த வேதாந்தி,
பிரசங்கி,
தீர்க்கதரிசி,
சட்டம் தயாரிப்பவர்,
யுத்த வீரர்,
கருத்துக்களை ஜெயித்தவர்
பகுத்தறிவு நிறைந்த போதனைகளை நிலை நாட்டியவர்,
இருபது பிராந்திய சாம்ராஜ்யங்களை நிறுவி அவற்றை ஒரே ஆத்மீக சாம்ராஜ்யத்தில் சேர்த்து வைத்தவர்,
இவர் தான் முகம்மது நபி (ஸல்) அவர்களாவர்.

மனித மேன்மையின் எந்த அளவு கோல் கொண்டு அளந்தாலும் இவரைவிட மேன்மை யானவர் இருக்க முடியுமோ என்று கேட்கவே தோன்றுகின்றது.

---

★ இவர் மாபெரும் பிரஞ்சுக் கவிஞரும், அறிஞரு மாவார்' 1854 ல் இவர் எழுதிய ''துருக்கியர் வரலாறு' என்னும் நூல் உலகப் பிரசித்தி பெற்றதாகும்.

1790 - 1869 ஆண்டு காலப் பகுதியில் வாழ்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆண்டவன் பால் ஒப்பற்ற இலட்சியத்தை அடைய முடியாமல் மனிதனைத் தடுக்கும் சாதாரண இழிந்த சடங்குகளை ஒழிப்பதற்கு சாதாரண மனிதனால் முடியாது.

ஆனால் முகம்மதோ தனது அன்பு வழி தவிர வேறு எவ்வித ஆயுதமும் இன்றி பாலையின் மூலை முடுக்குகளிலே ஒரு சில விரல் விட்டு எண்ணக் கூடிய மனிதர்களின் துணையோடு அவற்றை அழிக்க முனைந்தார்.

நிலையானதும், அசாதாரணமானதுமான இம்மாதிரியான ஒரு சமுதாயப் புரட்சியினை குறுகிய காலத்திற்குள் எவருமே இதுவரை சாதித்ததில்லை.

நபியவர்கள் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்ததில் இருந்து இரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளேயே உலகின் எல்லோராலும் புகழப் பட்டும் மூன்று கண்டங்களிலும் அதிகாரம் செலுத்தியும் இஸ்லாம் பெருமையுற்றது.

இலட்சியத்தின் உச்சியை அடைவதற்காகப் போராடி வெற்றியையும் எய்திய நபியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது உலக வரலாற்றிலேயே இவரைப் போல் ஒருவரைக் காண முடியாது. படைபலத்தையும், சட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களையும், பேரரசுகளையும் உண்டாக்கி ஆதிக்கம் செலுத்தி அவை தங்கள் காலத்திலேயே அழிந்து ஒழிந்து கொண்டிருப்பதைக் கண்டு கொண்டிருக்கின்றனர் பலர்.

இது வரலாறு கூறும் உண்மை.

இவற்றை யெல்லாம் உருவாக்கி இழிந்த எண்ணங்களை அழித்து உருவ வணக்கத்தை அடியோடு அறச் செய்து மனித உள்ளங்களை மறுவில்லா ஏகத்துவத்தின்பால் உறுதி கொள்ளவும் செய்தார்.

ஒவ்வொரு எழுத்துமே சட்டமாக மிளிரும் முறையிலே இவர்மூலம் கறையில்லாத மறையொன்றை உலகிற்கு உவந்தளித்தான் இறையோன். பல மொழி, பலமதம் என்றிருந்த மக்களை ஒரே புனித இனமாக இஸ்லாத்தின் கீழ் ஆத்மீக உணர்ச்சியுடன் ஒன்று சேர்த்தது அந்த அருள்மறை.

ஏகனைத் தவிர ஏனைய கடவுள்களை இல்லாமல் செய்வதையும் உருவமில்லாத அந்த இறைவனை நேசிக்கும் ஆர்வத்தையும் செழித்து வளரும் குணமாக உருவாக்கினார் நபி பிரான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது வாழ்வு, இவரது தியானம், மூடக் கொள்கைகளை கண்டிக்கும் இவரது வீரம், விக்கிரக ஆராதனைக்காரர்களை எதிர்ப்பதில் இவரது அச்சமின்மை, மக்கா வாசிகள் பல வழிகளிலும் இவருக்கு இழைத்த இன்னல்களை பதினைந்து ஆண்டு காலம் சகித்துக் கொண்டிருந்த இவரது பொறுமை, கொடுமையிலும் தனிமையாய் மதினா செல்ல முனைந்த இவரது துணிவு, அஞ்ஞான இருளோட்டி மெஞ்ஞான ஒளி காட்ட வல்லவராய் அமைந்த இவரது சொற்பொழிவுகள், சிறுபான்மையினரின் உதவியோடு பெரும்பான்மையினருடன் போராடிய இவரது திறமை

வெற்றியின்பால் இவரது நம்பிக்கை,

எதிரிகள் மீது இவரது இரக்கம்,

முடிவற்ற இவரது இறை பிரார்த்தனை,

இவரது மரணம்

அதற்குப் பின்னரும் இவரால் இஸ்லாத்திற்குக் கிட்டிய வெற்றி முதலியவற்றை நோக்கும்போது இவரது இலட்சியத்தின்பால் இவருக்கிருந்த உறுதியும், இவரது மெய்யான தன்மையும், ஐயம் திரிபற நமக்கு விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 50 சங்கைக்குரிய சகோதரர் ஜி. மார்க்கோலியத்

1\. உலக மக்களின் கவனத்தை ஈர்த்து, பகுத்தறிவுப் பறை சாற்றும் முக்கிய நூல்கள் எல்லாவற்றையும் விட மேலானதாகி மக்கள் மனதிலே முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது குர்ஆன்.

இது உலக மக்களை வழி நடாத்திச் செல்லும் வேத நூல்கள் எல்லாவற்றையும் விட உலகமே கண்டிராத ஓர் அற்புத சக்தி மூலம் மக்களை நன்மையின்பால் ஏவ உதவிற்று.

அற நெறியைக் கற்றுக் கொடுத்து, ஏகத்துவத்தைப் போதித்து, சகோதரத்துவத்தை நிலைநிறுத்தி, சமதர்மத்தை மெய்யுறுத்தி ஒழுக்க ஆசாரங்களுக்கு வரைவிலக்கணமிட்டு, தாய் தந்தையோர், மூத்தோர், மற்றையோரை மதிக்கச் செய்து, சகாப்தமே கண்டிராத மாற்றத்தை ஊக்குவித்து, ஆக்கத்தை ஏற்படுத்திய பெருமை திருக்குர்ஆனையே சாரும்.

---

★ இவர் மதகுருவும் பேராசிரியருமாவார். "Introduction to Rod wells Translation of the Koran' என்னும் நூலை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவும், ஆபிரிக்காவும், ஏன் முழு உலகமுமே இம்மாற்றத்தின் பிரதி பலிப்பை தன்னகத்தே ஏற்றுக் கொண்டு விட்டது.

2. முகம்மது நபியின் வரலாறு வரலாற்று ஆசிரியர்களுக்கு முடிவற்றதொரு சங்கிலித் தொடர் போன்றுள்ளது. அதில் ஒரு இடம் சம்பாதிப்பது என்பது கண்ணியத்திற்குரிய தாகும் எனக் கருதுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 51 ஜோன் டெவன்போட்

1. நீதிநெறி வகுத்தோருள்ளும், வெற்றி பல கண்டோருள்ளும், எவரது சரித்திரத்தை எடுத்துப் பார்த்தாலும், இஸ்லாத்தின் தூதராம் முகம்மது நபியை அவர்களின் சரித்திரத்தைப்போல விரிவானதாயும், முற்றிலும் உண்மை அடங்கினதாயும், ஒரு சரித்திரம் கிடையாதென்பது திட்டவட்டமான உண்மையாகும்.

2. திருக்குர்ஆன் இஸ்லாமிய உலகிற்கு பொதுவானதொரு கோட்பாட்டு நடைமுறைத் தொகுப்பாக அமைந்திருக்கின்றது.

சமுகம், அரசியல், வாணிபம், நீதி, குற்றவியல், தவறுகளுக்குத் தண்டனை அளித்தல் போன்றவை சம்பந்தமான நியாயச் சட்ட நூலாகும். இது

---

★ "ஜோன் டெவன் போட்" என்பவர் "Apology For Mohamed and the Quran என்னும் நூலின் ஆசிரியரும் "Mohamed and the Quran" என்னும் நூலின் ஆசிரியருமாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சமயச்சடங்குகளிலிருந்து லோகாயதக் காரியங்கள் வரை, ஆத்ம விமோசனத்திலிருந்து உடல் நலம் வரை, இம்மையின் தண்டனையில் இருந்து மறுமையின் தண்டனை வரை வாழ்க்கையின் ஒவ்வொரு துறையையுமே கூறியுள்ளது.

3. பத்தாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பாவில் வளர்ந்தோங்கி வரும் ஞானங்களையெல்லாம் அதாவது அவை பௌதீகமாகவோ அல்லது கணிதமாகவோ அல்லது வான சாஸ்திரமாகவோ அல்லது தத்துவ சாஸ்திரமாகவோ அது எதுவாக இருந்தாலும் சரியே அவை ஆரம்பத்தில் அராபியப் பள்ளிகளில் இருந்தே இங்கு வந்தவை என்பதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 52 ஸ்டான்லி லேன் பூல்

1. முகம்மது நபியவர்கள் மக்காவைக் கைப்பற்றி வெற்றிவாகை சூடினார்கள். இத் தினம்தான் அவருடைய மனதைக்கட்டுப் படுத்தி கோபங்களையெல்லாம் அடக்கிய வெற்றித் தினமாகும். பல்லாண்டுகளாக தன்னை இழிவு படுத்தி சோகத்திற்கும், கொடுமைக்கும் உள்ளாக்கிய மக்காக் குறைஷிகளை யாதொரு தடையும், மனக்கிலேசமும் இன்றி மன்னித்து விட்டார்கள். இவருடைய படை இவரைப் பின்பற்றி நடந்து கொண்டது. அமைதியாகவும், சமாதானமாகவும், சாந்த மாகவும் மக்கா நகருக்குள் நுழைந்தது எந்த

---

★ இவர் "The Speaches and the Talk of the Prophet Mohamed" என்னும் நூலின் ஆசிரியர். இந்நூல் 1882 ஆம் ஆண்டு இலண்டனில் வெளியிடப் பட்டது.

இவர்" Lectures on Islam" என்னும் நூலின் ஆசிரியருமாவார். இவர் சுல்தான் சலாஹுத்தீனின் வரலாற்றையும் எழுதியவராவார்.

இவர் மத்திய கால எகிப்தின் சரித்திரம் "History of Egypt in the Middle Age" என்னும் நூலையும் எதினார்.

அத்தோடு The Moors in Spain "ஸ்பெயினில் அரபிகள்" எனும் நூலையும் எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொரு வீடும் சூறையாடப் படவில்லை. எந்த வொரு பெண்மணியும் இழிவு படுத்தப்பட வில்லை.

2. துறவிகள் தம்மையே தாம் வேண்டு மென்று வதை செய்து கொண்டு தியானம் செய்வதை இஸ்லாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. இதனை இஸ்லாம் அருவருக் கத் தக்கதாய்க் கொள்கின்றது. சமுதாயத்தில் நற்பண்புகளை வளர்ப்பதையே அது எப்போ தும் ஆதரித்து வந்துள்ளது.

இப்பண்பாட்டினை செயற்படுத்தி ஒழுகு வதுதான் மனிதனின் கூடி வாழும் தன்மைக்கு மெருகூட்டுகின்றது. இஸ்லாம் ஒரு சமுதாயத் திட்டத்திற்கு அடி கோலியது. அத்திட்டத்தில் அறம், நட்பு, ஒருவர்க்கொருவர் நம்பிக்கை யுடன் செயல்படல், ஆகியவற்றின் உயிர்த் துடிப்புக்குள் இருந்துகொண்டே இருக்கின்றன. அறிவுரைகளாலும், நடைமுறைகளாலும் பெருமானார் அவர்கள் இக்கருத்துக்களை அராபியர்களின் உள்ளத்தில் ஆழப் பதியும் படி செய்து விட்டார்கள். இதன் விளைவாக பல நூற்றாண்டுகளாக இருந்து வந்த கோத் திரப் பகைமைகள் சீக்கிரத்தில் மறைந்தன.

அந் நாட்டவரிடம் குடிகொண்டிருந்த பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற மனப் பாங்கு செத்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதாபமும், சகோதர வாஞ்சையும் தோய்ந்து நெருங்கிய பந்தத்தால் உண்மை விசுவாசிகளின் உள்ளங்கள் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்டன. ஒரே மதத்தைச் சார்ந்த சகோதரர்கள் சம உரிமைகளையும், சம சலுகைகளையும் அனுபவிக்க வசதியளிக்கும் ஒரே பொது உரிமை அரசின் (Common Welth) குடிகள் என்ற உணர்வை அவர்கள் இப்போது பெறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 53 பிரெஞ்சுப் பேராசிரியர் ஜோர்ஜ் ரோத்ரன்ட்

இயற்கையின் எழிலை வர்ணிக்கும் பல கருத்தோவியங்கள் குர்ஆனின் அழகிற்கு அழகு செய்கின்றன. உயிர்த்துடிப்புடன் வெளிப் படும் இச்சொற் சித்திரங்களை வாய்விட்டு வாசிக்கும்பொழுது பாலை மணல் பாவிசைப் பது போலவும், மலைக்காற்று மதுரகீதம் பாடுவது போலவும், அலைகடல் ஆர்த் தெழுவது போலவு நாம் உணர்கின்றோம். சொல்லழகும், பொருட் செறிவும் நிறைந்த திருக்குர்ஆனின் வசனங்கள் நம் இதயத்தை ஈர்க்கின்றன. அன்பு பற்றியும், அருள் பற்றியும். மனிதப்பண்பு பற்றியும், இயற்கை எழிலைச் சுற்றிப்படரும் கருத்துப்படையல்கள் மூலம் மெய்யறிவு பற்றியும், உணர்ந்து வியப்புறு கின்றோம். விண்வெளியில் கண்சிமிட்டும் நட்சத்திரங்கள், வியனுறு வானவெளியில் விளைந்திடும் அற்புதங்கள், நியதி தவறாது இரவைப் பின்தொடரும் பகல், ஆழ்கடலில் ஆடி அசைந்து செல்லும் மரக்கலங்கள்,

---

★ இவர் பிரஞ்சுப் பேராசிரியர். "பேரறிவுக்களஞ்சியம் குர்ஆன்" எனும் நூலின் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்து முற்றத்திலே வண்ணச் சிற கடித்து வளைந்து வளைந்து செல்லும் பறவைக் கூட்டங்கள்,

பாய்ந்தோடும் குதிரை இனம்,
ஆடியசையும் அழகு மலர்,
வீசும் தென்றல்,
வேகும் நெருப்பு,
கார் முகில் கூட்டம்,
இனிய நீர்ப்பெருக்கு
பெண்மையின் குளிர்நோக்கு,
பச்சிளம் குழந்தையின் பரவசச்சிரிப்பு,
கனிந்து தொங்கும் பழக்குலைகளை
தாங்கிநிற்கும் ஈச்சமரங்கள்,

நம்பிக்கை கொண்ட மனிதர்களே, அல்லாஹ்வின் வலிமையை உணர்ந்துகொள் வதற்கு இவைகள் இணையற்ற சான்றுக ளாகும். அவனியெல்லாம் அவன் புகழ் பாடுகின்றன.

சுவை தரும் கனியும், நயம் தரும் மரமும் இறைவன் பெற்றியைப் போற்றுகின் றன. நறும் பூந்தென்றல் பூத்துச்சிரிக்கும் புதுமலரின் நறுமணத்தை அவன்பால் ஏந்திச் செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சுடரின் ஒளிதாங்கி, சிவந்து நிற்கும் அதிகாலைக்கும், கனல்பறக்கும் வெயிலோடு வெண்மையொளி உதிர்க்கும் நண்பகலுக்கும் நிலத்திரைபோர்த்தி அந்திக்கதிரவனை வழியனுப்பிவைக்கும் மாலை நேரத்திற்கும் அவனே பேரதிபன். இவ்வாறு இயற்கையின் எழில் கொண்டு இறைவனின் பேராதிபத்தைதை வர்ணிக்கின்றது திருக்குர்ஆன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 54 ரோம் லண்டா

இஸ்லாத்தில் விஞ்ஞானமும், மதமும் வெவ்வேறு வழிகளில் செல்லவில்லை.
உண்மையில் இஸ்லாம் விஞ்ஞானத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கின்றது.
இஸ்லாத்தில் தத்துவமும், விஞ்ஞானமும், மதத்திற்கு அப்பால் நிற்கவில்லை.
அவை மதக் கோட்பாடுகளை பகுத்தறிவு கேற்ப விளக்கி மதத்தின் பெருமையை உயர்த்துகின்றன.

எனவே தான் மேற்கத்திய நாடுகளில் நடந்தது போலன்றி இஸ்லாமிய விஞ்ஞானம் மார்க்கத்திற்கும் மக்களுக்கும் ஒருங்கே சேவை புரிகின்றது.

---

★ "இவர், இஸ்லாமும் அரபுகளும்" என்ற நூலின் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 55 ஸ்ட்ரேன் லூட் கோப்ஸ்

I. தன்னையொட்டியிருக்கும் கிறிஸ்தவ நாடுகளில் இஸ்லாமியப் பண்பாடும், கலாச்சாரமும் ஊடுருவியதன் விளைவுதான் ஐரோப்பாவில் ஏற்பட்ட கல்வி மறுமலர்ச்சிக்கு மூலகாரணமாகும்.

இதனை வேறு ஒருவகையாகக் கூறுவதாயின் ''ஐரோப்பாவின் மறுமலர்ச்சியை உண்டாக்கியதே இஸ்லாம் தான்''.

---

★ இவர் ''உலகப் பண்பாட்டிற்கு இஸ்லாம் ஆற்றிய உதவி'' என்னும் நூலை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 56 வரலாற்று ஆசிரியர் கிப்பன்

1. இஸ்லாத்தின் பிரச்சாரம் மட்டும் எம்மை ஆச்சிரியத்துள் மூழ்கடித்து விடவில்லை. அதன் நிரந்தரத்தன்மைதான் உண்மையில் எம்மை வியப்பிற்கும், பாராட்டிற்கும் உரியதாக்கு கின்றது. திருக்குர்ஆனால் ஈர்க்கப்பட்டு அதன் வழி நடக்கும் இந்தியர்களும், ஆபிரிக்க தேசத்தவர்களும், துருக்கியரும் இஸ்லாம் பன்னிரெண்டு நூற்றாண்டுகளுக்கு முன் மக்கா மதீனா ஆகிய இடங்களில் ஏற்படுத்திய புரட்சியை இன்றும் கூட காப்பாற்றி வருகின் றார்கள். அன்றிருந்த அதன் பரிசுத்த தன்மை யும், அது ஏற்படுத்திய பூரணமாற்றமும், இன்றுவரை அவர்களின் மனதில் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே பதிந்துள்ளன.

2. உலகத்தின் அதிகாரபீடத்தின் உச்சியை அடைந்த நாளிலும், முகம்மது நபியவர்கள் அரச போகத்தையும், மண், பொன் ஆசைக ளையும் வெறுத்தார்கள்.

---

★ இவர் உலகப் புகழ் பெற்ற வரலாற்றாசிரியர். ''ரோமப் பேரரசின் வீழ்ச்சியும், முடிவும்'' என்ற நூலின் ஆசிரியருமாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 57 அமெரிக்க வரலாற்று ஆசிரியர் வாஷிங்க்டன் இர்விங்

1. சுயநலத்தைக்கருதி பெருமையைத் தேடுவோர் போல அல்லாமல் முகம்மது நபியவர்கள் தாங்கள் வறுமையுடன் இருந்தகாலத்தில் எந்தவிதமான எளிய வாழ்க்கையை நடாத்தி வந்தார்களோ அது போன்றே தாங்கள் அதிகார உச்சத்தையடைந்து மா மன்னராக திகழ்ந்தபோதும் கூட எளிய சாதாரண வாழ்க்கையையே மேற்கொண்டார்கள். மற்றவர்கள் தங்களுக்கு அரச மரியாதை செலுத்துவதை அவர்கள் வெறுத்தார்கள்; கண்டித்தார்கள்.

2. முகம்மது நபியவர்கள் தான் இறைவனின் தீர்க்கதரிசி என்று உலகிற்கு அறிவித்தது பொருள், செல்வங்களைப் பிறரிடம் இருந்து பெற்றுச் சீமானாக திகழவேண்டும் என்ற ஆசையினால் அல்ல.

அவர்கள் கதீஜாப் பிராட்டியாரை மணந்ததால் அவர் ஏற்கனவே சீமானாகிவிட்டார். மேலும் நபித்துவத்தின் முன்னரும் அவர்கள் பொருள், செல்வங்களைத் தேடித் திரிந்ததாகச் சரித்திரமே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அவர்கள் மக்களிடையே உயர்ந்த பதவியைப் பெறவேண்டும் என்பதற்காக தாங்கள் நபி என்று வாதாடினார்களோ? எனின் அதுவும் இல்லை.

காரணம் தாம் பிறந்த ஊரில் அறிவுக் கூர்மைக்காகவும், நேர்மைக்காகவும் ஏற்கனவே பெரும் பதவியைப் பெற்றிருந்தார்கள். அல்லது அதிகார ஆசைக்காக இவர்களை இவ்வாறு செய்யத் தூண்டிற்றா? எனின் அதுவுமில்லை.

ஏனெனில் குறைஷிக் குலத்தவர்களாலும், மற்றவர்களாலும் புனிதமாகக்கருதப்படும் கஃபா என்னும் தேவாலயத்தின் பாதுகாப்பின் பொறுப்பும் அதன் விளைவாக அப்புனித நகரின் ஆதிக்கமும் தலைமுறை தலைமுறையாக அவர்களது குடும்பத்திலேயே இருந்து வந்தன.

எனவே சூழ்நிலையும், அவர்கள் மக்களிடையே பெற்றிருந்த நன்மதிப்பும் அவ்வுயர் பதவிக்கும், ஆதிக்கத்துக்கும் எப்படியும் தங்களைக் கொண்டுசெல்லும் என்ற நம்பிக்கை கொள்ள அவருக்கு இடமிருந்தது. ஆனால் தங்கள் குடும்பத்தாரும் மற்றவர்களும் சொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ள மதக்கோட்பாடுகளுக்கும் தெய்வ வழிபாட்டு முறைகளுக்கும் விரோதமாகச் செயல்பட்டு அவற்றை அழிக்க முற்பட்டதால் அவர்களுக்கு மேலே கூறப்பட்ட பலாபலன்கள் எதுவும் கிடைப்பதற்கு வழியில்லாது செய்து விட்டார்கள்.

மேலும், பல தெய்வ வணக்கத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதனாலேயே எமது குடும்பத்தினருக்கு செல்வமும், மதிப்பும், அந்தஸ்த்தும் இருந்து வருகின்றது. எனவே அந்த நம்பிக்கையை தீவிரமாகத் தாக்குவதால் கஃபாவை வணங்குபவர்களான தம் சுற்றத்தாரின் பகையுய், கோபமும், வெறுப்பும் பழியும் தம் மீது குவிய முஹம்மது வழி செய்து கொண்டவராகின்றார்.

தாங்கள் செய்யும் இந்தத் தியாகங்களுக்குத்தான் நபியென்று சொல்லி வாழ்க்கையை நடாத்துவதற்கு ஏதாவது இலாபம் தேடும் நோக்கம் இருந்ததா என்றால் அதுவும் இல்லை. அதற்கு மாறாக அவர்கள் நபியென்று அறிவித்துப் பிரச்சாரம் செய்ய துவங்கிய பல்லாண்டுகள் வரை குறிப்பிடத்தக்க வெற்றியையும், பலனையும் அவர்கள் பெற வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கொள்கைகளைக் கூறித் தமக்கு அருளப்பட்ட வேத வசனங்களை எவ்வளவுக் கெவ்வளவு ஓதிக்காட்டினாரோ, அவ்வளவிற் கவ்வளவு ஏளனம், எக்காளம், இழிபேச்சு ஆகியவற்றிற்கு உள்ளாக்கப்பட்டார்கள். சித்திரவதைக்கும், கொடுமைக்கும் ஆளானார்கள்.

எனவே வாலிபம் நீங்கி முதுமைப்பருவத்தை நெருங்கும்போது அதுவும் தம்முடைய சீரழிந்த வாழ்க்கை நிலையையும், செல்வத்தையும் மீண்டும், மீண்டும் புனருத்தாரணம் செய்து திருத்தியமைக்க வாய்ப்புக் கிடைப்பது சந்தேகமாக இருக்கும்போது அவர் ஏன் பல்லாண்டுகள் பிடிவாதமாக பாதிரிகள் சொல்லுவது போல் நபியென்று போலிவேடம் போட வேண்டும். பின் அரசர்க்குரிய நிலையடைந்திருந்தால், தம்மிடம் வருகின்றவர்களை வழக்கத்திற்கு மாறாகத் தமக்கு அரச மரியாதை செலுத்துவதைக் காணும் பொழுது ஏன் அவர் தனது அதிருப்தியைக் காட்டினார். ஏன் இந்த மரியாதையை விரும்பவில்லை. உண்மையிலேயே இறைவனின் தூதர் நபி என்பதில் உள்ள நம்பிக்கையேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. திருக்குர்ஆனைவிட மிகப்பெரிய அற்புதம் வேறொன்றும் இருக்கமுடியாது. எழுதப்படிக்கத்தெரியாத மனிதனின் மூலம் இத்திருமறை வெளியாகி உன்னத நடையையும்' மறுக்க முடியாத கருத்தையும் இது கொண்டிருக்கின்றது. மனிதர்களின் ஒன்றுபட்ட திறமையினாலும் இதற்கு நிகரான ஒன்றை உண்டாக்க மூடியவே முடியாது.

---

★ இவர் உலகப் புகழ்பெற்ற அமெரிக்க வரலாற்று ஆசிரியராகும். இவர் "Life of Mohamed" என்னும் நூலின் ஆசிரியர்.

இவரது மற்றொரு நூல் Mohamed and His Successors என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 58 கவுண்ட் டோல்ஸ் டோய்

தீர்க்கதரிசி முஹம்மது நபியவர்கள் உலக வரலாற்றிலேயே அதி அற்புதமான மாறுதலை உண்டு பண்ணியவர்.

இந்த மாறுதல்கள் நன்மையையே செய்தன என்பதையும், இதற்கு முஹம்மது நபியே முழு முதற்காரணம் என்பதையும் எவருமே ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

---

● இவர் இரஷ்ய எழுத்தாளர் 'அலெக்ஸி நிகலாயவிச் டால்ஸ்டாய்'' என்பது இவரது முழுப் பெயர்.

நாடகங்களும், விஞ்ஞான அறிவியல் நூல்களையும் எழுதியவர். 1922ம் ஆண்டில் இவர் எழுதிய ''ஈலிற்றா'' என்னும் அறிவியல் நாவல் செவ்வாய்க்கிரகத்தில் இரஷ்யர்கள் இறங்குவது பற்றிய கற்பனையாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 59 ஹென்றி பிரேன்

1. மேல் நாட்டவர்கள் இஸ்லாம் மார்க்கம் பலாத்காரத்தினாலும், தீவிர பிரச்சாரத்தினாலும் பரப்பப்பட்டது என வாதிக்கின்றார்கள். உண்மை அவ்வாறல்ல. இஸ்லாத்தின் பால் ஒருவரைத் திருப்புவதற்கு பலாத்காரத்தை உபயோகிப்பதை குர்ஆன் அழுத்தமாகக் கண்டிக்கிறது இஸ்லாம் வேண்டுவதெல்லாம் அல்லாஹ்வுக்கு வழிப்படுதல் மட்டுமே. இணைவைப்போரின் மதக்கோட்பாட்டை இஸ்ஸாம் தாக்கவில்லை. அவற்றின் மீது அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையை அது புறக்கணிக்கின்றது

சாத்வீகமான இம்முறையைக் கையாண்டதினால்த்தான் முஸ்லிம் அல்லாதோரையும், அல்லாஹ்வின் பக்கம் அது ஈர்ந்தது. அதன் பயனாக முஸ்லிம் அல்லாதவர்கள் மனிதப் பண்பையும், மக்களிடத்தில் நல்ல மதிப்பையும் பெற்றார்கள். இஸ்லாத்தின் வாயில்களும் அவர்களுக்காத் திறக்கப்பட்டன. இணைவைப்போரையும் முஸ்லிம் அரசு தன் குடி

---

★ இவர் ''முகம்மதுவும், சொலமனும்'' என்னும் நூலை எழுதியவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக்கிக் கொண்டது. இஸ்லாத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டபோது நாடு, இனம் என்ற பதத்திற்கு அப்பால் அவர்களை இழுத்துச் சென்று மனித சமுதாயத்தின் உறுப்பினர் களாக அவர்களை ஆக்கியது.

ரோமர்கள் கிறிஸ்தவ சமயத்தை ஏற்ற போது அவர்களின் மனம் மட்டுமே மாறுத லடைந்தது.

ஆனால் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவி யதும் அவர்களின் ஆன்மாவும், உடலும் பெரு மாற்றத்தைக் கண்டன.

இது பெரும் மாறுதலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **60 கோபினோ**

ஏனைய பிற மதங்களை முறையாகவும், ஒழுங்காகவும் நடாத்துவதில் இஸ்லாம் மதத்தை விட அதிகதாராள மனப்பான்மையுள்ள மதம் வேறெதுவுமில்லை.

★ இவர் "மத்திய ஆசியாவில் மதங்களும், தத்துவங்களும்" என்னும் நூலின் ஆசிரியராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 61 எச். ஜி. வெல்ஸ்

1. இஸ்லாம் மார்க்கம் மனித வர்க்கத்தில் எல்லோரையும் சமத்துவமாக்கி முஸ்லிம்களுக்குள் எத்தகைய சாதி பேதங்களும் இல்லாமல் அந்தரங்க சகோதரத்துவத்தை நிலைநிறுத்துவதில் அதிகமான சக்தியைச் செலுத்தி இருக்கின்றது. இச் சமத்துவக் கோட்பாடானது இஸ்லாத்தின் மூல சக்தியாகவும் ஊற்றுக் கண்ணாகவும் இருக்கின்றது.

2. உலகில் முன்பிருந்த எந்த ஒரு சமுகத்தையும் விடவும் பரவலான கொடுமைகளில் நின்றும் கூடுதலான நிவாரணத்தை அளித்த ஒரு சமூகத்தை இஸ்லாம் உருவாக்கியது.

3. இஸ்லாத்தின் தன்வயப்படுத்தும் சக்தியும் ஒழுக்க நெறியும் இறைவனுக்கு அடிபணியும்

---

★ இவர் ஆங்கில சரித்திர ஆசிரியர்.
இவர் ''OutLine of History'' என்னும் நூலின் ஆசிரியருமாவர்.
அத்தோடு, ''First and last Things'' என்னும் நூலின் ஆசிரியருமாவர்.
புகழ்பெற்ற பேச்சாளர்.
அறிஞர் பெர்னாட்ஷாவோடு லண்டன் பேபியன் கழகத்தோடு (Fajian Society) சேர்ந்து உழைத்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையும் மனிதனுக்குக் கௌரவத்தைக் கொடுக்கின்றது. என நான் நினைக்கின்றேன்

எமது நவீன உலகில் அதன் சூத்திரங்கள் இல்லா விட்டாலும் அதன் தாற்பரியம் நிறைந்து காணப்படுகின்றது.

வல்லமை படைத்த ஓர் இறைவனைப் போற்றுவதாலும் கண்டிப்பான சட்டமும் ஒழுங்கும் கொண்ட அவனுடைய இராச்சியத் திற்காக சேவையாற்றுவதாலும் மனிதர்கள் விமோசனம் கண்டுள்ளார்கள் என்பதிலும் இனிமேலும் விமோசனம் காண்பார்கள் என்ப திலும் எனக்கு சந்தேகம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 62 ஈ. அலெக்சாந்தர் போல்

1. பல கிறிஸ்தவ அதிபர்கள் ஆட்சியாளர் கள் வெட்கித் தலை குனியும் அளவிற்கு முஸ் லிங்கள் அந்நிய மதத்தவர்கள் பால் அன்பும் சகிப்புத் தன்மையும் காட்டியுள்ளார்கள்.

---

★ இவரது "The Struggle for Power in muslim Asia" என்னும் நூல் 1923ம் ஆண்டு நியூயோர்க்கில் வெளியாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 63 வில்பிரட் கேன்ட் வேர்ஸ்மித்

கிறிஸ்து மார்க்கமானது சமீபத்திய ஆண்டுகளில் ஒரு சமூக மார்க்கமாக மாறிவரும் போது இஸ்லாம் ஆரம்பத்தில் இருந்தே ஒரு சமூக மார்க்கமாக இருந்து வருகிறது.

---

★ இவர் "Islam in the Modern World" என்னும் நூலின் ஆசிரியராவர்.

அத்தோடு "Islam in Modern History" என்னும் நூலையும் இவர் இலண்டனில் 1946ம் ஆண்டில் வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 64 எட்மன் பார்க்

1. முடி மன்னர் முதல் அடிமை வரை சகல மனிதர்களையும் கட்டுப்படுத்தக் கூடிய இஸ்லாமிய சட்டமானது உலகில் இது காறும் உண்டு பண்ணப்பட்ட மிகவும் கற்றுணர்ந்த புத்திக் கூர்மையான சட்ட நூல்களோடு இணைத்து உருவாக்கப்பட்ட சட்ட நூலாக இருக்கிறது. மதி நுட்பமும் கல்வி மேன்மையும் ஒளிமிகு அறிவாற்றலும் மிக்க நீதிச் சட்டம். இது போல் உலகில் இதுவரை இருந்ததில்லை.

---

★ இவர் பிரபல ஆங்கில அரசியல் மேதை. இவர் "Impeachment of warren Hastings" என்னும் நூலின் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 65 திரு ஜோசப் நூல்னார்

அனேகமான விடயங்களில் முகம்மது நபி (ஸல்) அவர்கள் என்றும் நிலைத்திருக்கக் கூடிய மாபெரும் விடயங்களைச் செய்துள்ளார்கள். உதாரணத்திற்கு சுத்தம் செய்தலாகிய உழுச் செய்தல் என்னும் கண்டிப்பான விதி முறை, தொழுகையோடு சம்பந்தமுடைய விதி முறை.

நோன்பிருக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதி முறைகள், நீதி முறைகளோடு கூடிய கோட்பாடுகள் என்பற்றைக் குறிப்பிடலாம். இவைகள் எளிதில் மாற்றி அமைத்துவிட முடியாத ஒழுக்க விதிகளாக அமைந்துள்ளன.

---

★ இவர் 'Islam and European civilization' என்னும் நூலின் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 66 திரு லேன்ஸ் போட் லாட்டன்

மதம் என்ற வகையில் இஸ்லாம் ஆபிரிக்காவிற்கு கிறிஸ்து மதத்தை விடப் பொருத்தமாகத் தெரிகிறது.

ஏன் உலகத்திற்கே பொருத்தமான மதம் இஸ்லாம்தான் என்று கூடக் கூறலாம்.

---

★ இவர், "The Sphere" என்னும் நூலின் ஆசிரியராவர். இந்நூல் இலண்டனில் 1928 ம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 67 ஸ்ரீ டங்கன் க்ரீன்லீஸ்

உலகில் வேதம் உள்ள மார்க்கங்கள் அனைத்தும் இறைவனால் அருளப்பட்ட மார்க்கங்கள் என்று இஸ்லாம் ஒப்புக் கொள்ளும் பெருந் தன்மையை நாம் போற்றாமல் இருக்க முடியாது.

---

★ இவர், "The Gospel of Islam" என்னும் நூலின் ஆசிரியராவர்.
இந்நூல் அடையாறில் 1948 ம் ஆண்டு வெளிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 68 விவேகானந்தர்

பூரணமான சமத்துவமும் சகோதர மனப்பான்மையும் இஸ்லாமியரிடையே நிலவ வேண்டு மென்று தமது வாழ்க்கையின் மூலமே மெய்ப்பித்து விட்டார் முகம்மது நபியவர்கள். இஸ்லாத்திலே வேறுபாடில்லை. சாதி வேற்றுமை இல்லலை.
கொள்கை வேற்றுமை கிடையா. வர்ண வேறுபாடுமில்லை.
பால் வேற்றுமையுமில்லை.
துருக்கிய சுல்தான் ஆபிரிக்காவின் அடிமைச் சந்தையில் ஒரு நீக்கிரோவை வாங்கி துருக்கிக்கு அழைத்து வரலாம்.
அந்த அடிமை முஸ்லிமாகி விட்டால் அதாவது இஸ்லாத்தைத் தழுவி விட்டால் அவனுக்குப் போதுமான தகுதியும் ஆற்றலும் இருக்கு

---

★ இவர், இந்தியாவிலே பிரிட்டிசாரின் ஆட்சியை எதிர்த்துப் போராடியவர்.

அமெரிக்காவிலே பல மேடைகளில் ஆங்கிலத்தில் பேசி அமெரிக்க மக்களின் நெஞ்சங்களில் இடம் பிடித்துக் கொண்டவர்.

''எழுமின், விழிமின், செயல் படுமின்'' என்பது இவரது தாரக மந்திரம் ஆகும். இதனை இளைஞர்களுக்கு எடுத்தோதிக் கொண்டே இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயின் சுல்தானின் மகளையே அவன் மணம் புரியலாம்.
இந்த நாட்டில் (அமெரிக்காவில்) நீக்கிரோ இனத்தவர்களையும் செவ்விந்தியர்களையும் நடத்துகின்ற முறையோடு ஒப்பிட்டுப் பாருங்கள். உண்மை புலனாகும்.
இந்துக்கள்தான் என்ன செய்கிறார்கள். இந்த விடயத்தில் படுமோசம்.

2. நாட்டிற்கு விமோசனம் தரக் கூடியது வேதாந்த மூளையும் இஸ்லாமிய உடலுமே யாகும்.

3. குர்ஆனும் அண்ணல் நபியின் வாக்கும் நேராகவோ மறைமுகமாகவோ சொல்லிக் காட்டாத விஞ்ஞானமோ கலையியல் துறையோ இல்லை எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 69 மேஜர் ஆர்தர் ஜீ. லீனோல்ட்

1. இஸ்லாம் உண்மையிலேயே அரும் பணி யாற்றி இருக்கிறது.
மனித குல வரலாற்றில் அது தனி முத்திரை ஒன்றைப் பதித்திருக்கிறது.
எக்காலத்திலும் அழிக்க முடியாவண்ணம் அம் முத்திரை ஆழப் பதிந்திருக்கிறது.
உலகம் அறிவொளி பெற்று வளரும் பொழுது தான் இதை ஒப்புக் கொள்ளும்.

2. இஸ்லாத்தின் போதனைகளில் இரு தன்மைகள் என்னை கவர்ந்துள்ளன.
அவைகளில் ஒன்று இறைவனைப் பற்றிய எண்ணக்கரு.
மற்றது மனித விவகாரத்தின் மகத்தான சொத்தாகிய நேர்மை.

3. இஸ்லாத்தைப் பூரணமாக விளங்க வேண்டுமானால் அதன் போதகர் முகம்மதைப் பற்றி அறிய வேண்டும். அவர் இருப்பிடம் இல்லாதவராக ஒழுங்கில்லாதவராக - வேலை யற்றவராக இருக்கவில்லை.

---

★ "Islam - Her Moral and Spiritual Value", என்னும் நூலை எழுதியவர்.
இந்நூல் 1927 ம் ஆண்டு இலண்டனில் வெளியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் எந்தக் கால கட்டத்திலும் மனித குலம் ஒரு போதும் கண்டிராத மாபெரும் தலைவர். இவர்

இதையறிந்தவர்கள் . இஸ்லாம் சிறந்த -உண்மையான போதனை என்பதை ஏற்றுக் கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 70 பேராசிரியர் பிலிப் கே. ஹிட்டி

1. இறைவன் ஒருவனே என்பதில் உள்ள திடமான உறுதிப் பாட்டிலும் சர்வ வல்லமையுள்ள அந்த இறைவனின் ஆட்சியின் மீது கொண்டுள்ள விசுவாசத்திலும் தான் இஸ்லாத்தின் முக்கிய பலம் இருக்கிறது.
மற்ற மதங்களைப் பின்பற்றுவோரிடையே காணமுடியாத மன மகிழ்ச்சியையும் நிம்மதியும் இஸ்லாத்தை பின்பற்றுவோர் முழுமையாக அனுபவிக்கிறார்கள்.
முஸ்லிம் நாடுகளில் தற்கொலை மிக மிக அரிதாகவே காணப்படுகின்றது.

2. திருக்குர்ஆன் என்பது இஸ்லாத்தின் இதயம்.
வானுலகில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் திரு விளக்கு.
அது மட்டுமல்ல அனைத்துக் கலை ஞானங்களின் தொகுப்பு.
அத்துடன் இந்த உலகிலேயே இறைவனின்

---

★ இவர் ஒரு கீழைத்தேய வியலாளர். இவர் "History of the Arabs" எனும் நூலை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராட்சி நின்று நிலவச் செய்யும் சட்ட திட்டங்களைப் கொண்ட அரசியல் சாசன மூமாகும்.

3. உலக மக்களில் ஏழுபேருக்கு ஒருவராக முகம்மதைப் பின்பற்றி வருகிறார்கள். முஸ்லிம்களின் தொழுகை அழைப்பு நாள் தோறும் இருபத்தி நான்கு மணி நேரமும் உலகைச் சுற்றிலும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

4 நான்கு இலட்சம் நூல்களுடன் பதினேழு நூல் நிலையங்களைக் கொண்டிருந்த கோர் டோவா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் சகல வசதிகளுடனும் நன்கு நீராடி வந்த நேரத்தில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் இருந்தோர் உடலைத் தண்ணீரால் கழுவுவது ஆபத்தான பழக்கம் என்று கருதி வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 71 எச். ஏ. ஆர். கிப்

1. மேற்குலகில் அதிக தூரம் விலகியிருக்கும் இரு துருவங்களுக்கிடையே இஸ்லாம் இன்னமும் சமநிலையை ஸ்தாபித்து வருகிறது. ஐரோப்பிய தேசிய உணர்வினால் ஏற்படும் அரசாங்கத்தையும் ரஸ்ய கொம்யூனிசத்தின் இராணுவ ஒழுக்க நெறியையும் ஒன்றுபோல் இஸ்லாம் எதிர்த்தாலும் இன்றைய ஐரோப்பாவினது குணாதிசமாக விளங்கும் பொருளாதார அம்சத்தில் மூழ்கிப் போகும் மேற்கிற்கு இஸ்லாம் இன்னும் அடிமையாகி விடவில்லை.

2. குர்ஆன் மனிதர்களால் உருவாக்கக் கூடிய ஒன்றல்ல.
குர்ஆன் முகம்மது நபியாலும் உருவாக்கப் பட்டதல்ல. குர்ஆனில் உள்ளதைப் போன்று பத்து வசனங்களை மனிதர்கள் உருவாக்கிக்

---

★ 1. இவர் ''Whither Islam'' என்னும் நூலின் ஆசிரியர்.
இந்நூல் 1932 ம் ஆண்டு இலண்டனில் வெளியானது.
2. இவர் ''OHAMMADANISM'' என்னும் நூலையும் எழுதியுள்ளார்.
இந்நூல் இலண்டனில் 1953 ம் ஆண்டு வெளிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டட்டும். முடியாவிட்டால் அவர்கள் குர்ஆன் இறைவனுடைய அருட்கொடை என்பதை ஏற்றுக் கொள்ளட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 72 பிடரிக் டி. லிட்ஸ்★

ஒரு முஸ்லிம் இறைவனின் நாட்டத்திற்கு மார்க்க ரீதியில் அடி பணிந்து விடுவதன் காரணமாக துயரின் போது பொறுமையைக் கையாளுவதோடு அழிவுமிக்க விபத்துக்களை பாராட்டத்தக்க மன உறுதியுடன் தாங்கிக் கொள்கின்றான்.

---

★ இவர் "Die Welt Des Islam" என்னும் நூலின் ஆசிரியராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 73 கொட்பிறே ஹிக்கின்ஸ்

இஸ்லாத்தை ஞாபகச் சின்னங்களோ சிலைகளோ, படங்களோ கடவுளின் தூயாரோ ஞாபகப்படுத்துவதில்லை.

நற்செயல்களற்ற விசுவாசத்தின் பயன்- மரணப் படுக்கையில் பாவத்திற்கு வருந்துதலின் பயன் போன்ற இவ்வாறான கொள்கைகள் இஸ்லாத்தில் இல்லை.

தூயாரோ மர்மமோ போலியான அற்புதச் செயல்களோ இல்லாத ஒரே இறைவனைப் போற்றும் பிரச்சாரத்திற்காகவே முகம்மது அனுப்பப்பட்டார் என்பதை ஏற்றுக் கொள்வதுவே இஸ்லாத்தின் ஏக தத்துவக் கொள்கையாகும்.

---

★ இவர் "Apology for Mohamed" எனும் நூலை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 74 றொபட் பிறிஃப் பெல்ட்

அரபு நாகரிகம் நவீன உலகிற்களித்த பல கொடைகளுள் விஞ்ஞானமே மிக முக்கியமானது.

ஆனால் அதன் பயன்கள் மிக மிக தாமத மாகவே உலகிற்குக் கிடைத்தன.

ஸ்பெயின் நாட்டில் அரபு நாகரிகம் உரு வாக்கிய அறிவுத் திறமை அந்த நாகரிகமே மறைந்து விட்ட பிறகு பல நூற்றாண்டு கள் வரையில் எந்த விதமான பயனையும் வழங்கவில்லை.

இஸ்லாமிய கலாச்சாரத்தின் செல்வாக்கிற் குற்படாததுஎன்று சொல்லக்கூடிய எந்த வொரு குறிப்பிடக்கூடிய அம்சமும் ஐரோப்பிய மறுமலர்ச்சியில் காணப்படவில்லை.

மேலும்,

வியத்தகு கண்டு பிடிப்புக்களுக்கும் கொள் கைகளுக்கும் மட்டும் நமது ஐரோப்பிய விஞ் ஞானம் அரேபியர்களுக்குக் கடமைப்பட் டிருக்கவில்லை.

மாறாக இதனை விட முக்கியமானதான

---

★ இவர் வரலாற்றுப் பேராசிரியர்.
"The Making of the Humanity" என்னும் நூலின் ஆசிரியருமாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது ஐரோப்பிய விஞ்ஞானம் அதன் தோற்றத்திற்கே, இன்னும் சொல்லப் போனால் அது மறைந்து மங்கிப் போகாமல் நிலைத்து நிற்பதற்கே உதவி செய்துள்ளது. பழங்கால உலகத்தில் விஞ்ஞானம் காணப் பட்டதில்லை. அது விஞ்ஞானத்தை அறிந் திருக்கவில்லை.

வானியலும் கணக்கியலும் கிரேக்கர்களுக்கு அந்நிய கலைகளாகவே இருந்தன.

விஞ்ஞான உணர்வும் ஆய்வு முறைகளும் உண்மையில் அரேபியர்களால் ஐரோப்பா விற்குக் கொண்டு வரப்பட்டவைகளே.

மேலும்,

ரோஜர் பேக்கன் (Roger Baeon) ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் அரபு மொழியையும் அரபு விஞ்ஞானத்தையும் அந்தலூசிய அரபு விஞ்ஞானிகளின் வழிவந்த பேராசியர்களின் உதவியிலேயே கற்றார்.

செய்முறை ஆய்வினை கண்டு பிடித்த பெருமை ரோஜர் பேக்கனையோ அல்லது அவருக்குப் பின் வந்த அவரது பெயரை ஒத்த பிரான்சிஸ் பேக்கனையோ சாராது.

அதற்குப் பெருமை கொண்டாட அவர்களுக்கு உரிமையும் கிடையாது.

முஸ்லிம்களின் விஞ்ஞானத்தையும் வழிமுறை களையும் கிறிஸ்தவ ஐரோப்பாவிற்கு அறிவி த்த பெருமை ஒன்றே ரோஜர் பேக்கனைச் சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இடைவிடாது தன் காலத்தில் வாழ்ந்த விஞ்ஞானிகளுக்கு அரபு மொழியையும் அரபு விஞ்ஞானத்தையும் கற்பிற்கும்படி அறிவுறுத்தி வந்தார்.

உண்மையான அறிவைப் பெற இது ஒன்றே வழியாகும், என்றும் தெளிவு படுத்தினார். முன்பிருந்த பரிணாமப் படித்தரங்களை எல்லாம்கடந்து இன்றுள்ள நிலையை அடைவதற்கு எந்தக் குணவியல் காரணமாக இருந்ததோ அந்தக் குணவியலுக்குரிய உத்தர வாதத்தை அரேபியர்களின் தொடர்பு இல்லா திருந்தால் நவீன ஐரோப்பிய நாகரிகமே தோன்றியிருக்க முடியாது.

இஸ்லாமிய பண்பாட்டின் செல்வாக்கு ஊடுருவாத எந்தவொரு சிறு அம்சத்தையும் மனித குலவளர்ச்சியில் நாம் காணவே முடியாது.

இன்றைய புத்துலகின் தலையாய சக்தியாகவும். இயற்கை விஞ்ஞானத்திலும் - விஞ்ஞான உணர்விலும் அதன் வெற்றியிலும் தோற்று வாயாக இருப்பது இஸ்லாமியமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ☆ 75 மைக்கல் ஹார்ட்

நான் உலகில் சாதனைகள் செய்து உலக மக்கள் மனத்திலே இடம் பிடித்துக் கொண்ட நூறு பேரைத் தேர்ந்தெடுத்து நூல் எழுதினேன்.

அந் நூலில் பெருமானார் அவர்களுக்கு முதலிடம் கொடுத்து அவரைப் பற்றி எழுதிலேன். இதற்கு கிறிஸ்தவ உலகம் எதிர்ப்பைத் தெரிவித்தது.

அதற்கு அவர்கள் காட்டிய காரணம் ஏசுநாதர்தான் உலகில் அதிகமான மக்களின் மனத்தில் இடம் பிடித்தவர் என்பதாகும். 100 கோடி மக்கள் கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர்.

முஸ்லிம்கள் ஐம்பது கோடிப் பேரே இருக்

---

☆ இவர் கல்லூரிப் பேராசிரியர், வழக்கறிஞர். இவர் எழுதிய நூல் "The Hundred' என்பதாகும்.

இந்நூலில் பிரபலமான சமூகத்திற்குச் சேவை செய்த நூறு பேரைத் தெரிந்து எழுதியுள்ளார்.

இவர் இந்த நூறு பேரில் முதலாவதாக அதாவது-முதலிடத்தை பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கே கொடுத்துள்ளார்.

இதற்கான காரணத்தையும் அந்நூலிற் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனர். என்றும் கூறினர்

இதற்கு நான் கூறும் விளக்கம் என்னவெனில் கிறிஸ்து மார்க்கத்தைப் பரப்பும் பணியில் இயேசு நாதரோடு ''பவுல்'' என்பவருக்கும் பங்குண்டு.

முகம்மதோ தனியாளாய் இக் கருமத்தைச் செய்தார்

அது மட்டுமல்ல இயேசுபிரான் ஆத்மீகத்தை மட்டுமே மக்களிடையே போதித்தார்.

முகம்மது ஆத்மீகம், அரசியல், அறிவியல், அன்றாட வாழ்க்கைமுறை, எனப் பல துறைகளை மக்களிடையே போதித்தார்.

எனவேதான் நான் இயேசுவை விட இவருக்கு முன்னுரிமையளித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 76 கிரௌபோர்ட்

இஸ்லாம் ஆரம்பத்தில் அரபியர்கட்கும் துருக்கியர்கட்கும் செய்ததைப் போன்று இந்தியத் தீவுகளில் வாழும் குறைந்த பட்ச மக்கள் கூட்டத்தினருக்கும் ஏதாயினும் செய்திருக்க முடியும், ஆனால் அப்படி முழுமையாக செய்ய முடியாமல் போனதற்குக் காரணம் கிறிஸ்தவ மிசனறிமார் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டது ஒரு காரணமாக இருந்தது.

இதனால் இஸ்லாமியர் அத் தீவுகளில் ஆட்பலத்தைச் சேர்த்தார்களேயன்றி வேறொன்றும் அவர்களால் செய்து கொள்ள முடியவில்லை.

---

★ இவர், ''Indian Archipelage'' என்னும் நூலை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## * 77 லிவிங் ஸ்ரோன்

பல நூற்றாண்டுகளாக ஐரோப்பிய வர்த்தகர்களால் ஆபிரிக்க மக்களுக்கு கொடூர மிழைக்கப்பட்டு வந்தது.

போர்த்துக்கீசரோடு ஆபிரிக்கர் கொண்டிருந்த ஐநூறு வருடகால தொடர்பின் மூலம் ஆபிரிக்கர் அறிந்து கொண்டது என்னவெனில் துவக்கு முனையில் இருந்து சக்தி பாய்கிறது என்பதுதான்.

இதில் இருந்து அவர்கள் தெரிந்து கொண்டது என்னவெனில் ஆபிரிக்கர் தனது சகோதரர்களை போர்த்துக்கீசருக்கு விற்க வேண்டும் என்பதுதான். ஆனால் முஸ்லிம் வியாபாரிகள் மூலம் ஆபிரிக்கர் விளங்கிக் கொண்டது என்னவெனில் முஸ்லிம் சகோதரத்துவம் தங்களை அணைத்துக் கொண்டது. இது தங்களைப் பாதுகாக்கும் என்பதுதான்.

---

* இவர், "Expediton to the Zambe" என்னும் நூலை எழுதினார்.

இவர் 1813 - 1873 ம் ஆண்டுவரை வாழ்ந்தவர்.

ஸ்கொட் லாந்தைச் சேர்ந்த மதப் பிரசாரகர். பிரதேச ஆராய்ச்சியாளர்.

இவரது மற்றுமொரு நூல் "MISSIONARY TRAVELS" என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 78 டீ. பி ஹியூஜஸ்

முகம்மதிற்கு ஆறு வயதாக இருக்கும் போது அவரது பாட்டன் அப்துல் முத்தலிப் முகம்மதின் மீது மிகவும் அக்கறையாக இருந்தார்.

அப்துல் முத்தலிப் இறந்த பின் அனாதைச் சிறுவரான முகம்மத் அபூதாலிபிடம் ஒப்படைக்கப்பட்டார்.

முகம்மதுக்குப் பன்னிரெண்டு வயதாக இருக்கும் போது அபூதாலிப் அவர்களுடன் வியாபாரத்திற்காக சிரியாவிற்குப் பயணமானார்.

இப் பிரயாணம் பல மாதங்கள் வரை நீடித்தது. இப் பிரயாணத்தின் போது பஸ்ராவில் "பகிரா" என்னும் ஒரு கிறிஸ்தவ சன்னியாசி முகம்மதை சந்தித்தார்.

முகம்மதோடு உரையாடிய அச் சன்னியாசி அபூதாலிபிடம் இந்தப் பையனுக்கு நல்ல எதிர்காலம் உண்டு இவரை யூதர்களிடம் காண்பியாது பாதுகாப்பாக திரும்ப அழைத்துச் சென்று விடுப் என்று கூறினார்.

---

★ இவர் "இஸ்லாத்தின் அகராதி" என்னும் நூலை எழுதினார். (Dictionary of islam)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பிரயாணத்தின் பின் இளம் முகம்மதுவின் பழக்கவழக்கங்களிலும் குணத்திலும் மக்காவில் வேறு யாருக்கும் இல்லாத அளவு மாற்றங்கள் ஏற்பட்டன.

இவரது நற்குணங்களாலும் நற் பண்பாலும் மக்கா வாசிகள் அனைவரும் இவரை "அல்-அமீன்" நம்பிக்கைக்குரியவர் எனப் பட்டம் சூட்டி அழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 79 எஸ். எஸ். லீடர்

கீழை தேயத்தில் சமய போதனைக்கு வகுப்பு வாதம் தடையாக இருந்தது. ஆனால் இஸ்லாத்தின் போதனைக்கு வகுப்பு வாதம் தடையாக நிற்க முடியவில்லை.

மிக மோசமான ஒரு நாஸ்திகனை நெருங்கி இஸ்லாத்தைத் தழுவுங்கள் நீங்கள் உடனேயே சம உரிமை உடைய ஒரு அங்கத்தவராக மாறுவீர்கள் என்ற போதனைக்கு எது நிகராகநிற்க முடியும்.

---

★ இவர், "VEILED MYSTERIES OF EGYPT" என்னும் நூலை 1912 இல் லண்டனில் எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 80 ஏ. ஜீ. லோக்கே

1. முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்பைக் கொண்டு எதுவும் சொல்வதற்கில்லை, என்றாலும், சந்தர்ப்பத் திற்கு தக்கவாறு நடந்துகாட்டி, ஒரு தெளி வான' புதிதான, பெருந்தன்மை வாய்ந்த வலிமையான அரசியல் சமூக இலட்சியத்தை அது ஏற்படுத்தியது.

2. முகம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு சன்னியாசி அல்ல. அதேநேரத்தில் அவர் ஒரு இடாம்பீக பிரியருமல்ல. அவரது வாழ்க்கை எளிமையை அடிப்படையாகக் கொண்டிருந் தது. பொன்னையும், வெள்ளியையும் கொண்டு செய்த ஆபரணங்களையும், ஆடைகளையும் அணிய வேண்டாம் என்று சொன்னதில் இருந்து இதனை விளங்கிக்கொள்ளலாம்.

3. முகம்மது நபியவர்கள் ஒரு சுயநலக்கார ராக, புகழ்விரும்பியாக, இருந்தால், இறைவ னோடு தன்னையும் சேர்த்து வணங்கும்படி சொல்லியிருக்கலாம். ஆனால் அப்படிச்சொல் லாது இறைவனே ஏகதெய்வம், அவனையே வணங்கவேண்டும் என்று சொன்னார்

---

★ இவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர். மதங்களின் ஒப்பு நோக்கு எனும் நூலின் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 81 டாக்டர் மார்க்கஸ் டூட்ஸ்

1. திருக்குர்ஆனின் போதனையையும், திரு நபிநாதரின் வாழ்க்கை முறையையும், பின் பற்றிய முஸ்லிம்கள் அலெக்சாந்தர் கைப்பற்றிய நிலப்பரப்பைவிடப் பெரியதொரு எல்லையை தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தனர். ரோமச்சக்கரவர்த்திகளும், குர்ஆனின் முறைப்படி வாழ்ந்தோரின் செல்வாக்கைக்கண்டு பின்வாங்கினர்.

குர்ஆன் வகுத்த வாழ்க்கை நெறி ஐரோப்பாக் கண்டத்திற்கு அவர்களை அரசர்களாக அழைத்துச்சென்றது.

மருத்துவத்தையும், பௌதிகத்தையும், தர்க்கவாதத்தையும், இரசாயன வித்தையையும் கற்றுக்கொடுத்த திருக்குர்ஆன் அதன் வழி நடந்தோரை உலக நாகரிகத்தின் உச்ச ஸ்தானத்தின் அரியாசனத்தில் அமரச்செய்து பேரிகை கொட்டி வெற்றி வாகை கொள்ளச் செய்தது.

இதைவிடவும் சிறந்த வாழ்க்கை முறையுண்டா? என்ற பிரச்சினையைக்கிளப்பி, மனித இனத்தைத் தன்வயப்படுத்தி வாழ்க்கை

---

★ இவர் ஜேர்மனியைச் சேர்ந்த பேரறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையைச் செப்பனிட இதுவே சிறந்த புதையல் என்ற உண்மையை மேலைத்தேயத்தவர்கட்கும் கிழக்குப்பிராந்திய மக்களுக்கும் எடுத்துக்காட்டியது.

2. குர்ஆன் என்ற அரபுப்பதத்தின் பொருள் 'வழமை தவறாது ஓதப்படும் புத்தகம்' என்பதாகும். இவ்வுண்மையின் எடுத்துக் காட்டாய் அமைவது போன்று எங்கெல்லாம் இஸ்லாமியர் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் குர்ஆனின் இன்னிசைப் பேரொலி கிளம்பி ''பிஸ்மில்லாஹ்'' என்ற தித்திக்கும் ''தீன்'' குரல் பக்திப்பரவசத்தில் எதிரொலித்து வெற்றி முரசு கொட்டத்தான் செய்கின்றது'

பக்திப்பரவசத்துடன் ஓதப்படும் குர்ஆனின் நற்போதனைகளுக்கு காது தாழ்த்திப் பொருள்விளங்கி எவர் எவர் செயல்படமுனைகின்றாரோ அவரவர் வாழ்வெல்லாம் வளம்பெற்று வல்லோனின் நல்லாசியுடன் சீரும், சிறப்பும் மிக்க வாழ்வாய் மாறத்தான் செய்கின்றது.

குர்ஆனின் போதனையால் நல்வாழ்வு பெற்றோர் நற்கதியடைவர் என்பதில் சற்றேனும் சந்தேகம் கிடையாது. மனித சமுதாய வரலாற்றிலே மாறுதலடைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனருத்தாரணம் பெற்று புதுவாழ்வு வாழும் பலர் குர்ஆனின் போதனையே தம் மாற்றத்தில் மூல மந்திரமாகக் கொள்கின்றனர். மந்தை வளர்ப்புத் தொழிலில் முழுக்க முழுக்க மூழ்கியிருந்த அன்றைய அராபியரை உலகம் என்றுமே கண்டிராத மாபெரும் சமூக சமய மாற்றத்தின் மூல பிதாவாக மாற்றியமைத்ததும் திருக்குர்ஆனின் திருப்போதனைகளேயாகும். அறிவு வாஞ்சையற்றோரை அறிவுக்களஞ்சியங்களாகவும், மூர்க்கச்செயலில் திளைத்துக்கிடந்தோரை பண்புள்ளோராயும், பக்திப் பரவசமிக்க மார்க்க அறிஞர்களாகவும், மாற்றிய பெருமை திருக்குர்ஆனையே சாரும்.

3. திருக்குர் ஆன் சிறந்த வேதநூலாகும். அதன் உதவியைக்கொண்டு அராபியர் ஐரோப்பாவிற்கு மன்னர்களாக வந்தனர். அங்குள்ள மக்கள் அறியாமையில் மூழ்கியிருந்தபோது அராபியர் அறிவுச் சுடரைக் கையிலேந்தியவர்களாகத் திகழ்ந்தார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 82 ரெவரெண்ட் டாக்டர் மெக்கோலா அக் பிரி

1. முகடுகளில் இருந்து, தொழுகைக்கா இஸ்லாமியர்கள் விடுக்கும் அழைப்பு ஆபிரி காவையே அதிரச்செய்து விடுகின்றது.

பொழுது விடிந்தது முதல் பொழு மறையும் வரையில் அதாவது காலையி இருந்து மாலைவரையும் ஒவ்வொருவரி கவனத்தையும் அவ்வழைப்பு ஈர்க்கின்றது. மக்களைத்தட்டி எழுப்பி உற்சாகப்படுத்து இஸ்லாத்தின் தாரக மந்திரத்தைப் போ ஒன்றை கிறிஸ்தவ மதமே அளித்ததில்லை

---

★ இவர் மதபோதகர். கலாநிதிப் பட்டம் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 85 முன்னைநாள் இந்திய கவர்னர் - ஸ்ரீ பிரகாசர்

1. ஹிந்து தர்மம் சீர் குலைந்துபோனதோடு ஆசியா முழுவதுமே இஸ்லாமிய கண்டமாக மாறிவிடும்படி உலகெங்கும் இஸ்லாம்பரவியது இப்பொழுதும் பரவிக்கொண்டிருக்கின்றது.

சுதந்திரத்திற்குப் பிறகும் பாரதத்தில் ஏராளமான இந்துக்கள் முஸ்லிமாக மாறிக் கொண்டிருக்கின்றார்கள். ஆபிரிக்காக் கண்டத்திலும் இது வளர்ந்து கொண்டே இருக்கின்றது.

---

★ இவர் இந்தியாவின் புகழ் பெற்ற அறிஞர். இந்தியாவின் கவர்னராக இருந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 84 தேஹனா வெணஸ்த்தே

இவ்வுலகிலும் மறு உலகிலும் நிகழுகின்ற நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாக விளங்குவது குர்ஆன். வாழ்க்கைக்குரிய சட்டங்கள், இறைவனுடைய ஒருமை, உரிமைகளின் வரம்புகள், தண்டனைகளின் விபரங்கள், சமுதாய அமைப்புக்கள், நீதியின் நிலைமைகள் ஆகிய அனைத்தும் குர்ஆனில் தெள்ளிய முறையில் விளக்கப்பட்டுள்ளன. இன்னும் சொல்வதானால் குர்ஆன் முஸ்லிம் சமுதாயத்தின் சாசனமாகவும் அரசியல் அமைப்பாகவும், இவ்வுலகிலே மகிழ்ச்சியோடு வாழவும் மறு உலகில் ஈடேற்றம் பெறவும் வழிகாட்டும் வழி காட்டியாகும்.

---

★ இவர் உறங்கேரியர்.
''இஸ்லாமும், முகம்மதுவும்'' என்னும் நூலின் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 85 சரித்திர நாவலாசிரியர் சாண்டில்யன்

முஸ்லிம் சமுதாயத்திடம் எனக்கு எப்பொழுதும் பெருமதிப்புண்டு. அவர்கள் மத பக்தியிலும் இன ஒற்றுமையிலும் பத்தில் ஒரு பங்கு கூட ஹிந்துக்களுக்கு இருந்திருந்தால் ஹிந்துஸ்தானத்தை முஸ்லிங்கள் வென்றிருக்க முடியாது. என்று நான் நினைத்த நாட்கள் உண்டு. ஆகவே ஹிந்துக்களின் மத நம்பிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது முஸ்லிம்களிடம் எனக்குப் பொறாமையேற்படுகிறது. என்று சொன்னால் அது பொய்யல்ல. அவ்வளவு ஆழ்ந்த மத பக்தி, சிறந்த ஒருமைப்பாடு முஸ்லிம்களுக்கு உண்டு.

---

★ இவர் தென்னிந்தியாவின் புகழ் பெற்ற எழுத்தாளர்.
சரித்திர நாவலாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 86 ஏ. ஜே. ரொயின்பீ

சில துறைகளில் ஆங்கிலேயர் மனித குல நாகரிகத்திற்கு அளித்த பங்களிப்பு நியாய பூர்வமானதுதான். ஆனால் இனத்துவேசம் சம்பந்தமாக அவர்களின் எண்ணம் ஒரு துர் அதிஸ்டமே. இந்த நிலைமை இஸ்லாமியர் களிடையே இல்லை.

இனத்துவேசம் என்பது இஸ்லாமியர் களிடையே சிறு மண்ணளவாயினும் இல்லை.

---

★ இவர், "CIVILIZATION ON TRIAL" என்னும் நூலை 1948ம் ஆண்டு நியூயோர்க்கில் வெளியிட்டார். இவர் 1889 - 1975 வரையிலான காலப் பகுதியில் வாழ்ந்தவர்.
உலகப் புகழ் பெற்ற வரலாற்று ஆசிரியர்.
இவர் "A Study of History" எனும் நூலை எழுதியவருமாகும்.
இந்நூல் பன்னிரெண்டு பாகங்களைக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 87 ஜே. எஸ். கிளியர் மக்பார்லேன்

இஸ்லாத்தின் பலதார மண முறை சமூக ரீதியிலோ அல்லது சமய ரீதியிலோ அல்லது மனச்சாட்சி ரீதியிலோ எந்த ரீதியிலோ நோக்கினாலும் நாகரிகத்தின் அதி உயர்ந்த தன்மை கொண்டது. என்றே கூற வேண்டும். இது அராதரவான - வேண்டப்படாத நிராகரிக்கப்பட்ட பெண்ணின் பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு காணும் செயல்முறைத் திட்டமாகும். இதைத் தவிர வேறு மாற்றீடு இல்லையென்றே கூற வேண்டும்.

---

★ இவர் "The case for POLYGAMY" "பலதார மண முறை" என்னும் நூலை எழுதினார். இந்நூல் இலண்டனில் 1934ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 88 எம். லெட்டோயூர்நியோ

விவாகரத்துத் தொடர்பாக நாங்கள் எல்லோருமே ஒரு சீரான முடிவுக்கு வரக் கூடியதாக உள்ளது. அதாவது ஆரம்பத்தில் ஆண் பெண் கூட்டு வாழ்வு, மணவாழ்க்கை பெண்ணை அடிமைப் படுத்துவதாக அமை கிறது.

உலகம் நாகரிகம் அடைய பெண்கள் வாழ்விலும் அது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதனால் பெண்கள் விழிப்படைந்து உரிமை வேண்டினர்.

இறுதியில் ஆண்களின் கொடுமையில் இருந்து விடுதலை பெற விவகாரத்து உரிமை வழங்கப் பட்டது. விவாகரத்துச் செய்து கொள்ளும் பெண்ணிற்குரிய இந்த உரிமை மானிட சரித்திரத்தில் முதன் முதலில் இஸ்லாத்தில் தான் அனுமதிக்கப்பட்டது.

---

★ இவர், "EVALUTION OF MARRIAGE" என்னும் நூலை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **89** **ஜீன். எல். ஹியூரெக்ஸ்**

இஸ்லாம் அதன் எளிய போதனைகளாலும் தெளிவான கோட்பாடுகளாலும் திட்டமான எண்ணிக்கையை உடைய கிரியைகளாலும் மனித ஆத்மாக்களை வெல்லும் அதிக சக்தி கொண்டுள்ளது.

மற்ற மதமோ ஆரம்பகாலம் தொடக்கத் தொடர்ச்சியான மாற்றங்களுக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் மறுதலையாக இஸ்லாம் ஒரு தனித்துவமான மதமாக இருக்கிறது.

---

★ இவர், ETUDE SURL MISLAICS ME" என்னும் நூலை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ |90| லோறன்ஸ் இ. பிரௌன்

இஸ்லாமிய சகோதரத்துவம் கீழைத்தேய சமூகங்களுக்கு உண்மையானதும் புதுமையானதுமாகும். ஒரு சிறிய தேயத்து முஸ்லிம் பாரசீக தேயத்து முஸ்லிமுடன் கொள்ளும் சகோதரத்துவ உறவு ஒரு கிறிஸ்தவ சிரியருக்கும் ஒரு பாரசீக கிறிஸ்தவருக்கும் இடையே ஏற்படுமா என்பது சந்தேகம்.

★ இவர், "THE PROSPECTS OF ISLAM" என்னும் நூலை 1944ம் ஆண்டு இலண்டனில் வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 91 ஜோன் வில்லியம் டிராப்பர்

குர்ஆன் மிகச் சிறந்த போதனைகளையும் நீதி வாக்கியங்களையும் நிறையக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு பக்கமும் மனிதனுக்குத் தேவையான போதனைகளை கூடுதலான அளவு வழங்குகின்றது.

---

★ இவர், M. D. Li. D. பட்டம் பெற்றவர்.
இவர், "A HISTORY OF THE INTELICTUAL DEVELOPMENT OF EUROPE" என்னும் நூலை இலண்டனில் 1875ம் ஆண்டு வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 92 சி. எச். பெக்கர்

கிறிஸ்தவ மறுமலர்ச்சி, துருக்கிய யுத்தம் ஐரோப்பிய வளர்ச்சி என்பன இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே ஒரு இடைவெளியை ஏற்படுத்தியது.

கீழைத்தேயங்களில் இஸ்லாம் பரவி ஆட்சியை நடத்துகின்றது. ஆனால் இஸ்லாமிய வெற்றியாளர்கள் கிறிஸ்தவ மதத்தை வெறுத்தார்கள். என்பது கிறிஸ்தவர்களால் கட்டி விடப்பட்ட ஒரு புனைகதையாகும்

---

★ இவர், "CHRISTIANITY AND ISLAM" "கிறிஸ்தவ மதமும், இஸ்லாமும்" என்னும் நூலை 1909ம் ஆண்டு இலண்டனில் எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 93 டி. டபிள்யு. அர்னால்ட்

புனித யாத்திரை தவிர்ந்து கட்டாய தானம் நம்பிக்கையுள்ளவர்கள் சகோதரர்கள் என்பதை ஞாபகப்படுத்துகின்றது. இது இஸ்லாத்தைப் புதிதாகத் தழுவியவர்கள் மீது அவர்கள் எந்த இனத்தையோ குலத்தையோ சேர்ந்தவர்களாக இருப்பினும் இஸ்லாம் அவர்கள் மீது அன்பை வெளிப்படுத்துகின்றது.

---

★ பேராசிரியரான இவர், "THE PREACHING OF ISLAM" என்னும் நூலை எழுதினார். இந்நூல் லாகூரில் 1956ம் ஆண்டு வெளியிடப்பட்டது. "போதனை" என்பது இதன் பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 94 ஜே. ஸ்டீவன்சன்

இஸ்லாத்தின் திருநபியவர்கள் அரசியல் திட்டம், அறிவுக்குப்பொருத்தமான நம்பிக்கை புனிதம் பொருந்திய நடத்தை ஆகிய மூன்றும் இல்லாத ஒரு நாட்டில் பிறந்தார். அதே நாட்டில் இம்மூன்றையும் நிலைபெறச் செய்தார்.

ஒரே நேரத்தில் பெரும் பிரளயத்தோடு சமய அரசியல் திட்டத்தையும், தூய்மையான சமயக்கோட்பாட்டையும் உண்டாக்கினார்

---

★ இவர்,

1. Gveeds Council and Contra Varsies
2. Studics in Euselivs 1929
3. The new Euselices

ஆகிய நூல்களை எழுதியவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 95 ஊஸ்டன் பெல்ட்

இன்று போல் விஞ்ஞானம் வளர்ச்சியுற்றிராத இஸ்லாத்தின் முதல் ஆயிரம் ஆண்டுகளில் பல்லாயிரம் பக்கங்களைக் கொண்ட ஆதாரபூர்வமான வரலாற்று நூல்களை ஆக்கிய சிறப்பிற்குரிய ஐந்நூற்றுதொண்ணூறு வரலாற்று ஆசிரியர்களை தோற்றுவித்ததன் மூலம் இஸ்லாம் நிகழ்த்திய சாதனையை நாம் என்றுமே மறக்க முடியாது.

---

★ இவர் ஜேர்மன் நாட்டு அறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 96 டாக்டர் மார்க்கஸ் டொட்ஸ்

நிச்சயமாக தீர்க்கதரிசிகள்பால் காணப் படக்கூடிய மகா முக்கியமான இருவகைக்குண விஷேடங்களை முகம்மது நபி (ஸல்) அவர்கள் பெற்றிருந்தார்கள். அவருடைய சகோதர மக்களால் கண்டுகொள்ள முடியாதிருந்த தெய்வத்தின் உண்மையினை அவர்கண்டு கொண்டார். அதுவுமன்றி, அந்த உண்மை யினைப் பகிரங்கப் படுத்துவதற்கு அன்னவர் பால் ஒருவகைத் தடுக்க முடியாத அந்தரங்க உத்வேகம் இருந்துகொண்டே இருந்தது. இரண்டாவதாகக் கூறக் கூடிய குணவிஷேடம் முகம்மது நபி (ஸல்) அவர்கள் இஸ்ரவேல் கூட்டத்தில் தோன்றிய தைரியசாலிகளான தீர்க்கதரிசிகளிலெல்லாம் மகா தைரியசாலிக ளாய் விளங்கிய தீர்க்கதரிசிகளுடனே ஒப்பு நோக்கின் இவரே சிறந்தவராக விளங்குவார். மரணத்திற்குக்கூட அஞ்சாது தமது கடமையில் கண்ணாயிருந்தார். எத்தகைய ஆசை வார்த் தைகளாலேனும் அன்னவரை அடக்கிவிட முடியவில்லை.

---

★ இவர், முகம்மத். புத்தர், இயேசு, எனும் நூலை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 97 இந்திய அறிஞர் ஷர்தேவ் பிரகாஸ்

உலக சீர்திருத்தவாதிகளில் சிறந்து விளங்குபவர் முகம்மது நபி அவர்களே.

★ இவர் இந்தியாவின் புகழ் பெற்ற அறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 98 ஜீன். எஸ். ஹொரக்ஸ்

இஸ்லாம் அதன் எளிமையான போதனைகள் மூலம் மக்கள் மனதினைக் கவரும் ஆற்றல் கொண்டுள்ளது.

இஸ்லாத்தின் தத்துவங்கள் தெளிவானவை, வரையறுக்கப்பட்டவை.

கிறிஸ்தவ மதம் அதுதோன்றியதிலிருந்து பல மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. ஆனால் இஸ்லாம் எதுவித மாற்றத்திற்கும் உள்ளாகாமல் தனது தனித்துவத்தைப் பேணிவருகிறது.

---

★ இவர் ''Etude Sur L' Islamisme'' என்னும் நூலை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## * 99 ஜிவின்ஸ்லே ஜோன்சன்

இஸ்லாத்தின் மீது கிருஸ்தவர்களின் அலட்சியப்போக்கு விரும்பத்தகாத ஒன்றாகும். அக்கால மக்களில் முகம்மது நபி (ஸல்) அவர்கள் மட்டுமே இறைவன் ஒருவன் என நம்பினார்.

நற்பிரஜை என்பவன் நன்னடத்தையுடைய, பிள்ளைகளைப் பேணிக்காக்கின்ற, இறைவனை எந்த நேரமும் வணங்குகின்ற, பிற மக்களின் நீதி, கருணை, நியாயம் என்பவற்றை மதிக்றகின் கல்வியைப் பேணிக்காக்கின்ற, ஒருவனே எனக் கூறினார்கள்.

---

* இவர் ஒரு "F. R. C. S. The Two Worlds" என்னும் நூலின் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ 100 ஜனாதிபதி ஆர். பிரேமதாச

பொதுவாக மனித இனத்தின் முன்னேற்றத்திற்காகவும் சிறப்பாகப் பண்பாடு நாகரிகம் ஆகியவற்றிற்காகவும் இஸ்லாம் செய்துள்ள பங்களிப்பு தனித்துவம் மிக்கதாகும்.

இஸ்லாம் மார்க்கம் ஜனநாயக இலட்சியங்களில் வேறூன்றிய மார்க்கமாகும்.

அறிவுரை கோருதலின்பாற்பட்ட நிருவாகமே இஸ்லாமிய அரசொன்றில் சிறப்பியல்புக் கூறாகத் திகழ்கின்றது. நபி பெருமானார் வழமையாகத் தனது சகாக்களின் அறிவுரைகளை நாடினார்கள். மேலான அதிகாரத்திற்கான இறையுரிமையைத் தாம் பெற்றிருந்தாலும், பலருடன் கலந்தாலோசித்து ஏற்படும் பொது இணக்கந்தான் பெருமானாருக்கு இசைவாக இருந்தது.

---

★ இவர் இலங்கையின் இரண்டாவது ஜனாதிபதி. இரண்டாவது ஆப்ரகாம்லிங்கன் எனப் புகழப்பட வேண்டியவர்.
"கொழுமுஹுத" போன்ற (Silent Sea) நூல்களை எழுதியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்வு கூறல்கள்

01. உப நிடத சிந்தனைகளில்.
02. பஹலவி. மொழிகிரந்தம்
03. பவிஷ்ஷ புராணம்.
04. அதர்வ வேதம்.
05 பஹவத் கீதை
06. பைபிளும் சுவிசேசங்களும்.
07. ஷாஹில் மாவாஹிபு என்னும் கிரந்தத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ உபநிடதச் சிந்தனைகளில்

மக்களே! மிகவும் அவதானமாகக் கேளுங்கள். புகழுக்குரிய மனிதர் ஒருவர் மக்கள் மத்தியில் தோன்றுவார்.

நாங்கள் (60090) எதிரிகளிடம் இருந்து தப்புவதற்காக பாதுகாப்புத் தேடி வெளியேறுவோம்.

இந்த எதிரிகள் எடுத்துச் செல்லும் பொருட்கள் இருபது ஒட்டகங்களில் ஏற்றக் கூடியதாக இருக்கும்.

இந்த மனிதரின் புகழ் பூமியையும், வானங்களையும் தொடுவதாக அமையும்.

---

★ இதிகாசங்களுக்கு முன் எழுதப்பட்டது உபநிடதம். உபநிடதம் நூற்றி எட்டு உண்டு.
இதனை வேறு ஒரு வகையாகக் கூறுவதாயின் வேதத்தின் ஒரு பகுதியே உபநிடதம் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ பஹலவி (PAHLAVI)

பாரசீகர்கள் ஒழுக்கத்தில் மிகவும் கீழான இடத்திற்குச் சென்று கொண்டிருக்கும் போது அரேபியாவில் ஒரு மனிதர் பிறப்பார்.

அவரைப் பின்பற்றுவர்கள் சமயம், நிறம், சிம்மாசனம் போன்றவற்றைத் தலைகீழாகப் புரட்டிவிடுவார்கள்.

இவர்கள் ஆபிரகாமால் கட்டப்பட்ட வீட்டை நோக்கிச் சென்று அங்குள்ள விக்கிரகங்களை அடித்து நொறுக்கி வீசிவிட்டு, ஏக இறை வணக்கத்தைச் செலுத்துவார்கள்

பின் பாரசீகம், தோஸ், போச், போன்ற நகரங்களையும் அதனைச் சுற்றியுள்ள இடங்களையும் கைப்பற்றுவார்கள்.

இவர்கள் ஆட்சியிலே மக்கள் சந்தோசத்துடன் வாழ்வார்கள்,

பாரசீகத்திலுள்ள புத்தி ஜீவிகளும் ஏனையோரும் அந்த மனிதரின் போதனைகளை ஏற்றுக் கொள்வார்கள்.

---

★ பஹலவி மொழி பாரசீகத்தின் பழைய மொழிகளில் ஒன்று. இன்று ஈரானில் பேசப்படும் மொழியின் தாய் என பேசியன் இங்கிலிஸ் அகராதி கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✿ பவிஷ்ஷ புராணம்

ஏதஸ் மின்னந்தரே மிலேச்ச
ஆசாரியன ஸமன்வித
மஹாமத் இதிக்கியாத
சிஷ்ய சாகா ஸமன்வித
நிருஷ் சேவ மஹாதேவ
மருஸ்தல நிவாஸினம்.

(பாகம் 3, சூத்திரம் 3, சுலோகம் 5 - 8)

**இதன் பொருள்:**

பிறநாடு ஒன்றில் ஓர் ஆன்மீக சீர்திருத்தவாதி தம் சிஸ்யர்களுடன் வருவார். அவர் மஹாமத் என அழைக்கப்படுவார். அவர் பாலைவனத்தைச் சேர்ந்தவர்.

---

✿ பவிஷ்ஷ புராணம் மகாரிஷி வியாச முனிவரால் இயற்றப்பட்டது இது 18 புராணங்களில் ஒன்று. இதனை வியாச முனிவர் தான் பாடினார் என்று திட்டமாகக் கூற முடியாவிட்டாலும், வியாச முனிவர் இதற்கு உரையாகுதல் எழுதியிருக்கலாம். எனக் கொள்ள இடமிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதர்வ வேதம்

பின்வரும் சூத்திரம் அதர்வ வேதத்தில் அல்லோப நிஷத் எனும் பகுதியில் உண்டு

அல்லா ஜியேஸ்டம்
பிரமம்
பூரணம்
பிரஹ்ற மானம்
அல்லாம் அல்லோ றஸுலா மஹாமத்
கமரஸ்ய..................
ஸஸீர ஸம்ரஹாரினி ஹோம், ஹிரீம்........
அல்லோ............
றஸுல் மஹாமத் கபரஸ்ய அல்லோ
இல்லல்லே தி இல்லல்லா.

**இதன் பொருள்:**

அல்லாஹ்வுக்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை.
அவன் சம்பூரணமானவன்.

---

நான்கு வேதங்களில் நான்காவது வேதமே அதர்வ வேதம்.
இவ் வேதத்தில் மந்திரம், பேய் பற்றிய விடயங்களே அதிகம் அடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப் பிரபஞ்சத்தின் இரட்சகன்
சிவனுடைய பதவியில் இருக்கும் முஹம்மத்
அல்லாஹ்வுடைய தூதர்.
வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர
வேறு யாருமில்லை.

இவர்
லிங்கசேதி சிஹாஹின
சுமச்ருதாரி ஸதூ ஷக
உச்சாலாபி சர்வபட்சி
பவிஷ்யதி ஜனோமம்.

இதன் பொருள்:

இவர்
விருத்த சேனம் செய்திருப்பார்.
தலையில் குடுமி இருக்காது.
உரத்த குரலில் அழைப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **பஹவத் கீதை**

அகில உலகத் தூதரரின் பெயர் விஷ்ணு பக்த்.

தாயாரின் பெயர் சுமதி.

இவர் பேஸாத் திங்கள் பன்னிரெண்டாம் திகதி பிறப்பார்.

இவர் பிறப்பதற்கு முன் இவரது தந்தை மரணம் எய்துவார்.

இவர் ஷால்மல் தீவின் இராணியை மணப்பார்.

திருமணத்தில் (இவரது) பெரிய தந்தையும் மூன்று சகோதரர்களும் கலந்து கொள்வார்கள்.

ஒரு குகையில் வானவரிடம் இவர் படிப்புப் பெறுவார்.

பிரச்சாரம் செய்யும் போது மக்கள் இவருக்குத் துன்பம் விழைவிப்பார்கள்.

துன்பம் பொறுக்க முடியாது இவர் தென் மலைப் பிரதேசம் நோக்கிச் செல்வார்.

பிறகு இவர் வாளுடன் திரும்பி வருவார். அப்போது நாடு இவர் கைவசமாகும்.

இவருடைய குதிரை ''பர்கை'' (மின்னலை) விட விரைந்து போகும்.

---

★ பஹவத் கீதை மகத்தான தர்ம காவியம். ஹிந்துக்களின் வேத நூல் எனக் கொள்ளப்படுகிறது. இது தோன்றிய காலம் கி. மு. 1500ம் ஆண்டு எனக் கலைக்களஞ்சியம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் அவர் அண்டசராசரங்களையும் சுற்றிப் பார்ப்பார்.

## இதன் விளக்கம் வருமாறு அமையும்

மேற்கூறியவற்றிலே தாய் தந்தை இருவருடைய பெயரும் வித்தியாசமாகக் கூறப்பட்டுள்ளது போன்று எமக்குப் பட்டாலும், இதனைக் கீதையின் மொழியில் இருந்து அரபு மொழியிலே மொழி பெயர்த்தால் அப்துல்லா ஆமினா என்றாகும்.

அதாவது அப்துல்லா என்பதன் பொருள் இறை பக்தர் - இறையடியான் என்பதாகும் இதன் பொருள் படும் சொல்லே ''பக்த்''- பக்தர்.
பக்தர் என்றால் அரபு மொழியில் அப்துல்லா என்றாகும்.
இஃதே போல ஆமினா என்றால் அரபு மொழியில் ''அமைதி'' என்பதே பொருள்.
வட மொழியில் சுமதி என்பது அமைதி என்பதையே குறிக்கின்றது.
''பேசாத் மாதம் பன்னிரெண்டாம் திகதி அகில உலகத் தூதர் பிறப்பார் என்ற கீதை வசனம் பின்வருமாறு அமையும்.
முகம்மது நபியவர்கள் கி. பி. 571ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் திகதி பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது கிருஷ்தவ வருடக் கணிப்பீடு. பிறைக் கணிப்பீட்டின் படி இது றபியுல் அவ்வல் மாதம் பன்னிரெண்டாம் நாள் திங்கட்கிழமை அதிகாலை பிறந்தார்கள்.

தாயாரின் வயிற்றில் இருக்கும் போது தந்தையவர்களையும்,
தனது ஆறு வயதில் தாயையும் இழந்து, தனது எட்டு வயது வரை தனது பாட்டன் அப்துல் முத்தலிபிடமும்,
பின்னர் இருபத்தைந்து வயது வரை பெரிய தந்தை அபூதாலிப் அவர்களிடமும் வளர்ந்து வந்தார்கள்.
இராணியை மணப்பார் என்று கீதை கூறியுள்ளது செல்வச் சீமாட்டி கதீஜாவையே குறிக்கின்றது
கதீஜா செல்வச் செழிப்புமிக்க இராணியாகவே இருந்தார்.
எத்தனையோ வியாபாரக் கூட்டங்களுக்கு அதிபதியாக இருந்தார்.
திருமணத்தில் பெரிய தந்தையும், மூன்று சகோதரர்களும் கலந்து கொள்வார்கள். என்று கூறியுள்ளது கூட உண்மையாகும்
அபூதாலிப் அவர்களும் அவரது மூன்று பிள்ளைகளான அலி (ரலி), ஜஃபர் (ரலி), உகைல் (ரலி) ஆகியோரே கலந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவரிடம் படிப்புப் பெறுவார் என்றது ஹிராக் குகையில் நடந்த சம்பவத்தையே குறிக்கின்றது.

அவர் பிரச்சாரம் செய்யும் போது பட்ட துன்பங்களையும் மதீனா எனும் யத்ரிப்பிற்கு சென்றதையுமே அடுத்த வசனம் குறிக்கின்றது.

மக்கா வெற்றியையும் வாளுடன் திரும்பி வருவார் என்ற செய்தி குறிக்கின்றது.

அவருடைய குதிரை மின்னலை விட வேகமாகப் போகும் அதில் அவர் அண்டசரா சரங்களையும் சுற்றிப் பார்ப்பார் என்பது மிஃராஜ் பயணத்தையே குறிக்கின்றது.

கீதையும் இதர வேதங்களும் பெருமானாரின் பிறப்பையும் திகதியையும் நாளையும் சரியாகவே குறித்துக் காட்டியுள்ளன.

ஆனால் பிறக்கும் நேரம் பற்றிக் கீதை கூறியிருப்பது எங்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தலாம்.

இதிலும் சந்தேகப்படுவதற்கு எதுவுமே இல்லை.

அதாவது சூரியன் உதயமாகி வானில் இரண்டும் அரையும் கழிந்த பின்னர் இறுதித் தூதர் பிறப்பார் என்று இந்திய வேதங்கள் கூறுகின்றன.

பெருமானார் அவர்கள் மக்காவிலே சூரியன் உதிப்பதற்கு முன் பிறந்தார்கள்.

இது எவ்வாறு பொருந்துமெனில் பெருமானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த நகரான மக்காவிற்கும் இந்தியாவிற்கும் இரண்டரை மணித்தியாலங்கள் நேர வித்தியாசம் இருப்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **பைபிளும் சுவிசேசங்களும்**

இறைவன் கூறினான் ''முகம்மதே நீர் காத்திரும் நான் உனக்காக சுபனபதியையும், உலகத்தையும், அனேக சிருஷ்டிகளையும் படைப்பேன்''

நான் உம்மை உலகத்திற்கு அனுப்பும் பொழுது என்னுடைய ஈடேற்றத் தூதராக அனுப்புவேன்.

(இது ஸெண்ட் பார்னபாஸ் சுவிசேசம், அத்தியாயம் 97, பக்கம் 113.)

2. இயேசு கூறினார் அவர்தான் இறை தூதர் முகம்மது அவர்கள். சகல சாதியினரும் எதிர்பார்ப்பவரும் அவரே.

இறைவனின் இரகசியங்களை அவர் தெளிவாக அறிவார்.

அவர் உலகத்திற்கு வரும் பொழுது அவருடைய சொல்லைக் கேட்பவர்களே பாக்கியசாலிகள். ஏனெனில் இறைவன் அவர்களை தனது

---

★ பைபிளில் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என கால வித்தியாசத்தையும் சில பொருள் மாற்றங்களையும் கொண்ட இரண்டு பகுதிகள் உண்டு. இது கிறிஸ்து சமயத்தவர்களின் வேத நூல். பழைய ஏற்பாட்டை விவிலியம் என அழைப்பதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுக்குள் சேர்த்துக் கொள்வான்.
(இதுவும் ஸெண்ட் பார்னபாஸ் சுவிசேசமே, அத்தியாயம் 163, பக்கம் 191.)
விவிலியத்தில் (பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு இரண்டிலும்) முகம்மது நபி பிறப்பார் என்று நேரடியாகச் சொல்லப்படவில்லை.
பின்வருமாறுதான் கூறப்பட்டுள்ளது;
"நான் அவர்களுக்காக அவர்களுடைய சகோதரரில் இருந்து ஒரு தூதரை அனுப்புவேன். அவருடைய வாயில் எனது வார்த்தைகளை அருளுவேன். அவருக்குக் கற்பித்ததையெல்லாம் அவர் அவர்களுக்குச் சொல்லுவார்."

(- உபாகமம் 18-18ல் சொல்லப்பட்டுள்ளது)
இதில் குறிக்கப்பட்டுள்ள தூதர் யார் என ஆராய்வு மூலமே கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

உபாகமம் அத்/33-23 இப்படிக் கூறுகிறது. வாக்களிக்கப்பட்ட அந்தத் தூதர் சினாயிலிருந்து எழுந்தருளி சேரியிலிருந்து அவர்களுக்கு உதயமாவார். பாரான் மலையில் இருந்து பிரகாசிப்பார். பதினாயிரம் பரிசுத்தவான்களோடே தோற்றமாவார்.
அவர்களுக்காக தீப்பிளம்பைப் போன்ற பிரகாசமான (களங்கமற்ற பரிசுத்தமான) பிரமாணம் அவருடைய வலது கரத்தில் இருந்து புறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஒரு இடத்தில்,
ஆதியாகமம்: - 21 - 14ல்
ஆபிரகாமினால் பிரித்துவிடப்பட்ட,
ஆசுரார - ஹாஜரா தன் மகன் இஸ்மாயிலுடன்
பெயர் செபாவின் வனாந்தரத்திலே அலைந்து
திரிந்தார் எனக் கூறுகிறது
ஆதியாகமம் வேறு ஒரு இடத்தில்,
(21 - 21)
பாரான் வனாந்தரத்தில் (பிள்ளையுடன் (
குடியிருந்தார் அவருடைய தாய் எகிப்து
தேசத்தாளாகிய ஒரு பெண்ணை மகனுக்கு
மணம் செய்து வைத்தார் என்று கூறுகிறது.
இந்த இஸ்மாயில் எகிப்துப் பெண்ணை
மணந்தது என்பதை ஏற்றே ஆக வேண்டும்.
கேதாரின் வம்சத்தில் ஒரு வேதம் அருளப்
படும்என்று வாக்களிக்கப்பட்டிருக்கும் நிலை
யில் பாரான் பகுதியில் இறைவன் தனது
பிரகாசத்தை முகம்மது மூலமாக வெளிப்
படுத்தினான் எனக் கொள்ள முடியும்,
மேலும்,

மக்காவில் மட்டுமே இறைவனின் ஆலயம்
மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறது
கேதார் வம்ச மக்கள் அந்தக் தேவால
யத்தின் முன்னால் கூட்டம் கூட்டமாக
வந்து முகம்மதுவின் தூததை ஏற்றனர்.
எனினும் முகம்மது அந்த மக்களை விட்டு
வெளியேறும்படியாகவும் ஆகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கா வாசிகளின் உருவிய வாளுக்கும் நாணேற்றிய வில்லுக்கும் முகம்மது நபி தப்பிச் சென்றார். அவர் மக்காவை விட்டு வெளியேறிய ஒரு வருடத்திற்குப் பிறகு கேதார் வம்சத்தார் முகம்மதையும் அவரது தோழர் களையும் ''பத்று'' எனுமிடத்தில் சந்தித்தனர்.

இந்தப் பத்றுப் போர்முனைதான் மக்காவில் இருந்து வந்த கேதார் கூட்டத் தாருக்கும் முகம்மதுவுக்குமிடையே நடந்த முதற் போர். இந்தப் போரின் மூலம் கேதார் கூட்டத்தாரின் பெருமை அழிந்து விட்டது.

மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிகளும் பைபிள் தீர்க்க தரிசனத்தை மெய்ப்பிக்கின்றன.
(இங்குள்ள 10000 பேர் என்பது மிக மிக முக்கியமான பைபிள் தீர்க்க தரிசனம்)

மேலும் கிறிஸ்து நாதர் பின்வருமாறு றியுள்ளார்.
''உங்களுக்கு அவசியமானது நான் போவது தான். நான் உங்களைவிட்டுப் பிரிந்து சென்றால் மட்டுமே அந்தத் தேற்றரவாளர் வருவார்
இது மேற்கூறியபைபிள்வசனங்களை முகம்மது என்றே நிரூபிக்கின்றது என கொண்டால் இந்தக் கேதார் மூலமாகவே அரபு இனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியது எனலாம்.
பாரான் பகுதியில் வாழ்கின்ற அரபுகளுக்கு இவரே மூலவர்.
முகம்மதுவுக்கும் இவரே மூலவர். அதுமட்டுமா இந்த முகம்மது பாரான் பகுதியாகிய மக்காவில் இருந்து வெளியேறி மதீனாவிற் சென்று பல காலம் வாழ்ந்து பத்தாயிரம் பரிசுத்தவான்களோடு திரும்பவும் பாரானுக்கே வந்தார். இங்கு தனது சட்டதிட்டங்களையும் கட்டளைகளையும் அமுலாக்கம் செய்தார். இவற்றையெல்லாம் சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்கும் போது பைபிள் உபாகமம் 33 இல் சொல்லப்படுகின்ற வாக்கு நிறைவேறுவதை அறிய முடிகின்றது. மேலும் மேற்கூறிய வசனத் தொடரில் (பைபிளில்) ''அப கூக்'' என ஒரு சொல் சொல்லப்படுகிறது.

இதன் பொருள் புகழால் போர்த்தப்பட்டிருக்கும் என்பது பொருளாகும்.
''புகழ் என்ற செய்தியை முக்கியமான செய்தியாகக்கொண்டால் ''முகம்மத்'' என்ற இன்றையச் சொல்லுக்கும் புகழப்பட்டசெ..ன் பதே பொருள். எனவே இங்கு முகம்மதைக குறித்தே மேற்கூறிய வசனங்கள் வந்தது எனலாம்.
இதனை வேறு ஒரு வகையாகக் கூறுவதானால் பைபிளின் கூற்றுப்படி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரானில் இஸ்மாயில் வாழ்ந்தாரென்பது மெய்யானால் அந்தப் பாரானில் தான் கேதார் (Kader காதர்) பிறந்தார் என்பதுவும் ஒப்புக் கொள்ளப்படுமானால் அந்தக் கேதார் தான் அரபுகளின் மூலவர் எனக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ "ஷரஹில் மவாஹிபு" எனும் கிரந்தத்தில்

பெருமானார் அவர்களின் ஹிஜரத் (மதீனாப் பிரயாணம்) பெருமானார் பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளிற்கு முன் இறைவனால் திட்டமிடப்பட்டதாகும். அதாவது மக்காவில் இருந்து மதீனாவிற்குச் சென்ற நாயகம் (ஸல்) அவர்களை மதீனா வாசிகள் அனைவரும் தங்கள் தங்கள் வீடுகளில் தங்கும்படி அழைப்பு விடுத்த வண்ணம் இருந்தனர்.

பெருமானாரோ தனது ஒட்டகை எங்கு போய்ப் படுத்துக்கொள்ளுமோ அதுவே எனது தங்குமிடம் எனக் கூறினார்கள்.

இதன்படி அவர்களது ஒட்டகம் ஹஜரத் அய்யூப்(ரலி) அவர்களது இல்லத்தின் முன்னால் போய் படுத்துக்கொண்டது.

---

★ ஷரஹில் மவாஹிபு என்னும் கிரந்தம் யாரால் எப்பொழுது இயற்றப்பட்டது என்பது திட்டமாக என்னால் கூற முடியாதுள்ளது.
ஆனால் ஷரஹில் மவாஹிபு எனும் கிரந்தத்தில் உள்ள இச் செய்தி இப்னு இஷ்ஹாக் அவர்களின் பதிவுகளிலும்,
நப்ஹாதுல் - இத்திரிய்யா - பிஷர்ஹில் வித்ரியா என்ற கிதாபிலும் பதிவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது கண்ட பெருமானார் அவர்கள் இன்ஷா அல்லாஹ் இது தான் நான் தங்கும் இடம் என அறிவித்தார்கள்.

பெருமானாரின் பிறந்த பதியாகிய மக்காவிற்குப் பக்கத்தில் எத்தனையோ நகரங்கள் இருக்க பெருமானாரின் நபித்துவத்திற்கு முன்னால் வாணிபத்திற்காகச் சென்ற பஸரா போன்ற நகரங்கள் இருக்க குறைசியர்களின் கொடுமைக்கு அஞ்சி நாட்டை விட்டோடிய முஸ்லிங்களுக்கு அபயமளித்த அபிஸீனியா போன்ற நாடுகள் இருக்க பெருமானார் அவர்கள் ஏன் மதீனாவைத் தெரிவு செய்தார்கள்.

ஏன் எனில் பெருமானார் பிறப்பதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே இது இறைவனால் திட்டமிடப்பட்ட ஒரு செயலாகும்.

**இதன் விபரம் வருமாறு:**

மதீனாவில் அபூ ஐய்யூபு (ரலி) அவர்களின் ஆதிக்கத்தில் இருந்த இந்த வீடானது பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு ஆயிரம் வருடங்கள் முன்பே கப்பஃ என்ற அரசனால் கட்டப்பட்டதாகும்.

கப்பஃ என்ற மன்னன் ஒரு லட்சத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பதினாயிரம் குதிரை வீரர்களையும் ஒரு லட்சத்து பதிமூவாயிரம் சாதாரண போர் வீரர்களையும் அழைத்துக்கொண்டு அசுவமேத யாகம் செய்வதற்காகப் புறப்பட்டு மக்காவைத் தரிசித்து பின் அங்கிருந்து மதீனா வந்தடைந்து அங்கு சில காலம் தங்கியிருக்கும் பொழுது தனது வீரர்களில் சில திறமைசாலிகளை அழைத்து நானூறு வீடுகள் அமைக்குமாறும், மேலும் ஒரு வீடு அந்த வீடுகளை விட வித்தியாசமான அமைப்பிலும் அமைக்குமாறும் கட்டளையிட்டான்.

அவ்வாறே வீடுகள் கட்டப்பட்டதும் அதில் குடியிருக்க பக்கத்து நாடுகளில் இருந்து நானூறு பெண்களை அழைத்து வந்து தனது போர் வீரர்களில் திறமையான நானூறு வீரர்களைத் தெரிந்து அவர்களுக்குத் திருமணம் செய்வித்து அவ்வீடுகளில் குடியமரச் செய்து "இங்கே ஒருவர் வருவார் அவர் வரும்வரை காத்திருங்கள் அவர் எப்பொழுது வருவார் என்பது எனக்குத் தெரியாது"

ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் ஆகலாம் வரப் போகும் அவருக்குரியதே இந்தத் தனி வீடு அவர் வரும் வரை யார் உயிரோடு இருப்பீர்களோ அவர்கள் பாக்கிய சாலிகள். உங்களில் ஒவ்வொருவரும் தங்களின் சந்ததி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினருக்கு எனது இந்தச் செய்தியை எத்தி வைப்பீர்களாக! வருகின்ற அவருக்கு நீங்களும் உங்கள் சந்ததியினரும் எல்லா வகையிலும் உதவுவீர்களாக!

என்று கூறியதோடு அந்த நானூறு பேர்களில் ஒருவரைத் தலைவராகத் தெரிந்து குறிப்பிட்ட வீட்டையும் அவரிடம் ஒப்படைத்து அவ்வீட்டைப் பாதுகாத்து வருவீராக என்றும் கூறினார். அதன் பின்னர் துப்பஃ மன்னன் தன் கைப்பட ஒரு நிருபம் எழுதி அதனைச் சிறு பேழையில் இட்டு அதற்கு முத்திரையிட்டு அதைத் தலைவரிடம் ஒப்படைத்துவிட்டு துப்பஃ மன்னன் இந்துஸ்தானம் சென்று காலமாகிவிட்டார்

மன்னன் காலமாகி ஆயிரம் ஆண்டுகளின் பின்னர் அந்த நிருபம் ஒருவர் பின் ஒருவராகக் கைமாறி அய்யூபு (றலி) அவர்கள் வசம் வந்து சேர்ந்தது. இக் காலகட்டத்தில் தான் பெருமானார் அவர்கள் மக்காவில் இஸ்லாமியப் போதனை செய்து கொண்டிருந்தார்கள் இதனைக் கேள்வியுற்று நிருபத்தோடு ஐய்யூப் அவர்கள் பெருமானாரைச் சந்திககச் சென்றார்கள் (சில குறிப்புக்களில் ஐய்யூப் என்பதற்குப் பதிலாக அபூவலைலா எனக் குறிக்கப்பட்டுள்ளது) அங்கு பெருமானார் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைக்குச் சென்றதும் நீர் அபூ ஐய்யூபல்லவா? என்று கேட்டார்கள்.

முன்பின் தெரியாத அவரைப் பார்த்து பெருமானார் இப்படிக் கேட்டதும் ஐய்யூப் ஆச்சரியம் அடைந்தவராக ஆம் என்றார்.

உடனே பெருமானார் அவர்கள் உன்னிடம் துப்பஃ மன்னன் எனக்குத் தந்த நிருபம் ஒன்று உண்டல்லவா? என்று கேட்டார்கள். உடனே ஆம் எனக்கூறி நிருபத்தைக் கொடுத் நிருபத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. தார்

''அஹமது'' என்று சொல்லக்கூடியவர் சகல ஜீவராசிகளையும் படைத்தவனாகிய அல்லாஹ்வின் தூதர் என்று நான் சாட்சியம் கூறுகின்றேன் என் வாழ் நாள் அவர் வரும் வரை நீடிக்குமானால் நான் அவருக்குப் பயனுள்ள அமைச்சராகவும் உதவியாளனாகிய சித்தப்பனின் மகனாகவும் இருப்பேன் என எழுதப்பட்டிருந்தது.

இச் சம்பவத்தை கொண்டுதான் பெருமானாரின் மதீனப் பயணம் ஆயிரம் வருடங்களுக்கு முன் இறைவனால் திட்டமிடப் பட்டது எனக் கொள்ளப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மீன்சினை விதையுள்
ஆலவிருட்சம்,
ஆமினா அடியில்
ஞாலவிருட்சம்''

ஆ!
அருமை, அற்புதம்,
எத்தனை அழகு
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக்கவிதை

ஆ!
அருமை அற்புதம்,
எத்தனை அழகு.

இந் நூலின் கடைசிப் பக்கம்,
வேறு ஒரு நூலின் முதற்பக்கம்.

புலவர் மருதூர் - ஏ - மஜீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொட்டுக்கள்

"மத்திய கிழக்கில் இருந்து
மட்டக்களப்பு வரை"
(ஆய்வியல்)

"பனித்துளி பட்டுக்
கருகிய மொட்டு"
(தமிழியல்)

"கண் சிமிட்டிய
நட்சத்திரங்கள்"
(அறிவியல்)

"பன்னீர் கூடதலும்
சந்தனப் போர்வையும்"
(தமிழியல்)

புலவர் மருதூர் - ஏ - மஜீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் ஆக்கங்கள்

1. பன்னீர் வாசம் பரவுகிறது
(சிறுகதை)

2. மறக்க முடியாத என்
இலக்கிய நினைவுகள்
(கட்டுரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org